உ

சிவமயம்.

# வேணுவனபுராணம்

காந்திமதியம்மை பிள்ளைத் தமிழ்

நெல்லைவருக்கக்கோவை

ஆகிய மூன்றும்,

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

## மு. ரா. அருணசலக்கவிராயர்

எழுதிய

உரைக் குறிப்பும்.

சுவாமிநெல்லையப்பர் கோவில்

தருமகர்த்தர்களாகிய

திருநெல்வேலி

ஸ்ரீமத் A. V.

## இராமசாமிபிள்ளையவர்கள்

திருநெல்வேலிப் பேட்டை

ஸ்ரீமத் வெ. மு.

## சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஆகிய

இருவர் பொருளுதவியால்

மதுரை

விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றன.

1914

விலை — அணா 6.

உ

சிவமயம்.

# முகவுரை.

வேதம் ஆகமம் புராணம் ஸ்மிருதி முதலிய நூல்களாற் பரம்பொருளெனச் சொல்லப்பட்ட சிவபெருமான் சீவகோடிகள் உய்யும் பொருட்டு, அருவுருவத்திருமேனி கொண்டெழுந்தருளியிருக்கும் சிவக்ஷேத்திரம் பலவற்றுளொன்றாகிய திருநெல்வேலி யென்னும் க்ஷேத்திரம் செந்தமிழ்ப் பாண்டிவள நாட்டிற் சிறந்து விளங்கும் பொதிகைமலைச் சார்பிலுள்ளது; இது, ஆயிரக்கணக்கான பல வருடங்களுக்கு முன் வேணு (மூங்கில்) வனமாக இருந்தது. அக்காலம் செப்பறைக்கு அடுத்த மணலூரை இராசதானியாகக் கொண்டு அரசாண்டுவந்த முழுதுகண்ட ராமபாண்டிய ராசன் அரண்மனைக்குப் பால் சுமந்து கொண்டுவரும் முழுதுகண்டராமக் கோனார் பூருவ புண்ணிய முதிர்ச்சியை வெளிப்படுத்தும் பொருட்டு அநாதி முத்த சித்துருவாகிய அப் பரம்பொருள் ஒரு மூங்கிலடியில் சிவலிங்கமாயெழுந்தருளி அவ்வரசனுக்குத் தரிசனந்தந்து அவனாற் செய்வித்த திருக்கோயில் கொண்டருளிப் பின்னர் அனவரததானநாதராய் அறுபதினாயிர வருடம் ஏக சக்கிராதிபதியாயிருந்து அரசாட்சி செய்யப்பெற்ற மகாராசதானியுமானது.

இஃதன்றி, அகத்திய முனிவர் முதலிய அநேக மகருஷிகளாற் பூசிக்கப்பெற்ற மகத்துவ மிகுந்து சிறந்தோங்கிய தென்பது அறிவுடையார் பலருமறிந்த விஷயமே. இவ்வருமைப் பிரபல க்ஷேத்திரமாகிய வேணுவன வரலாறு முழுவதும் முற்காலத்தில் மற்றைத் தலபுராணங்களின் சரிதம் போலவே சம்ஸ்கிருத பாஷையிலெழுதப்பட்டிருந்தது. இதன் பெருமை தெரிந்த சிவாசாரியரும் சைவாசாரியரும் சிவனடியாரும் இதைத் தமிழ் மொழியிலே ஒன்பது சருக்கமாகப் பிரித்து 454 செய்யுளாக வேணுவனபுராணமெனப் பெயரிட்டு மொழிபெயர்ப்புச்செய்து பாடுவித்தனர். பாடியவர் பெயர் முதலியவை ஒரு இடத்திலுந் தெரியவில்லை. இப்புராணம் படிப்பவர் மனத்திற் பத்திக்கனி பழுக்கச்செய்வதுடன் சொற்சுவையும் பொருட்சுவையும் சிலேடை கற்பனையாகிய பல நயங்களும் நிறையப் பெற்றிருக்கின்றது.

இதுபோலவே திருநெல்வேலித் தலபுராணமென்பதொன்று இப்புராணசரிதகாலத்துக்குப் பிற்பட்ட காலத்தில் அநவரததானநாதர்

அன்பர் பலர் பொருட்டுச் செய்தருளிய அற்புதமாகிய பற்பல திரு விளையாடல்களை மிகவும் விரித்துக்கூறி வெளிவந்துள்ளது. அங்ஙனம் வெளிவந்தது முழுதுகண்டராமபாண்டியராசனால் வேணுவனம் நகரமாகிய பிற்காலத்திலென்பது திருநெல்வேலித் தலபுராணம் என்னும் பெயரினாலேயே நன்கு விளங்கும். இது நாற்பத்து நான்கு வருடங்கட்கு முன்னரே அச்சிடப்பெற்றிருக்கின்றது. ஆயினும் புராதனமாயுள்ளபுராணம் வேணுவன புராணமாதலால் இதை எல்லாரும் எளிதிலே படித்துப் புருஷார்த்தங்களையடைய வேண்டுமென்றெண்ணித் திருநெல்வேலியில அரியபெரிய நூல்களை ஆராய்ச்சி செய்தலே தங்களுக்கோராணிகலமாகக் கொண்டிருக்கிற ஸ்ரீமாந் கவிராச நெல்லையப்ப பிள்ளையவர்களும், ஸ்ரீமாந். எஸ். பால்வண்ண முதலியாரவர்களும் இப் புராணத்துடன் தோத்திரஞ் செய்வார்க்கு இன்றியமையாததாகிய காந்திமதியம்மை பிள்ளைத் தமிழையும், இன்பமநுபவிப்பார்க்கு மகிழ்ச்சியைச் செய்யும் நெல்லை வருக்கக் கோவையையும் பலபிரதிகளை யொருங்கு சேர்த்துப் பரிசோதித்துக் குறிப்பு விளக்கமெழுதுவதுடன் கோவைக்குத்துறைகளும் துறைகளின் பொருள்களும் விளங்க எழுதி அச்சிற் பதிப்பித்துத்தருக என்று என்னை யேவித் திருநெல்வேலி ஜில்லா சிவ தேவஸ்தானம் மகாகனந்தங்கிய கமிட்டியாரவர்களுக்கும், சுவாமி நெல்லையப்பர் கோயில் தருமகர்த்தர்களாயிருக்கின்ற திருநெல்வேலி ஸ்ரீமத் A. V. இராமசாமிபிள்ளையவர்கள், திருநெல்வேலிப் பேட்டை ஸ்ரீமந் வெ. மு. சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள் ஆகிய இருவர்களுக்கும் இவ்விஷயங்களைத் தெரியச்செய்தவுடன் இவ்விரண்டு தருமகர்த்தர்களும் சிவநேசச் செல்வமும் சிவபுண்ணியத் தெளிவும் நல்லொழுக்க நற்குண நற்செய்கைகளும் பரோபகார தரும சிந்தையும் உடையவர்களாதலால் மிகுந்த ஊக்கத்தோடு அச்சிற் பதிப்பிக்கும் செலவுக்குத் தேவஸ்தானத்திலிருந்து வேண்டிய பொருளுதவியும் பிறவுதவியும் செய்தார்கள். அவர்களுதவியைக் கொண்டு மேற்குறித்தவாறு செய்யவேண்டிய வேலைகளெல்லாம் என்னாலே தெரிந்தவரை ஒழுங்குபெறச் செய்து அச்சிற்பதிப்பித்து வெளிப்படுத்தினேன். அறிவுடையோர் அங்கீகரிப்பாராக.

சுபம்! சுபம் !சுபம். இங்ஙனம்

மதுரைத் தமிழ்ச் சங்கவித்துவான்

மு. ரா. அருணாசலக் கவிராயர்.

சிவமயம்.

# வேணுவன புராணம்.

## * பாயிரம்.

### கடவுள் வாழ்த்து,

### நெல்வேலி நாதர்.

பொன்கொண்ட மலரயனு நெடுமாலு மமரர்களும் புகழ்ந்துபோற்ற
மின்கொண்டமருங்குமையாளிடம்பயிலநடம்புரியும்விமலமேலோன்
கொன்கொண்டவைங்கரனுமறுமுகனும்புடைசூழுங்கோமானெம்மான்
மன்கொண்ட நெல்வேலி நாதனிரு பாதமலர் மனத்துள் வைப்பாம்.

### காந்திமதி.

ஏர்கொண்ட நெல்லைநக ரிடங்கொண்டு வலங்கொண்டங் கிறைஞ்சு வோர்கள்
சீர்கொண்ட தன்னுருவும்பரனுருவும் விளங்கவருள் செய்து நாளும்
வேர்கொண்டு வளர்ந்தோங்கும் வேயீன்றமுத்தைமிகவிரும்பிப்பூணும்
வார்கொண்ட களபமுலை வடிவுடையநாயகிதாள் வணங்கிவாழ்வாம்.

### பொல்லாத விநாயகர்.

கல்லாருங் கற்றாருங் கைக்கொண்டு மனமகிழக் கவிக்குக் குற்றம்
புல்லாமற் சுவைமருவ நவைமருவு மிடையூறு பொடிய நாளு
மெல்லாரும் புகழ்பெருமானிடந்திகழு மொருசிறுமானினிதாயீன்ற
பொல்லாத கடக்களிற்றி னல்லமல ரடியிணைகள் போற்றி செய்வாம்.

### சண்முகக் கடவுள்.

தெம்முகமாய் வருமசுரர் குலமாளத் தேவர்குலஞ் சேர வாழ
வெம்முகமும் புகழோங்க வறமோங்க வகமோங்க விடர்க ணீங்கத்

---

* பாயிரம் என்பது-தெய்வவணக்கமும் செயப்படுபொருளுங்கூறுவது.

(௨) தன்னுருவு - சத்தி சொரூபம்.

தம்முகமா மகந்தையினு லிகந்துதிசை நான்முகனுர் தனைந்துகாணு
வைம்முகனுரிடத்துதித்த வறுமுகனுரிருசரண மகத்துள்வைப்பாம்.

## திருநந்திதேவர்.

மனகவலை யறவடியார் பதிபசுபா சந்தெரிந்து மன்னி வாழ
வனகமிகு மருள்விளக்கி யானந்தப் பரவையிடை யழுந்தச் செய்து
கனகவரைச் சிலையாள ரினிதுறையுங் கயிலைவரை காக்கு ஞான
தினகரனு மருணந்தி தேவனிரு பாதமலர் சிரமேற் கொள்வாம்.

## மூவர்.

வேறுபடு பரசமய விருணீங்க வன்பர்மதி விளங்கி யோங்க
மாறறவே வருஞான பானுநிகர் சம்பந்த மன்னர் தாளு
மாறணியுஞ் சிவனருளா லலைகடலிற் கன்மிதப்பாக் கப்பர் தாளு
மேறுடையோன் றடுத்தாளும்புகழ்சேர்சுந்தரர்தாளுமிறைஞ்சிவாழ்வாம்.

## மாணிக்கவாசக சுவாமிகள்.

அரித்தானை யடியர்பவ மழித்தானை யுரித்தானை யடர்ந்த வேளை
யெரித்தானைப் புரமெரியச் சிரித்தானை நரித்தானை யெவையு மான
பரித்தானை தனியுலகம் பரித்தாளும் பாண்டியற்குப் பாலித்தானைத்
தரித்தான மனத்தினரா மாணிக்க வாசகர்தா டலைமேற்கொள்வாம்.

## சண்டேசுர நாயனுர் முதலிய சிவனடியார்.

கைம்மழுவால் வருதாதை காலிரண்டுந் துணித்துமலர்க் கரங்கடம்மி
லம்மழுமான் றரித்தவர்தா ளடைந்தபுகழ்த் தண்டீசராதி யான
செம்மைநெறி யளப்பரிய சிவனடியாரடிமலர்கள் சிரமேற்கொண்டிங்
கிம்மையினு மறுமையினு முளபயன்க டவறும லெய்தி வாழ்வாம்.

## ஆதிசைவர்.

மூண்டபெருந்திருவருளாலளப்பரிய சிவாகமங்கண்முழுதுமோர்ந்து
பூண்டபெருந் தொண்டினுடன் றமிழ்த்தெய்வப் பாண்டியனுர் புகழ்ந்து நின்று
வேண்டவளர்ந் தருநெல்லை நாதர்திரு மேனிதனை வியந்து நாளுந்
தீண்டியருச்சனைபுரியுஞ்சிவமறையோர் சரணமலர்சிந்தைசெய்வாம்.

---

(ரு) மனகவலை - எதுகை நோக்கி ஒற்றிரட்டிக்கவில்லை. (எ) அடியர் பவமழித்து அரித்தானை யெனக் கூட்டுக.

புங்கவநீ டமரரெலாம் பொழியவழ கியகோலச்
செங்கதிரி னெதிர்தோன்றித் திருக்காட்சி கொடுத்தருளி. (௧௮)

உறுவரங்கள் கொள்கவென வுரைத்தருள மின்னனைய
சிறுமருங்கின் மடந்தையா ளிருபதத்திற் கருங்குழல்வா
ழறுபதங்க ளெழுந்தார்ப்ப விறைஞ்சியெழுந் தருள்கூர்ந்து
மறுகுகடற் புவியிலுளோர் வருந்தாமை நினைந்தருளி. (௧௯)

பையரவப் பணியினவிப் பதியினில்யா னறமென்றுஞ்
செய்யவருள் செயலோடு திருவடிக்குச் செயுந்தீங்கு
மையலற வொழிந்துயர்ந்த மாதவமா கவுமற்றே
ருப்பநீ செயவேண்டு முதவியென வுற்றிரந்தாள். (௨௦)

என்றுவரம் பலவேண்ட வெந்தையுமப் படியென்று
நின்றுசிறந் திருநாழி நெல்லருளா லளித்தருளி
நன்றிதரு தென்காஞ்சி நகருறைவோர் செய்நவைகள்
சென்றுகதி விலக்காமற் செய்தவமா வருள்செய்தான். (௨௧)

அன்னைமுன மகிழ்ந்தரனு ரளித்தவரத் தினிலுதவுஞ்
சென்னறிருந் திருநாழிச் செல்வங்கொண் டுலகெங்குங்
கொன்னுலவு திருக்காமக் கோட்டத்தின் பொலிவுபெற
மன்னியவெண் ணான்கறமும் வளர்த்தருளுந் திறமுற்றாள். (௨௨)

ஆதுலர்சா லைகளன்பி னமைத்துமகப் பெறுவித்து
மோதுவார்க் குணவளித்து முவந்தமக வளர்த்தெடுத்துஞ்
சீதநீர்ப் பந்தர்மடந் தீன்பண்டங் கண்ணாடி
மாதர்பாற் பெறுபோக மகப்பால்கண் மருந்தளித்தும். (௨௩)

அறச்சோறு தலைக்கெண்ணெ யறுசமயத் தோர்க்குணவு
சிறைச்சோறு வுரிஞ்சுதறி திருக்குளங்காச் செறிவித்தும்
பிறர்க்கூறு காத்தலறப் பிணஞ்சுடுவித் திடல்புரிந்து
முறற்கான வறவைத்தூ ரியம்விலங்கிற் குணவளித்தும். (௨௪)

---

(௧௮) புங்கவம்-உயர்ச்சி; மேலுமது. (௨௦) பணியின-பணியை யுடையாய். (௨௧) தவமா-தவமாக. (௨௨) காமக்கோட்டம்-உமாதேவி யிருக்கும் பீடங்களினொன்று. (௨௪) அறச்சோறு-ஆதரவில்லாதவருக்குக் கொடுக்குஞ் சோறு. அறப்பிணம்-அநாதிப்பிணம். அறவைத்தூரியம்-ஏழைகளுக்கு வஸ்திரங்கொடுத்தல்.

பேறிசைகா தோலவரும் பிச்சைமருத் துவர்வண்ணூர்
மாறகலா நாவிதர்மெய் நோய்மருந்தட் டேணளித்துங்
கூறுவிலை மிகக்கொடுத்துக் கொலைக்களக்க ணுயிர்விடுத்து
மேறுவிடுத் தும்பசுவுக் கிசைந்தவா யுறைகொடுத்தும். (உ௫)

எண்ணியவெண் ணான்கறமு மிவ்வகையாங் குமைபுரிநாட்
பண்ணமர்நல் லறங்கள்பரி பாலனஞ்செய் தருள்புரிவான்
றெண்ணிலவும் புனலுமணி செஞ்சடா முடியாரு
மண்ணுலகாண் டருள்புரியு மன்னவரா யமர்ந்தருளி. (உ௬)

அந்தமிலா முடிவேந்த ரடிதாழ்ந்து தினமேத்தச்
சந்தம்விளங் கனவரத தானமெனும் பெயர்புனைந்து
கொந்துகுழற் றிருக்காமக் கோட்டியருட் பிராட்டியுமை
சிந்தைமகிழ்ந் திடநீடுந் தெய்வவா யிரவருடம். (உ௭)

அக்கெலா மணிந்தெழுநஞ் சயின்றருள்செய் யருளாள
ரிக்குலா மொழிபங்க ரெண்மருவு மெவர்களுக்கு
மெய்க்கெலா மணிதுகில்பொன் வேண்டுவவேண் டுவவளித்துந்
திக்கெலாம் புகழ்செய்யத் திருந்துலகாண் டருள்புரிந்தார். (உ௮)

இடையில்பெருந் தனக்குடமா தெண்ணான்கு நல்லறமு
மடைவுறவே புரிந்தருள வருங்கனக வரைக்கரத்தார்
தடையறநின் றனவரத தானம்வழங் குவதென்றாற்
செடிபொழில்சூழ் நெல்வேலிச் செல்வநவிற் றிடலெளிதோ. (உ௯)

குன்றனைய பெருந்தவத்திர் குவலயம்வாழ்ந் திடவன்பா
லன்றுலகாண் டிமைக்குமகிழ் வளித்தருளும் பெருமானு
நின்றுமினி தனவரத தானத்தி னின்புற்றோர்
சென்றுபணிந் தவர்க்கன்றோ சித்திமுத்தி யின்பமெலாம். (௩0)

அகமகிழ்வண் டந்தவர்கட் கரந்தையற வெந்நாளு
மிகபரங்க ளளித்தருள்வ தித்தலமே யல்லாது
புகலவொரு தலமுளதோ புண்ணியரே யெனமொழிந்தான்
சகலபுரா ணக்கருத்துந் தன்கருத்துட் கொண்டிடையோன். (௩௧)

---

(உ௫) ஏறுவிடுத்தல்-இடபத்துக்கு ஆபத்துவந்த இடத்து நீக்குதல். (உ௬) புரிவான்-புரியும்பொருட்டு. (உ௯) செடி - ஒளி. (௩௧) அண்டு-நெருங்குகின்ற.

உரைத்திடுமிச் சருக்கமுவந் துரைத்தவர்கேட் டவர்செந்தா
மரைத்தவிசி லயன்முதலோர் வணங்கவிணங் கரியசிவ
புரத்துறைவ ரினிவெள்ளிப் பொருப்பர்விருப் புறுமழுமான்
கரத்தாருட் குறுமுனிவன் கதிமலயத் துறலுரைப்பாம். (௫௨)

முதலாவது: அறம்வளர்த்த சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௪௮.

---

## இரண்டாவது:

# அகத்தியர் வரவுச் சருக்கம்.

[:o:]

தொலையாவருள் பெறுமாதவர் துகடீர்முனி வரனே
யலைசூழ்புவி நலமேவுற வருளார்குறு முனிவன்
மலையாசல மிசைகாதலின் வருகாதையை யருளா
னுலைபரவகை யருள்வாயென வுயர்சூத னுரைப்பான். (௧)

கயிலாபுரி யுறைவார்மறை யறைவார்கலை கலைவார்
சயிலாதிபன் மகளாமுமை தனைமாமண முறவே
யியலார்தரு வுளமேவிய விமவானணை பொழுதி
னயராமண மதுநேர்தொழ வவண்மேவின ரெவரும். (௨)

அடலாரண னுடனாரண னதிமாமத தவளத்
தடவாரண னிமையோர்நொடி தனின்மேவினர் கதிரோ
னுடனேயுடு பதிதாரகை யுடன்மேவினர் முனிவோர்
திடமார்தரு சிவயோகிக டிரளாய்மரு வினரால். (௩)

பூசற்புரி புலன்வென்றருள் புகழேழிரு டிகணீள்
வாசக்குழ லெழுமாதரும் வகைசேர்வுடை நாக
ரீசத்திர ளானோர்பதி னொருபேரு மிடஞ்சூ
ழாசைக்கிறை யானோர்களு மனைவோரு மடைந்தார். (௪)

---

(௧) காதை - கதை.

மால்வாட நெருங்கிப்புகழ் மண்ணோரு மணைந்தார்
நால்வேதமு மாறங்கமு நாடும்புவி யேழு
மேல்வேலைக ளேழுந்திசை யெட்டுங்கிரி யெட்டு
மேல்வாழ்வன சுரர்தாருவு முருவாய்மரு வினவால். (௫)

மாநாகமொ ரெட்டுங்கட மாநாகமொ ரெட்டுந்
தானேகி யவண்டுன்றின தரையானது புகலில்
வானோர்களு மேனோர்களு மற்றுள்ளவு முறலா
லானதிடர் மிகவுற்றது வதிபார மடைந்தே. (௬)

தென்பால துயர்ந்துத்தர திசைதாழ்வு மொருந்திக்
கொன்பாவிய படியிற்குறை கொள்ளும்பொருள் கொள்ளும்
வன்பாரிய துலைகோலெனும் வகைநின்றது விதனை
யன்பானுல குண்டான்முத லண்டாதிபர் கண்டார். (௭)

அத்தன்மைய ரெத்தன்மையு மறியுஞ்சிவ பானுக்
கித்தன்மை யுரைப்போமென வெல்லோர்களு மெய்திச்
சித்தன்பர சுத்தன்சத சித்தெங்கணு நிறையு
முத்தன்கழல் சென்னிக்கொடு முன்னின்றிது சொல்வார். (அ)

அரனேகடல் விடமுண்டில கலையாவகை யருள்செய்
பரனேயிரு பாற்பட்டது பாரென்று பகர்ந்தா
ரரனார்புகல் ச்சொல்லி னறிந்தோரென வங்கண்
முரணாழ்வுற வருளார்குறு முனிதன்னை நினைந்தார். (௯)

அந்திப்பிறை யணிவோனுய ரருளாணை யறிந்தே
வந்தத்தவ னந்தக்கணம் வந்தித்தய னின்றா
னந்தப்புர நகைசெய்தரு ணடநாயக னுடனே
சந்தித்திடு முனிமுன்னொரு தனிநன்னகை செய்தான். (௧௦)

அண்டர்க்கிறை தருமங்கை யடர்துன்னொளி மேல்கீழ்
மண்டச்சடை மௌலிக்குறை மதிபூரண மதிபோ
லெண்டிக்கும் விளங்கிற்றெழு மிருண்மாமுகி லெனநீள்
கண்டக்கறை காணாவகை கழிவுற்றது பெரிதும். (௧௧)

---

(௫.) மால்வாட - மயக்கங்கெட. (௬.) உற்றது - சிறுபான்மைகெடாதுநின்ற குற்றியலுகரம்; மேலுமதுவே (௭.) கொன் - பெருமை. படி - நிறைகல், பாரிய - பெரிய. (௯) அறிந்தோரென-அறிந்தவர்போல. முரணாழ்வுற-மாறுபாடு அழிய. (௧௧) அடர்துன் (இருபெயரொட்டு) நெருங்கிய

செம்பொன்மணி மாளிகைகள் சூளிகை செறிந்தே
யும்பர்புகழ் செய்யபுலி யூரினை யடைந்தான். (௩௯)

செம்பொன்மணி மன்றிலகு தில்லையினி லேயோர்
கொம்பினிட மாயரன் குனிக்குமொரு தாளைத்
தன்பரிவின் முன்றொழுது தன்செயன் மறந்தே
கம்பித மடைந்துபுனல் கண்பொழிய நின்றான். (௪0)

ஆவின்மிசை யோன்மகிழு வன்பொடு புகழ்ந்தே
மேவுமருள் கொண்டுகளி கொண்டிவிடை கொண்டு
வாவியகி லாரமணி தூவியலை தாவிக்
காவணி குலாவிவரு காவிரி யடைந்தான். (௪௧)

அந்நதியின் மூழ்கியிடை மாமரு தடைந்தே
முன்னவன தர்ச்சனை முடித்திற வகற்றிப்
பன்னிய குடந்தையின் மடந்தையொரு பாக
மன்னனொடு யஞ்சநதி வாணனை வணங்கி. (௪௨)

ஙங்கள்கம லாலயமு மெய்தியலர் கொய்தே
யங்கணம ரங்கணார்த மங்கழல் பணிந்து
பொங்குபுளி னங்கள்புளி னங்கள்பொலி வெய்தி
யொங்குபுகழ் வேதவன முற்றினி திறைஞ்சி. (௪௩)

இக்கடைய நின்றுபுகழ் தென்மதுரை மேவுஞ்
சொக்கரிரு தாண்மலர் துதித்தினி திறைஞ்சி
மிக்கதவ வெற்பென வியப்பவரு வோன்மா
மைக்குலவு சண்பக வனத்தினி லணைந்தான். (௪௪)

தன்னிகரி லின்பமருள் சண்பக வனத்திற்
றுன்னியெனை யாளுடைய சோதிதனை யர்ச்சித்
துன்னரிய பூமிசம மொத்தினிமை பெய்த
மன்னுமல யக்கிரி மருங்கினி லணைந்தான். (௪௫)

விண்பயிலு மாமலர் வேங்கைபனை தாங்கு
சண்பக மலர்க்கடரு தாதுகள் படிந்தே

---

(௪0) அன்பரிவு மெல்லின வெதுகை. (௪௨) இறவு-மரணம். (௪௩) புளினங்கள்-மணற்குன்றுகள். ஒங்கு - ஓங்கென்பதின்விகாரம்.

யெண்பொலியு மக்கிரியோர் பொற்கிரிய தென்னக்
கண்பயில நின்றுலவு காட்சிதரு மென்றும். (சசா)

மாமுகில் பணிந்துவலம் வந்துநனி துஞ்சக்
காமலையு மம்மலைய கத்தருவி வீழ்த
னேமிபுகழ் மாமுனிவ னேர்வருதல் கண்டே
பூமலர் விழிப்புனல் பொழிந்திடுதல் போலும். (சஎ)

ஓதுமொரு பாலினுய ரொண்குலைக ளாகிச்
சோதிபெறு செம்மணிக டேய்வெயி லெறித்த
லாதவர்கள் வந்துவள ரக்கிரி கடந்து
போதவச மற்றவ ணிருந்துறைவ போலும். (சஅ)

தேயமலர் பாண்டிவள நாடது செழிக்க
நேயமொடு மைம்முகின் முழங்குதொறு நேரே
யாயகளி மும்மதமு மாறுநிக ராகப்
பாயுமொரு கைம்முகில்கள் பாய்ந்தெதிர் முழங்கும். (சகூ)

பீடுதிகழ் பேடைமயில் பெட்புறல்செய் தோகை
மாடுமலர் வேங்கைநிழன் மண்ணினட மாட
லாடகச பைக்கணுமை யன்புசெய நம்ப
ஞடக நடித்திடு நலத்தினை நிகர்க்கும். (ருo)

மாமலர்கொண் மௌவலொடு மல்லிகையு மற்றுந்
தேமலர் மலர்க்கொடிகள் சென்றன படர்ந்தே
காமர்பெற நின்றிலகு கற்பக மரங்க
டாமலியு மற்றுள தருக்களுநெ ருங்கும். (ருக)

புங்கமிசை வந்துலவு பொங்கரி னடைந்தே
யங்கிசைய வண்பறவை யாலுமொரு பாலி
னெங்குமிரு கங்களள வின்றியவை துன்றித்
தங்களிகல் விட்டணிகள் சாருமொரு பாலின். (ருஉ)

மூவுலகு மேன்மைபெறு மும்மையின் விளங்கு
மாவலுட னேதொழு மவர்க்கருள் கொடுக்குந்
தேவரொடு தானவர்கள் சித்தரிசை யாழோர்
மேவுபுகழ் விஞ்சையர்கண் மேவுமிட மாகும். (ருங)

கைம்மலையை முன்மலை கரத்தினன் விருப்பா
யிம்மலைய வண்மையினை யார்புகழ வல்லா
ரம்மலையி லெம்முனிவ னூர்வுபெற வேறி
யிம்மலை யடிக்கயிலை யேயென மகிழ்ந்தான். (ருச)

அச்சயில வுச்சியினி லௌவியமி றெய்வ
தச்சனியல் செய்பருண சாலையியல் கண்டு
மெச்சிமுனி வன்றனது தேவியுடன் மேவி
யிச்சயில மென்றுந மிருப்பென விருந்தான். (ருரு)

அத்தவன ருந்துணைவி யாகிய வுலோபா
முத்திரை பதச்சுவடு மொய்த்தவண் விளங்கன்
மெத்துமிதழ் மொய்த்தவர விந்தமல ரந்த
மத்தமலை யுச்சியின் மலர்ந்தனைய மாதோ. (ருசு)

அங்கரன தேவலி னணைந்துமரு வுந்தென்
கங்கையினை மூழ்கியுயிர் காமர்கதி மேவ
மங்குறவழ் துங்கமல யக்கிரி தொடுத்துப்
பொங்குவரி நீரொடு புணர்ந்திட விடுத்தான். (ருஎ)

கொற்றமுடை யிர்குலவு கும்பமுனி வன்சீ
ருற்றமல யக்கிரியி லுற்றகதை யீதென்
றற்றமில் கலைக்கட லடைந்தமை மொழிந்தே
மற்றமுனி வேய்வனனை வந்திகதை சொல்வாம். (ருஅ)

இரண்டாவது அகத்தியர் வரவுச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். கூசு.

---

(ருச) முன் மலை-முற்காலத்திலே பொருகின்ற. மலைய - மலையிலுள்ள. எம்முனிவன்-எங்களுடைய அகத்தியமுனிவன். அடிக்கயிலை-பூருவ கயிலாயம். (ருரு) பருணசாலை - இலையால் மேய்ந்த சாலை. (ருசு) மத்தம் - களிப்பு. (ருஎ) தென்கங்கை-தாமிரபன்னிநதி. (ருஅ) கலைக்கடல் - கல்விச் சமுத்திரமாகிய அகத்தியமுனிவர். வந்தி - வந்திக்கின்ற.

## மூன்றாவது:

# அகத்தியரருச்சனைச் சருக்கம்.

—:o:—

கைக்கரா சலமு ரிந்த கடவுளே கடவு ளென்று
தொக்கபே ருணர்வுமிக்க சூதனே பொதியச் செல்வன்
றக்கவேய் வனத்து நாதன் றாளருச் சித்த கீர்தை
யிக்கணீ யருளென் றுய்ந்தோ ரிசைத்திடச் சூதன் சொல்வான். (க)

பொருவின்மா தவத்தி னோங்கும் புண்ணிய முனிவர் கேண்மின்
குருவரா பரனுஞ் செல்வக் குறுமுனி பொதிய வெற்பின்
மருவிநே ரிருந்த போதின் வணங்கியங் கொருவி ஞநீண்
முருகுசேர் குழலு லோபா முத்திரை மொழிய லுற்றாள். (உ)

அருந்தவத் தலைவா காசி யாதிநற் றலங்கள் விட்டிங்
கிருந்திடும் பரிசு சொல்வா யென்றன ளென்ற போதிற்
பெருந்தவர்க் கிறையுங் கேளாய் பிறைநறு நுதலே யென்று
திருந்தவங் கிருக்குஞ் செய்கைத் திறத்தினை நவில லுற்றான். (ங)

இக்கிரி தனக்கு நேரொன் றியம்பிடிற் கயிலை யன்றி
மிக்கதோர் கிரியெங் குண்டு மெல்லிய றொழுவோர்க் கெல்லாந்
தக்கநற் கதியை நல்குஞ் சாற்றுமித் தகைமை யாலே
யிக்குல விதில்வி ருப்பங் கொண்டன மீது மன்றி. (ச)

துங்கவிக் கிரிக்குக் கீழ்பாற் சுடர்த்திரு மூல லிங்கம்
புங்கவந் தருவே யக்கண் புகழ்நக ருளதங் கெங்கோன்
மங்கலக் கோலங் காட்ட வருதுமென் றருள்பு ரிந்தா
னங்கது கொண்டு மிங்கே யமர்ந்தன மணங்கே யென்றான். (ரு)

அன்னபோ தன்ன மன்ன வருந்தவன் றேவி யன்பான்
மன்னுமென் றுணைவா ஞான மன்னவா மலய வாழ்வே
பன்னுவேய் வனவி சேடம் பகர்ந்தரு ளென்று போற்ற
முன்னவ னருள்சேர் கும்ப முனிவனு முரைக்க லுற்றான். (சு)

---

(ச) மெல்லியல் - பெண்ணே. (ரு) புங்கவம் - உயர்ந்த அழகு. அக்கண் - அவ்விடம்.

சித்திரப் பாவை யென்னத் திகழுஞ்சீர் மடந்தை நல்லா
ளித்தல விசேட முன்னுஞ் சனகரா தியரும் யாரும்
பத்திசெய் தன்பாற் கேட்ட படியியம் புதுங்கே ணல்லோர்
முத்திசேர் நற்ற வங்கண் முயல்வதற் கிடமீ தாமால். (எ)

எண்டரு மிதுதென் காஞ்சி யென்றென்றும் விளங்கு மீதிற்
பண்டரு பிலத்தி லோடும் பாடலங் கம்பை யாறென்
றுண்டதி லரனைப் பூசை யுமைபுரிந் தருளும் போதி
லண்டர்நா யகருந் தோன்றி யவள்வர மெவையு மீந்தார். (அ)

அன்றவண் முதல்வ ரின்று மவணவட் கன்ப ராகித்
துன்றிய முனிவர் தேவர் தொழத்திரு மூல நாத
ரென்றினி தமர்ந்தார் மாதே யினிமையா லியாவ ரேனுஞ்
சென்றுசே விப்பா ரீற்றிற் சிவன்முத் தர்களே யாவர். (கூ)

ஆதரத் துடனே யாயு வளவும்வேய் வனத்துள் வாழ்வோர்
மாதவப் பயனை வேதன் வழுத்திட வல்ல னேனா
னேதுமித் தலத்தில் வானோ ரோங்குதே னிறாலின் மொய்க்குங்
கோதிலீக் கணம்போன் மேவிக் குழுமுவ ரகலா தென்றும். (கய)

இக்கெனுஞ் சொல்லாய் நல்லா யெழின்மறை புகழ்ந்து போற்று
மக்கினிட் டோம யாக மமைவனத் தியற்றி னோர்கண்
மிக்கவான் செல்வ ராகி மேதினி முழுது மாண்டு
சுக்கரம் பெறுவா றந்தச் சங்கரன் பதத்தில் வாழ்வார். (கக)

அன்னிய தலத்தி லோராண் டறையுமந் திரப லன்க
ளென்னுமித் தலத்தி லோர்கா லுரைத்திடி லுண்டா மென்றுந்
தன்னிக ரில்லா தோங்குஞ் சதவுருத் திரஞ்செபித்தார்
பின்னர்வெம் பிறவி யெய்தார் பிறங்குருத் திரரே யாவர். (கஉ)

சந்தமா தவர்கண் மாபா தகத்தர்க ளியாவ ரேனு
மிந்தவேய் வனத்தி றங்கி லிருங்கதி யடைவர் தத்த
நிந்தையி னிலையி னின்றோர் நித்திய முத்தி சேர்வர்
வந்துநற் பிரம சாரி மறையினை முறையி னோதில். (கங)

---

(கய) ஆயு - வாழ்நாள். (கக) அமை - மூங்கில்; மேலுமதுவே. சுக்கரம் - பிறப்பு.

அருமறைப் பொருள்க ளெல்லா மறிவனெனல் லையினிற் பின்பு
பொருகுலக் கன்னி வேட்டுப் புணர்ந்துநற் புதல்வ ருண்டாய்
மருவுமுக் கடன்க ளீந்து வானவ னாவன் காயத்
திரியினைக் காய மூழ்கிச் செபித்தவ ரயன்ப தத்தோர். (௧௪)

பூசுரீ றடியார்க் கீந்தோர் பொருவிலா முத்தி சேர்வ
ராசில்தண் டிகைய ளித்தோ ரருஞ்சிவ லோகஞ் சார்வர்
பூசுர ரடியர் தம்பாற் பூதானஞ் சிறிது செய்யின்
மாசற வனந்த மாய வளநக ரளித்த லொக்கும். (௧௫)

அந்தணுக் கன்பு பூண்ட வந்தணர்க் கங்க ணன்பா
லுத்தம தானஞ் செய்தோ ருலவிலாக் கதியைச் சேர்வ
ரித்திறஞ் செய்து முத்தி நண்ணினோ ரெண்ணிலாதா
ரத்திறத் தரிவை யேயோ ரருங்கதை யுரைப்பக் கேட்டி. (௧௬)

நைந்துடல் வளைந்து போத நரைதிரை மிகுந்து வாயிற்
றந்தமுஞ் சேர வீழ்ந்து தளருமெய் நடுக்க லுற்றங்
குந்துதத் திருமை லாலே யுடைந்தற வயதுஞ் சென்ற
வந்தண னொருவன் யார்க்கு மரியசோ திடமும் வல்லான். (௧௭)

இங்கிவன் மிடிய னாய்நொந் திடும்பையுற் றெங்குஞ் சென்றே
யங்கண்யா சிப்பா னாகி யலங்குகம் பளமேற் கொண்டு
பொங்கிய பீறற் கந்தை புனைந்துபஞ் சாங்க மேந்தி
யங்கையாற் றண்டு மேந்தி யருஞ்சுரத் திடைய டைந்தான். (௧௮)

ஆதவ கிரணத் தாலே யங்கமங் கவன்மெ லிந்து
மாதவர் கதியைத் தேடி மனமய லுற்றாற் போலச்
சீதநன் னீழ றேடித் தியங்கிய சிந்தை யுற்றோன்
போதநன் னீழல் செய்து பொருகழை வனத்திற் புக்கான். (௧௯)

ஆங்கொரு மூங்கி னீழ லணைந்துகண் டுயின்றெ ழுந்து
நீங்கரு மிளைப்பு நீங்கி நிமலர்தா ணினைந்து போற்றி
யீங்கிது புகழ்வேய்க் கான மென்பது தெளிந்தா னங்கண்
டாங்குநீர்த் தபன முற்றுத் தக்கபுட் கரிணி சார்ந்தான். (௨௦)

---

(௧௪) பொரு - தனக்குத் தானே சமமாகிய. முக்கடன் - துறந்தவர், வலியவர், யாதொரு ஆதாரமுமில்லாமல் வந்து இறந்தவர் ஆகிய இம்மூவருக்குஞ் செய்யு முதவியாகிய நியதி. (௨௦) தபனம் - தாகம். புட்கரிணி - நாற்சதுரமாயுள்ள தடாகம்; மேலுமதுவே.

அத்தடத் திழிந்து மெள்ள வறைபுனல் பருகி யங்க
ணெய்த்திவன் செல்ல மாட்டா திருந்தன னிருந்த போதிற்
கைத்தனம் பறிக்க வேண்டிக் கனதனங் காட்டி வாட்டி
யுய்த்தவோர் வேசி யோடங் கொருபெரு வணிக னுற்றான். (உக)

செப்பிடு மவனு ளுத்த சிரோமணி யெனப்பேர் பெற்றோன்
கைப்பணம் பறிக்கு மாதர் கலவியி லுலவக் கற்றோ
னொப்பிட வரிய நெஞ்சி லொருசற்று மிரக்க மற்றோன்
மெய்ப்பெருந் தவத்தோர் தம்மை நிந்தையே விளம்ப லுற்றோன். ( )

கனவிலு மொருவர்க் கீயான் கதிநல மொருசற் றுயா
னினநலா ருருகு சோரா னேதமா மெவையும் பாரான்
சினமகல் வாய்மை சொல்லான் சிவாலயந் தன்னிற் செல்லான்
மனநலஞ் சிறிது மில்லான் வஞ்சமே மிகவும் வல்லான். (உ௩)

மடிவிலக் கொடியோன் மேவு மனையிடை யிரப்போர் மேவ
விடியென வதிர்ந்த சொல்லா லெழுந்துபின் றொடர்ந்து சென்று
படிமிசை வீழத் தள்ளிப் பரிபவப் படுத்தி மீளுங்
கொடியன்முற் றவத்தால்வந்து குறித்தவெவ் வனத்தைச்சார்ந்தான்.

அங்கணந் தணனு நேர்கண் டருங்குல வணிக ரேறே
யிங்கிசை கொடியு நீயு மிரதியு மதனும் போல
மங்கலத் துடனே வாழி வாழியென் றுவந்து வாழ்த்தித்
துங்கமே வியபஞ் சாங்கஞ் சொல்லினின் றிதனைச் சொல்வான். ( )

இளைத்தனன் றுபத் தாலே யிளைப்பந்த தாம் பூல தான
மளித்தருள் புரிவை யேலென் றுருயி ரளித்தா யென்றான்
கிளைத்தமா மறையோன் சொல்லக் கேட்டிடு முலுத்த தீம்ப
னளித்திடா தகலா நின்றா னதனையக் கணிகை கண்டாள். (உசு)

அவனையங் கவளழைத்தே யந்தணன் வருத்தங் காட்டி
யுவகையி னடைக்காய் நீட்டென் றுரைத்திட வதும றாமற்
றுவர்செறி பாதிப் பாக்குஞ் சுண்ணவெற் றிலையங் கொன்றுங்
கவலைகொண் டளித்தான் றீமை கதித்திடு முலுத்தக் கையன். (உஎ)

---

(உச) பரிபவம் - அவமானம்; மேலுமதுவே. (உ௫) கொடி - (ஆகு; பெயர்) பெண். (உசு) தீம்பன் - கீழோன்.

புகனும்வே தியனும் வாங்கிப் புசித்தன னவனு நீங்கிப்
பகருமிங் கிருவ ருந்தும் பதியினை யுடைந்து பன்னு
ணிகாற விருந்து மாய்ந்தார் நிகழொரு மொழித்த வத்தாற்
றிகழுமக் கணிகை சென்று சீரயி ராணி யானாள். (௨௮)

கருதரும் வணிக னாத்தீக் காலதூ துவர்கள் வந்து
பரிபவஞ் செப்பும் போதிற் பகர்சிவ தூதர் மேவிப்
பொருதுமாய்த் தவனை வெள்ளிப் பொருப்பன்முன் கொடுவி டுப்ப
வருள்கணு திபனு மேன்மை யக்கண மரன ளித்தான். (௨௯)

வேறு.

மைத்தருழன் மதிக்கொடியே புகல்வணிகன் கணிகைமொழி மறுக்க மாட்டா
தித்தலத்திற் றம்பூல மளித்ததனாற் கதியடைந்தா னினியென் சொல்கே
னத்தன்றுட் சீரடியார்க் கேதேனு மனமொருமித் தளிப்ப ராயிற்
சத்தியமா முத்தியினை யடைந்துய்வ ருண்மையிது சாற்றுங் காலே.

பேறுதரும் பிரயாகை காசிகுருக் கேத்திரமிப் பெருந்த லங்கள்
கூறுமமை வனத்திலொரு பதினாறு கூற்றிலொரு கூற்றுங் கொவ்வா
தேறுமிதில் யோசனையைந் துறைவார்க ளிறந்தவர்கள் சிவனோ டொன்றி
வேறறவே யிருப்பர்களித் தலநினைந்தோர் தாமுமந்த விருப்பஞ் சேர்வர். (௩௧)

கருமூல மறுத்தருளி யருளேம புட்கரிணிக் கயத்தின் மூழ்கித்
திருமூல நாதருடன் வடிவுடைநா யகிசேவை செய்யப் பெற்றோர்
வரமேவு மரிபிரம னனுதினமுந் தொழவாழ்வா ரருஞ்சி ராத்த
மருளோடு செயிற்பிதிர்க்கள் சந்திரசூ ரியரளவு மமைதி யாவர்.

அண்டமுறுங் கழைவனத்தி லத்தனிரு பதத்தன்பா மடியார் தங்கட்
கெண்டிகழோர் பிச்சையுகந் திடுபவர்கள் பயனெம்மா லிசைக்கற் பாற்றே
கண்டமிசைக் கடுவிளங்குங் கனவிடையா னங்கவர்பாற் கருணைகூர்ந்து
வண்டகைய பெரும்போக முத்திநலம் வழங்கிடுவன் மகிழ்ந்தெந் நாளும்

ஆசறு மமைவனத்தி லருந்தவமே வடிவாகி யருண்மா கேசர்
பூசையினை நடத்துமவர் பயனளவை யென்னறிந்து புகல்வேன் மிக்க
தேசுறுமா தவர்க்கேவல் செய்யுமவ ரயன்முதலெத் தேவர் கட்கு
நாசமிலா வரங்கள்கொடுத் தெந்நாளுஞ் சிவபதத்தி னயந்து வாழ்வார்.

(௩௨) ஏமபுட்கரிணி - பொற்றாமரைத் தீர்த்தம்.

கண்ணுதலோனமைபாகருங்காளன்மகிழ்ந்துறையுங்கழைவனத்தி
னண்ணியமெய்ச்சீரடியார்க்குவப்பினளிடமமைத்துநயப்பினீங்கே தா
ரெண்ணரிய சிவாலயங்க ளெடுத்தரனுக் கீந்தபல னெய்தி வாழ்வர்
திண்ணமதி னுறைபவர்கட் கடுங்கால தண்டமுமில் செப்புங்காலே.

அங்கிலையி லிறந்தோரைக் கொடுங்காலன் வந்தெதிர்கொண் டடிப ணிந்து
மன்னியநற் றுதிகள்புகன் றகன்றிடுவ னமரரெலாம் வந்தி றைஞ்சி
யென்னபணி விடைபுரிவ தெமக்கருளிங் கெமக்கருளென் றேத்திச் சூழ்ந்து
துன்னுவரன் புடனென்றால்வேறினியென்னிசேடித்துச் சொல்வதம்மா.

மாநிலத்தி லொருதலமு மிதற்கொவ்வாவித்தலத்தின் மன்னுசீர்த்தி
நானவில்வ தினியெங்ஙன் சேடன்முக மாயிரத்தா னவில மாட்டா
னெனவிதிற் சிறிதுரைத்தேன் சத்தியமே யுரைத்தனலா மணங்கேயென்றான்
மோனமுடனிருந்துபரசிவமுணர்ந்துமுழுதுணர்ந்தமுனிவன்றானே.

திருமருவ வருலோபா முத்திரையு மித்திறங்கள் செப்பக் கேட்டங்
கொருமுனிவ னிருபதமு முரிமையுடன் பணிந்தெனையா ளுடைய கோவே
யிருமைதரு மத்தலத்திற் போதற்கு நீயெழுவா யென்று போற்ற
வருண்முனியு மப்படியென் றருட்படியா லம்மலையி னடியகன்றான்.

முருகவிழா வணித்துவைப்பு முழங்கருவி வீழ்முழக்கு முன்றிறோறு
மொருவரிய தொண்டகவொண் பறையதிர்ப்புங் குரவையிடு மொலியுமெங்கும்
பெருகியெழு மெழுகடலின்முழக்கமெனவெந்நாளும்பிறழாதோங்கி
யரவமிகுங் குறிஞ்சிநிலந் தகத்தியனற் றேவியுடனடைந்தகன்றான்.

நேமிமக ளேயடுக்கு நெடுந்தீபம் பணிமாறி நிற்றல் போல
வாமிலவ நெடுஞ்சோலை யலர்ந்தசெழும் பாலைநிலத் தடைந்து நீங்கி
வாமமிகுந் தருளுநம்புமிறைவனும்போனின்றிலகுமாண்பு சேர்ந்த
காமலியுங் காயாவுங் கடுக்கையுஞ்சேர் முல்லைநலங் கண்டுநீங்கி (௪௰)

பரிபவமால் வினையொழிக்கும் பாவநா சனைப்பணிந்து பரவ தீத
வொருபரனுந் திருமூல நாயகனைத் தொழுதுமுது வுடைந்த சோலை
வருபரிதி யயன்மறைய வளர்பூவைக் கோட்டிசர் மலர்த்தாளைத்தி
யெரிபுரையுஞ்சடையர்திருப்புடைமருதூர்முதலான விறைஞ்சியேத்தி

---

(௩௯) முருகவிழா - முருகக்கடவுளுக்குச் செய்யுந் திருவிழா. துவைப்பு - முழக்கம். தொண்டகம் - குறிஞ்சிநிலவாத்தியம். (௪௰) நேமிமகள் - பூமிதேவி. (௪௧) ஆன - ஆகியதலங்கள்.

பாளைவிரி யிளங்கமுகுந் தெங்குமிகுங் கதலியுமொண் பலவு மாவு
நாளும்வளர்ந் திருபாலும் பொருநைக் கரைமீது நல்லி யங்க
ணீள்விளை வயன்மருத வளமெவையுங் கண்டுவந்து நெடிது தாவி
யாளைவிழவாளைகள்பாய்வேணுவனத் தகத்தியன்வந்தணைந்து புக்கான். (௬௨)

அப்பொழுதப் பொருநையினிற் படிந்தொளிர்மூ லச்சுடரை யருச்சித் தேத்தங்
கைப்பிருகத் திரிபரத்து வாசனரும் புலகனிருங் கௌத மன்சீர்ச்
சொற்பயிலுங் கிருதுசம தக்கினிசேய் புலத்தியனற் சுதகன் றக்கி
னீற்புருவங் கிராவுயர்ந்த காசியன்பன் னிருவோரு மெதிர்கண் டார்கள். (௬௩)

அப்பெரிய முனிவருட னகஞ்சிறந்து வந்ததிற மறைந்தங் கன்னுன்
செப்பரிய திருமூலத் தானத்தி லத்தனது திருமுன் சென்று
கைப்பதுமங் கூப்பிமலர்க் காற்பதுமம் பணிந்தெழுந்து கருத்தி னன்பாய்ப்
பொய்ப்பகைமா றவிர்த்தருமைப் பூசையினை நேசமுடன் புரிய லுற்றான். (௬௪)

அர்க்கியத்தாற் சுத்திபுரிந் தட்டபலஞ் சாத்தியினி தமர்கற் பூரம்
விற்குலவும் படிதிமிர்ந்து பஞ்சகௌவி யம்பஞ்சா மிருத மான
சர்க்கரைநெய் தயிர்தேன்பா லாட்டியுட்டிணை தகமுந்தகைவினுட்டி
யுட்கசிவின் மாக்காப்பு நெல்லிக்காய் பரிசனக்காப் புவப்பிற்சாத்தி.

எவ்வமிலா முக்கனிநீர் மாதுளங்கத் திற்கனிநீ ரிக்கு நீரொண்
செவ்விளநீர் கருவிளநீர் கூவிளநீர் வண்குசைநீர் சிறந்த நீர்கள்
கொய்வகைசேர் மலர்நீரும் பனிநீருந் திருமேனி குளிர வாட்டி
யவ்வகைசந் தனக்குழம்புசாத்தியபிடேகமெலா மடைவிற்செய்தான்

மாதான தூயதிரு வொற்றுடை சாத்திமன மகிழ்ந்து போத
வாதார சத்திமுதற் சத்தியள வருச்சித்தா தனமாச் சேர்த்து
மீதான மூர்த்தியையுங் கற்பித்தர்க் கியங்கொடுத்து விருப்பஞ் சொல்லிப்
போதான பச்சறுகு சந்தனமக் கதைபிவையும் பொலியச் சாத்தி.

ஆனதிவ்வி யாபரண மழகியசெம் பட்டாடை யடைவிற் சாத்தி
வானமிசைப் பொருமாலை மதிமுடியிற் றிருமாலை வகைகள்சாத்தித்

---

(௬௨) இயம் - ஒலி. (௬௫) அட்டபலம் - பலாசுளை, தேங்காய்க்கீறு, தோலோடுகூடிய மாதுளை, குமட்டிமாதுளை, எலுமிச்சம்பழம், நாரத்தம்பழம், மாம்பழம், வாழைப்பழம். அரிசனக்காப்பு - மஞ்சட்காப்பு. (௬௬) குசை - தருப்பை. (௬௭) விருப்பம் - நல்வரவு.

தானமருந் தூபமொளிர் தீபமுடன் கொடுத்தமுது தனையுஞ்செய்வித்
தேனையடைக் காய்நீட்டி யுபசார சோடசமு மியல்பிற் செய்தான்.

அன்பினுடன் செபித்தினிதா மெண்மலருஞ் சாத்தியுவந் தந்த
வத்தோன், றன்பரிவின் வலம்புரிந்து பணிந்தெழுந்தங் கெனையா
ளுந் தலைவ னேயென், புன்பிறவிக் கடலுடைத்த வானந்தப் பெருங்
கடலே புகழின் குன்றே, யின்பமுடன் கழைனைத்து ளிருந்தருளு
மாசேயென் றியம்பி யேத்தி. (௪௯)

இருகண்கள் புனல்பொழியக் கம்பிதமும் புளகமுமெய் யெய்
தும் போர்ப்ப, வுருகுந்தீ மெழுகதுபோன் மனமுருகிப் பரவசமா
யுண்மை சேர்ந்து, பெருகின்ப மிகப்பருகி நெடுநேர மகன்றதற்குப்
பின்பு முன்போல், வருகின்ற செயன்மருவி யிவ்வகையெம் பரன்
பூசை மகிழ்விற் செய்தான். (௫0)

அப்பெரிய குறுமுனிவ னிப்படியே வேணுவனத் தமருங்கோ
வை, முப்பொழுது மாதரித்து மறைவரவு மஞ்ஞைதெரி முறைமை
போல, வெப்பொழுது சிவபரமன் மணக்கோலந் தொழப்பெறுவோ
மென்று நாடி, மெய்ப்பயிலன் புடனிருந்தா னருந்தவமே புரிந்து
றையு மெய்ம்மை யோரே. (௫௧)

இச்சருக்கம் படித்தவர்கள் கேட்டவர்க ளரிபிரம ரிறைஞ்சவாழ்வர்
நிச்சயமே யெனச்சூத முனிவரனம் முனிவரர்க்கு நிகழ்த்தி னுன்
முச்சகமும் புகழுவரு மத்தவன்ற னிருசரண முளரி போற்றி
வெட்சிபுனை யுமைபங்கன் மணக்கோல முனிக்களித்த வியப்புச் சொல்வாம். ()

மூன்றுவது அகத்தியரருச்சனைச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௧௫௮.

---

(௪௯) எண்மலர் - புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலம், பாதிரி, அலரி, செந்தாமரை; இவை எட்டும் எக்காலத்துக்கும் பொது. இனி, ஒவ்வொரு காலத்துக்கு முரிய எட்டு மலர்களுமுண்டு; அவற்றைப் புஷ்பவிதியிற் காண்க. (௫௨) வெட்சி - ஓர் பூ.

நான்காவது:

# அகத்தியர்மணக்கோலக்காட்சிச்சருக்கம்.

—:0:—

புங்க மெய்ப்புகழ்ச் சூதனே பொங்கர வணிவோன்
மங்க லத்திருக் கோல்மா வந்துமா மலயத்
துங்க வன்றொழ வுறுதிறஞ் சொல்கவென் றறவோ
ரங்கை கூப்பிநின் றுரைத்திடச் சூதனங் கருள்வான். (க)

புகழ்த்தி றந்தரு மாதவர் கேண்மினப் பொதியத்
தகத்தி யன்றனை நம்பர னனுப்பிய பின்னர்
மகத்து வந்தரு மிமகிரி மருங்கினில் விளங்கி
யகத்து நண்புசெய் யோடதிப் பிரத்தத்தி லணைந்தான். (உ)

அன்ன போதினில் வெற்பினுக் கரையன்வந் தணைந்து
பொன்ன னடி பணிந்திரு பூசைகள் புரிந்து
பன்னு தேன்பழஞ் சருக்கரை பாலினுட் கலந்த
கொன்னு லாமது பருக்கமுங் கொடுத்தன னுவப்பால். (ந)

திங்கள் வேணிய னங்கதிற் றிருவுள மகிழ்ந்து
மங்குல் வானவர் தொழுமவன் மனையிடை யடைந்து
துங்க மால்விடை யிழிந்துபல் லியம்பல துவைப்ப
வங்கண் மாமணித் தவிசினி லேறியங் கருளி. (ச)

இந்து சூரிய ரொளிவிளக் கெடுப்பமா மறைகள்
வந்து வாழ்த்திட வரிமுத லமரர்கள் வணங்கச்
சந்த மாமல ரந்தணன் சடங்குகள் புரியப்
பந்து மெல்விரன் மலர்க்கரம் பற்றினன் பரிவாய். (ரு)

அப்பெ ருந்திரு மணத்திற மறைவுதற் கெளிதோ
செப்பு மங்கது நிகழ்ந்தபின் றேவர்கண் முனிவர்
தப்பின் மாலயன் பரவநந் தலைவனங் குமையோ
டொப்பி லாமணி மண்டப மொன்றில்வந் துவந்தான். (சு)

---

(உ) ஓடதி - கொடி. பிரத்தம் - மலைமேற்பாந்த இடம். (ந) கொன் - பெருமை. (ரு) மெல்விரல் - மெல்லிய விரல்களையுடைய உமாதேவி.

அன்ன திற்றிக ழரியணை யணைந்திருந் தருளிக்
இன்ன ராதிபர் தொழுதெழத் துந்துபி கெழும
வன்ன நேர்நடை யரம்பைய ராடல்காண் பொழுதின்
முன்ன நீள்குறு முனிக்கருண் மொழியினை நினைந்தான். (எ)

என்று நல்லடி யார்களுக் கிரங்குநங் கோமான்
கன்றை நோக்கிய வாவெனக் கருத்துடன் விரைந்து
சென்று வெவ்வனத் திருநகர் மருங்கினிற் சேர்ந்தா
னன்ற தற்குமுன் குறுமுனி யயர்ச்சியா லறைவான். (அ)

சிமைய வெள்ளியங் கிரியினிற் செல்வனன் றமைப்பார்த்
திமைய வல்லியை மணம்புரிந் தியைந்தபின் னெழில்சே
ரமைவ னத்தில்வந் துனக்கியா மருண்மணக் கோலச்
சமைவு காட்டுது நீயவண் சார்தியென் றிசைத்தான். (௯)

பன்னு மத்திரு மொழிப்படி யிந்நகர்ப் படர்ந்தே
மன்னி யோங்கிய மலைமகள் வதுவையு முடிந்து
துன்னு நாளுமேழ் கழிந்தது துகளிலாப் பரம
னின்னம் வந்தில னென்செய்கே னென்னதா மதமோ. (௧௦)

விஞ்சை வல்லவர் யாழினில் விளங்கிசை தெரிந்தோ
பஞ்சின் மெல்லடி யரம்பைய ராடலிற் பரிந்தோ
செஞ்சொன் மாதவர் துதிகளிற் றிருவுளஞ் சென்றோ
வெஞ்ச வில்லவன் றாழ்த்ததிங் கென்னென வறியேன். (௧௧)

மெய்ய னாகிய சிவபிரான் விளம்பிய மொழியும்
பொய்ய தாகுமோ பாவியேன் புகலுமா றென்னே
யைய கோமிகப் புலம்பியிங் கறைந்திடு மொழியச்
செய்ய சோதியன் றிருச்செவி சென்றதோ விலையோ. (௧௨)

தாங்கு மாமறிக் கரத்தினன் றிருமணக் கோல
மாங்கி ருந்தியாங் காண்பதற் கருந்தவ மற்றே
மீங்கு மவ்வகை யாயதோ வென்றுள மிரங்கி
யோங்கி ருந்தவ னரும்பெருஞ் சமாதியி லுற்றான். (௧௩)

---

(௯) செல்வன் - சிவபெருமான். (௧௩) சமாதி - யோகம்.

அத்தி றந்தரு சமாதியி லானவா றறிந்து
சித்த மாமகிழ் கொண்டுவந் துரோமமுஞ் சிலிர்ப்பத்
தத்தை வாய்மொழி நித்திலந் தருநகை யுலோபா
முத்தி ரைக்குமாங் கதுதனை மொழிந்தெழு மளவில். (௧௪)

அன்று தேடியு மரியயற் கரியவன் வந்தா
னென்று நீடடி யார்களுக் கெளியவன் வந்தா
மன்ற னீடுமை மணாளனு மன்னவன் வந்தா
னென்று சூாமணிச் சின்னங்க ளெங்கணு மியம்ப. (௧௫)

சங்க மும்பொருந் தாளமுங் காளமுந் தழங்கத்
துங்க வசன் மிசைப் பஞ்சதுந் துபிகளு முழங்கப்
பொங்கு பேரியுந் தடாரியு மலாரியும் புடைப்ப
வங்கை வீணையுங் குழல்களு மடரிசை பரப்ப. (௧௬)

கருடர் கின்னரர் சித்தவித் தியாதரர் கலைக்கிம்
புருடர் தும்புரு நாரதர் புடைமிக நெருங்கித்
தெருட ரும்புக ழேழிசைத் திறங்கண்முன் பாடி
யருட ரும்பரம் பரவென வங்கவர் பரவ. (௧௭)

அரம்பை மேனகை யுருப்பசி திலோத்தமை யாதி
வரம்பி னீடர மகளிர்கள் வந்துவந் திறைஞ்சிப்
பரம்பு மின்னணிக் குழாமெனப் பரத நூல் வழியி
னிரம்பு நாடகம் புரிந்துமுன் னின்றனர் நெருங்க. (௧௮)

அற்ற நீங்குசே ருடிக ளளவற நிறைந்து
வெற்றி மால்விடைக் கொடித்திரள் விண்ணெலா மறைப்பத்
துற்ற வாலவட் டங்களுந் தொடர்ந்தவீ சனமு
முற்று மோகையோ டொலியலு முயங்குகா லியங்க. (௧௯)

பொங்கு பாற்கடற் பொலிவெனப் பொடியணிந் திலங்கு
மங்க மாதவர் நிறைந்துமுன் னுறைந்தவக் கடலிற்

(௧௪) ஆனவாறு - சிவபிரா னெழுந்தருளி வருதலான விதம். (௧௬) மலாரி - (இடைக்குறை) பம்பை மேளம். (௧௯) சேருடிகள்- சேற்றிலே யசைந்து திரிபவைகளாகிய இடபங்கள். ஆலவட்டம் - பெருவிசிறி. வீசனம் - விசிறி. ஒலியல் - சீலையாலாகிய ஒருவகை ஆலவட்டம்.

றங்கு சீதவெண் டிரையெனத் தயங்கிரு மருங்குஞ்
செங்கை யான்மணிக் கவரியின் றிரளெடுத் திரட்ட. (உ0)

புற்ற ராமணிக் குழைப்பெரு விழிக்குறட் பூதங்
கொற்ற மாமதி யொற்றைவெண் குடைமருங் கெடுப்ப
வுற்ற தேவர்தங் குலமேலா முயர்ந்தமந் தாரந்
தூற்ற மாமது மழைபொழி மலர்மழை சொரிய. (உக)

பொருங்க ராசல முரித்தருள் புராரியி னருள்சே
ரிருங்க ணதிபர்க் கதிபனு நந்தியெம் மிறைவ
னெருங்கு வானவர் சேனையை நெருங்கிடா வகையங்
கொருங்கு சேர்ந்திடக் காம்பயில் பிரம்புகொண் டொதுக்க. (உஉ)

சுரும்பி ரங்கிய தளிரடித் துடியிடைப் பசும்பைங்
குரும்பை யந்தனத் தணிநகை முல்லையங் குலஞ்செய்
யரம்பை மாதர்செந் தாமரை முகத்தெழி லளகக்
கரும்பு யற்றிகழ் மின்னெனக் காதல்கொண் டருள. (உங)

துதித்து நாடொறும் வணங்கிமெய்த் தொண்டுகள் புரியு
மதித்த போதன ரிதயசெஞ் சரோருக மலரக்
கதித்த சூரிய ரளவில கோடிகா லத்தி
லுதித்த தென்னமெய் யிலகொளி யுலகெலாம் வாய்ப்ப. (உச)

செக்கர் வெண்பிறை நிலவிய செஞ்சடா முடியு
முக்க ணுந்திரு வழகெழு முழுமதி முகமுங்
கக்கு வெங்கதிர்ச் சுடரெறி குண்டலக் காதுந்
தக்க தெண்ணில வெழுதிரு நகையுமுன் றயங்க. (உரு)

அண்டர் தந்திர ளமுதுண விரும்பிநஞ் சருந்துங்
கண்ட முந்திர ணான்குதிண் புயங்களுங் கதிர்த்து
மண்டு மான்மழு வரதநீ டபயமும் வயங்கக்
கொண்ட செங்கையு மணித்திருக் காப்புமேற் குலவ. (உசு)

கடல்படுஞ்செழுந் தரளவண் டொடையல்செங் கழுநீர்த்
தொடையல் சந்தணி மார்பமுங் கொல்புலித் தோலி

(உங) குலம் - கூட்டம்.

றுணைபெசி றந்திடு முருவமுங் கூற்றினை யுதைத்தங்
கிடர டுங்கழற் சேவடி மலர்களு மிலங்க. (உஎ)

மங்க லத்திருக் கோலநீண் மங்கையோர் பங்க
னிங்கி தத்துடன் கழைவனத் தெய்துமப் பவனி
புங்க வந்தர ராயினோன் புகலூதற் கெளிதோ
கண்கொ ளாத்திருக் கோலமக் குறுமுனி கண்டான். (உஅ)

கண்ட மெய்ம்முனி யருவியின் கண்க ணீர்பொழிய
மண்டு மஞ்சலி கொண்டுரோ மாஞ்சித மருவத்
தொண்டு கொண்டிரும் புளகமெய் தோய்ந்திட வரன்முன்
றண்ட டனும்படி சரணபங் கயத்தினிற் றாழ்ந்தான். (உகூ)

கந்த மாமலர்ப் பொருநையுங் கண்டுகை தொழுதா
ணந்து மாதவன் றேவியு மிறைஞ்சிமுன் னயந்தாள்
வந்து பன்னிரு முனிவரும் வணங்கியஞ் சலிகொண்
டெச்சை யேயெனப் பாடின ராடின ரெங்கும். (௩௦)

சங்க ரற்பணிந் திடுமுனி சயவென வெழுந்தே
யங்கை கொண்டுநின் றுடினன் பாடின னகலா
தெங்கு மோடின னுலமெழு கென்னவுள் ளுருகித்
துங்க மேவிய வன்பினாற் றுதித்திடத் தொடுத்தான். (௩க)

வேறு.

சலக்குழ லீன்வரை மாதுடனே யென்கண்கள் களித்திட வின்பமணக்
கோலத்துட னேயுடன் மேவுமணக் கோலத் தவனே சரணஞ் சரண
ஞாலத்தின் மயக்க மொழிந்துனையே நாடிப்பரவித் தேடித் திரியுஞ்
சீலத்தவர் கட்கு வெளிப்படுமெய்ச் சீலத்தவனே சரணஞ் சரணம்.

யாலாத்த விடைப்பரி யேறிவரும் பாகாவரு நாகா பரணா
வாலத்தை நுகர்ந்திக லத்தியுரித் தருளும்பர மாசர ணஞ்சரண
நீலக்கரு மாமுகில் போனிறநீ ணெடுமாலய னேடரி தாமுதல்வா
சூலப்படை யாயுடை யாய்விமலா சுகசித்துரு வாசர ணஞ்சரணம்.

---

(உஅ) கண்கொளா - மெல்லினவெதுகை. (உகூ) உரோமாஞ்சிதம் — உரோமப்பொடிப்பு. (௩௦) பன்னிருமுனிவர் -

மூட்டார்புர முன்னை நகைத்தெரிசெய் யொருசே வகனே மதவேளெரியச்
சுட்டால நிழற்க ணறம்புகலுஞ் சொல்லின் பொருளே சரணஞ்சரண
முட்டாமறை யொன்று குறைந்திடமுன் முட்டாவகை யந்த முகுந்தனிருங்
கூட்டாமறை தன்கை யிடந்தணியுங் கமலப் பதனே சரணஞ்சரணம்.

பெருகன்புட னேபரவிப் பணியும் பெருமான் மிகுமத் திருமால்பெறவே
யருள்கொண்டொருசக்கர மங்கருள்செய்யஞ்சக்கரனேசரணஞ்சரண
மருள்கொண்டுழ லாவகை வந்தழியா மலமாயை தவிர்த்தெனை யாளுடையாய்
பருகின்ப நலந்தரு சின்மயனே யரதத்துவ னேசர ணஞ்சரணம் ()

புவனங்க ளளித்தருள் புங்கவனே புதியாய் பழையாய் சரணஞ்சரண
மவையின்புற நித்த நடம்புரிபே ரழகா குழகா சரணஞ்சரணம்
பவபங்க மறுத்தரு ளங்கணனே பரனே சரண மரனேசரணந்
தவசங்க ரிடத்துறை சங்கரனே தவனே பவனே சரணஞ்சரணம்.

சிந்தைக்கினியாய்புகலுந்தொழிலுஞ் செய்யுந்தலைவாசரணஞ்சரணம்
பந்தித்த விகாரமி லாதபெரும் பரிபூ ரணனே சரணஞ்சரணஞ்
சந்தத்திரு மாமறை தந்தருளுஞ் சைதன் னியனே சரணஞ்சரணம்
வந்தித்திடு தற்சிவ சிற்பரனே வரவற் புதனே சரணஞ்சரணம். ()

வேறு.

உருவே யருவே சரணஞ் சரண முயிரே யுடலே சரணஞ் சரண
மருவே மலரே சரணஞ் சரண மணியே யணியே சரணஞ் சரண
மிருளே வெளியே சரணஞ் சரண மியலே யிசையே சரணஞ் சரண
மருள்பே றுறவே சரணஞ் சரண மருளேபொருளேசரணஞ்சரணம்.

உணர்வுக் குணர்வே சரணஞ் சரண முயிருக் குயிரே சரணஞ் சரண
மணுவுக் கணுவே சரணஞ் சரண மளவைக் கரியாய் சரணஞ் சரணங்
குணமற்றவனே சரணஞ்சரணங் குறியிற்றிகழ்வாய் சரணஞ்சரணம்
புணர்மெய்க் கதியே சரணஞ்சரணம் புகழுக்கரசே சரணஞ் சரணம்.

வேறு.

என்றுதுதித் திடமிகவுந் திருவுள்ள மகிழ்ந்தருளி யென்னை யாள்வோ
னொன்றன்மலைக் குறுமுனியேவேண்டும்வரங்கொள்கவெனச்செப்புமன்னோன்
குன்றனையா யடைந்தவர்கள் பவமகற்றி யிந்தமணக் கோலத் தோடே
யென்றுமினி யித்தலத்தி னமர்ந்தெனையாண் டருள்புரியென் றிரந்து நின்றான்.

---

(௩௯) தவசங்கர்-தவஞ்செய்யுங் கூட்டமாகிய முனிவர்.

ஆங்கிறைவ னப்படியென் றருண்முனிவன் வரமெவையு மளித்துப் போற்றும்
பாங்குடைய மற்றையர்க்கும் வேண்டும்வரங் கொடுத்தருளிப் பரிவி னோலே
யோங்கியவும் பர்கள்புரியு மணிச்சிங்கா தனத்திலினி துமைபி னோடுந்
தூங்குபெருவிருப்பினொடும்வீற்றிருந்தான் போற்றுமறைதந்தநாதன்.

அம்பரினி தமர்ந்தருளுங் கலசமுலை யொருபாகத் தானைப் பின்னுங்
கும்பமுனி வரன்பணிந்து தனதுகர கமலமலர் கூப்பி நின்று
நம்பபரி பூரணனு யகண்டமெலா முறைநதருளி நயப்பி னெய்தி
யெம்பொருட்டிங் கமர்ந்தருள வெத்தவமுன் புரிந்தனன்யா னென்று போற்ற.

அத்தனுமெய்க் குறுமுனியே நம்மொழியின் படியிம்ப ரணைந்து பூமி
யுத்தரதெக்கணமிரண்டுஞ் சமமாகப்புரிந்தனையே யுனக்கொப்பார்யா
ரித்தலத்தி லெவர்களுக்கு மிச்சித்த வரங்களெலா மீந்தெந் நாளு
நித்தியமு நீபுரியும் பூசையுவந் துறைதுமென நிகழ்த்தி னனால். ()

அப்பொழுதங் கரிபிரம ரரகரவென் றார்த்துமகிழ்ந் தார்ப ணிந்தா
ரெப்பொழுது மணவாளக் கோலமுடன் பரனிருப்ப விறைஞ்சி நின்ற
மெய்ப்பொதியக் குறுமுனியை மிகப்புகழ்ந்தார் மறைபரவும் வேணுக் காடா
மிப்பிரம விருத்தபுரப் பெருமையினைப் புகழ்ந்தாசி யியம்ப லுற்றார். (௪௪)

நாரணனிங் கிதினுளுந் திருவளர வென்றமுத னவிற்றி னான்பின்
பாரணனீ டாரணமு மாரணருங் கலைமடந்தை யருளு மென்றுஞ்
சீரணவி மிகத்தயங்க வுரைத்தனன்வெங் கடகடச் செருப்போர் வெள்ளை
வாரணன்மா மழைமுகிலு மகச்சடங்குந் துரிசகல மன்ன வென்றான்.

மாக்கடமக் கெந்நாளு மக்கினியி லுறுவாதை வராது நீங்கத்
தீக்கடவுள் குளிர்ந்துரைத்தான் றனது கொடுந் தூதர்புரி தீமை நீங்க
வாக்கமிகு மாயுளு நோய்களற வவமிருத்தங் ககல வன்பி
னூக்கமுடன் புரிதவங்க ளொன்றனந்த மாகயம னுவந்து ரைத்தான். (௪௬)

பூதபசா சுக்களரக் கர்பயங்க ளறநிருதி புகன்று னங்க
ணேதுமிருந் தெண்ணீரின் மானிடர்கள் மடிதலற வுரைத்தா னீர்க்கோன்
வாதமொடு குன்மபய சூலைமுதல் வியாதிவினை வாரா தேகச்
சீதமிகு மந்தக்கால் வந்துலவ வப்பவனன் செப்பி னனால். (௪௭)

---

(௪௫) செரு-யுத்தம்.

இத்தலனி லுறைபவர்க ளெல்லாருஞ் செல்வர்களா யென்றும் வாழ
முத்தாநவமணிகொழிக்கவென்றளகைக்கதிபதியுமொழிந்தான்மிக்க
பத்திமையா லீசான னெந்நலமுந் தயங்கவெனப் பரிந்து ரைத்தான்
சித்தமகிழ் மற்றுமுள தேவர்களு மிம்முறையே செப்பினார்கள்.(௪௮)

அப்பணிபுஞ் சடையாள னங்கவர்கள் கேட்கவழைத் தமரர் கேளீ
ரிப்பிரம விருத்தபுரப் பதிக்குக்குநிக ரோர்பதியு மில்லை யீதி
லொப்பறவே கும்பமுனி யுவந்துதொழ யாமுறைது முரைத்த விந்த
மெய்ப்பதியிற் பாதகர்க ளுறைந்திடினு நமக்கொப்பாய் விளங்கத் தக்கோர். ()

வென்றி கொளித் தலத்துறைவோர் வேண்டும்வரங் கொடுப்பதுநம் வேலையாகு
மென்றுதிரு வாய்மலர்ந்து மாதவமெய்க் குறுமுனிவ னிறைஞ்சி யேத்த
நன்றிதரு மணக்கோலந் தழையவர மருள்புரிந்தா னற்ற வத்தீ
ரென்றுமமை வனத்துறைந்து கதிபெறலன் றேகடனென் றிசைத்தான்சூதன்.

இங்கியம்பு மிச்சருக்க மோதினருங் கேட்டவரு மின்பம் பொங்கப்
புங்கவருங் கதிநலமு மடைந்திடுவ ரினியிப்பார் பூத நாத
னங்கணனம் பிகைபாக னடிமுடிவு காணாத வண்ட நாதன்
செங்கணெடு மாலிறைஞ்சக் கங்காள வடிவின்வருந் திறமுரைப்பாம்.

நான்காவது அகத்தியர் மணக்கோலக் காட்சிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௦௩.

## ஐந்தாவது:

# * கங்காளவேடச் சருக்கம்.

---[:o:]---

மத்தையணி பவர்க்கன்பான் மன்னியசூ தனைநோக்கி
மெய்த்தவர்க ளெல்லாரும் விண்ணவர்கோன் விடையேறி
யத்தலத்திற் கங்காள வேடமுட னடைந்தகதை
யுத்தமனே மொழிதியென வுயர்சூத முனியுரைப்பான். (க)

மன்னுமருந் தவர்கேண்மின் மதுவினுடன் கயிடவனைப்
பொன்னுலவுந் திருமார்பன் பொருதழித்துப் புகழ்நிறுத்திப்
பின்னர்வணங் கமரர்கடம் பெருமானைப் பணிந்துதொழ
வுன்னரிய காதலினு னுயர்கயிலை மருங்கணைந்தான். (உ)

ஓதமுட னுவரியிற்ற னுடனுதித்த கடுநஞ்ச
நாதனணி மணிமிடற்றி னண்ணியதென் றெண்ணியெழுந்
தாதரவி லமுதமும்வந் தங்கணனு ருறைவதற்கோர்
பூதரமாய்ப் பொலிந்தனைய பொலிவுளதக் கயிலைமலை. (ங)

அக்கயிலைக் கொடுமுடியி லகிலமெலா மொளிபரப்பி
மிக்கெழுபொற் கோபுரமும் விண்ணுலவு பொன்மதிலுந்
தொக்கமணி மண்டபமுஞ் சூளிகையுஞ் சூழ்நெருங்க
நக்கனக மகிழ்ந்துறைவ தொருமணிமண் டபமுளதால். (ச)

அம்மணிமண் டபத்தினிடை யளவிறந்த பரிதியர்க
டம்மொளிக ளோரிடத்திற் சமைந்ததெனு வணிசிறந்து
செம்மணியின் குலத்திழைத்துத் திகழுமரி யணைமீதி
லெம்மிறைவ னுயர்கயிலை யிறைவியுடன் வீற்றிருந்தான். (ரு)

வாசமலர்ச் சதுர்முகனு மகபதியும் பணிந்துதொழ
வாசையினிற் கடவுளரு மட்டவசுக் களும்பரவத்
தேசுதரு தொண்டர்களு மண்டர்களுந் திரண்டேத்த
நேசமுடன் பூதகண நெருங்கியணி நின்றுதொழ. (சு)

---

* கங்காளவேடமாவது - சருவசங்கார காலத்துச் சகல தேவர்களையுஞ் சங்கரித்து அவர்களுடைய எலும்பை யணிந்த கோலம். (க) விடையேறி -- வினையாலணையும் பெயர்.

ஆனா மயிற்சிற காரு நெடுந்துடி
மேலணி பெற்றிட மெய்த்திரு மால்சட
நால விடுத்து நலங்கிளர் தோண்மிசை
மாலுற வைத்த மலர்க்கை யிலங்கிட. (௩௪)

வண்டுடி யங்கை வயங்க மகிழ்ந்ததிர்
தண்டு துவண்டிடு மங்கை தயங்கிட
வெண்டலை மாலை விளங்கிய பூண்வகை
கொண்டணி மார்பு குலாவி நிலாவிட (௩௫)

உரைசெய் மணஞ்சுழி யொருசுழி யுந்தியு
மரவணி யுந்திரு வரையும் வியந்ததி
னாரமிகு வெம்புலி யுரியுடை யும்மதிற்
சொருகி யணிந்தருள் சுரிகையு மின்புற. (௩௬)

நாத சிலம்பு புலம்ப நடந்தருள்
பாதமு மங்கிசை பாதுகை யும்பொலி
போதவெ ணீறு புனைந்தருண் மேனியு
மாதர்கள் சிந்தை மனந்திறை கொண்டிட. (௩௭)

போத வெருட்டொரு பூத மணைந்தினி
தோது பலிக்கல னொன்றிய புன்றலை
மீதி னெடுத்து வியந்து சுமந்துடன்
மாதக வுற்று மருங்கி லணைந்திட. (௩௮)

நந்துமி ழுந்தர ளங்கதிர் நன்மணி
சந்தகில் வார்தரு தண்பொரு னைப்புனல்
சிந்தை மகிழ்ந்து சிறந்தயல் சூழ்தரு
மைந்தமை வேய்வன மாடு செறிந்தனன். (௩௯)

வேறு.

செக்கர் மாமணி வெயிலுமிழ் பணாமுடிச் சேடன்
றக்க நாக்கொடு மக்கணி தலைவனா ரமையா

---

(௩௪) நால - தொங்க. ௩௪-ஆம் பாட்டின் பொருள் ௯௬-ஆம் பாட்டில் விளங்கும். (௩௫) துடி - உடுக்கு. (௩௬) சுழி - சுழிக்கின்ற. (௩௮) போத - மிக. (௩௯) மைந்து - வலிமை.

ணாங்க ளூர்மிக நயந்தரு வேணுமா நகரின்
மிக்க சீர்வள நலந்தனை விளம்புவார் யாரே. (௪0)

சங்க மேந்திமா லுறுதலாற் சலசமா மலர்கள்
பொங்க வேர்தலாற் புகழ்பொதி பொருந்தமா நீர்மை
யங்கண் வேளைமேற் பெறுதலா லணிவளந் தரலா
லெங்கள் சீர்த்திரு மானுநீ டெழில்வளை வயல்கள். (௪௧)

சசிதரித்திசை வானிடந் தயங்கலா லளிதந்
திசைவ ளர்த்தலாற் போதகந் தனைப்பெறு மிசைவாற்
பசுமை நன்னிறந் தருதலாற் பதநிழ றரலா
லொசிம ருங்குமை யனையவா முயர்ந்தகண் டருக்கள். (௪௨)

சங்கு சூழ்தரு சலமெடுத் தெறிதரு தரங்கத்
துங்க வாவிகள் வழங்கலெம் மிடத்தினிற் றுயில்மா
லெங்கை யாற்றொழ வித்தலத் தெய்திறு மென்று
பொங்கு பாற்கடல் வந்துசூழ் பொலிவுபோன் றிடுமால். (௪௩)

அண்ட கோளகை யளவுமிவ் வளமென வளர்ந்து
கொண்டு சூழ்கிடங் குலவிய குலமதிற் குலங்கண்
மண்டு நீள்கடல் புறம்புசூழ் வாளமா மலைந
ருண்ட தாமெனி னிகரென வுரைத்திடத் தகுமால். (௪௪)

மேவி வந்தெம துலகினை வீட்டிடே மென்று
தேவர் கும்பிட வளர்ந்தணி சிறந்தகோ புரமுன்
காவல் கொண்டரு ளாரணன் கதித்தமா வலிமுன்
னுவல் கொண்டில களைந்துநின் றருள்வது தகுமால். (௪௫)

---

(௪௧) மால்-திருமால். புகழ் பொதி பொருந்தமா நீர்மையங்கண வேளை மேற் பெறுதல்- புகழ்பொதிதல் பொருந்தப்பெரிய குணமுடைய அழகிய கண்களையுடைய முருகக் கடவுளைப் பூர்வத்திற் பெறுதலால் X புகழ்பொதி தாமிர பன்னியினிடத்து ஆகிய நீரின்குணம் அவ்விடத்துப் பொருந்திய காலத்தில் மேன்மை பெறுதலால். (௪௨) சசி - சந்திரன் X இந்திராணி. இசைவான்-பொருந்திய சிவபிரான் X இசைந்த ஆகாயம். போதகந்தனை - ஞானமுள்ள முருகக்கடவுளை X இளமையை. கண்டருக்கள்-மூங்கிலாகிய மரங்கள். (௪௪) கோளகை - வட்டம். கிடங்கு - அகழ். குலம் - நன்மை. வாளமாமலை - சக்கர வாளமலை, அதுபகுதிப் பொருள்விகுதி.

தழங்கு வெண்பனிங் கிழைத்தணி தயங்குமா வணங்க
ளொழுங்கி னைந்தவெண் பாற்கடற் கொக்குமற் றதனிற்
கழங்கு பந்தெறிந் தரிவையர் கலப்பவீழ் முத்தம்
வழங்கு மக்கடற் குமிழியின் வடிவினைத் தருமால். (௪௬)

அந்த ரத்திலே வரும்பொழு தனைந்திளைப் பாற
விந்து சூரியர்க் கோரிட மில்லையென் றிரங்கி
யந்த நான்முகன் மணிவரை யனேகமங் கமைத்து
வந்து சூழ்நிரைத் தன்னவா மாடமா ளிகைகள். (௪௭)

அரவ நீண்மயி லினங்கணின் றணிநடம் புரியும்
வரைசெய் மாளிகைக் குலங்களின் மரகதச் சுடரை
யிரவி மேவுதின் டேரிழுத் தெழுந்தவெம் பரிகள்
விரவி நீள்பசும் புல்லென மேயவந் தணுகும். (௪௮)

இந்து காந்தன் மணிகளி னியற்றுமா ளிகைமேல்
வந்து மாமதி தவழ்ந்திட வயங்குநீர் சொரிதல்
கந்த மாமலர்க் கடுக்கையன் கயிலைமால் வரையி
லுந்தி வீழ்ந்திடு மருவியை யொத்திடத் தருமால். (௪௯)

திலக நீண்மணி தரித்தணி சிறந்தமா மதிலி
னலகி லாமணிக் கொடிகணின் றசைதலா தவனை
யிலக வந்துநீ யிம்பர்நேரேகுதற் கரிது
விலகி யேகுதி யென்றுகை விலக்குத றகுமால். (௫௦)

மாட மாளிகைப் புறந்தரு மாமணி மதிலி
னீடு மின்னணிக் குழாமென நீணிலை யெங்கு
மாடல் கொண்டுவா ழரிவைய ராடலுக் கிசையப்
பாடல் கொண்டிடுங் கிள்ளைக ளேழிசை பரம்ப. (௫௧)

வேலை வந்தெழு மழுதென வீதிமீ துலாவு
மாலை யங்குழ லரிவையர் வதனமா மதியைக்
காலை விண்டலர் தாமரைக் காடென நினைந்து
சோலை வண்டிக ளணைந்துடன் றுவண்டுசூழ் தருமால். (௫௨)

---

(௪௯) ஆவணம் - தெரு. (௫௦) திலகம்-மேன்மை. (௫௧) புறந்தரு - பக்கத்திற் செய்யப்பட்ட, நீணிலை-நீண்ட இடம்.

பாவை மார்கள்வெண் பளிங்கினிற் பணித்தவீ தியின்மேன்
மேவ வந்திசை பஞ்சுதோய் மெல்லடிச் சுவட்டை
வாவி மீதெழு சரோருக மலரென மகிழ்ந்து
தூவி யன்னம்வண் பெடையொடு சூழ்ந்துலா வருமால். (௫௩)

மூசு வண்டலர்ப் பொருநைமா நதியினின் முயங்கித்
தேசு தங்கெழு சந்தனச் சோலையிற் செறிந்த
வாச முந்திகழ் முத்தமிழ் மணங்களு மணக்க
வீசு மெங்கணும் பொதியமேல் விளங்கிளந் தென்றல். (௫௪)

உளம கிழ்ந்திருஞ் சேடிய ரொழுங்கின்மின் னனையா
ரளக மைமுகிற் கிட்டகா ரகினறும் புகைபோய்
வளரு மும்பர்நாட் டரிவையர் மலர்க்குழற் படிந்து
கிளர்ந றும்பெரு மணந்தருங் கிளக்குமா றென்னே. (௫௫)

நாம வஞ்செழுத் துணர்ந்தரு ஞான்மறை முனிவ
ரோம வேள்வியிற் பெரும்புகை யுலகெலா நிறைந்தங்
கேம நீடிய வும்பர்கண் ணிமைத்தலை விரும்பச்
சேம மேவுபொன் னுலகினிற் சென்றுதுன் றிடுமால். (௫௬)

ஏறு மாமணித் தேர்களி லெழுந்தபே ரொலியுஞ்
சீறு கோபவெங் கடகரித் திரள்களி னதிர்ப்பு
மாறு நீள்பரித் திரள்களின் வரும்பெருங் கலிப்புங்
கூறு மாமறு கெங்கணுங் குழுமிநின் றெழுமால். (௫௭)

புண்ட ரீகனு முகுந்தனும் புகழ்ந்துநேர் பரவு
மண்ட நாயகன் பூசையி னரவமு மகல்வான்
மண்டு மும்பரும் யாவரும் வந்தெதிர் வணங்குந்
தொண்டர் பூசையின் முழக்கமுங் கடலொலி துரத்தும். (௫௮)

தெய்வ நாயகன் றிருமலர்ச் சேவடிக் கன்பாஞ்
சைவ மாதவ ருறைந்துவாழ் மடங்களுஞ் சகத்தோர்
கவ்வை தீர்சிவ யோகிக ளிருக்கையுங் களிகூர்
மெய்வ ரோதய முனிவர ரிடங்களு மிகுமால். (௫௯)

---

(௫௭) மாறு - விரோதம். (௫௮) மண்டும் - நெருங்கும். (௫௯) கவ்வை - பழிச்சொல்.

ஓதலாதிய வறுதொழி லுவப்பினிற் புரியும்
வேத பாரகர் மறையொலி மிகுந்தநீ டெருவுங்
காதன் மன்னுயிர்க் குறும்பகை கடிந்தறங் காக்கு
நீதி வேந்தர்வாழ் நிறைதிரு வீதியு நெருங்கும். (௬0)

பார்வி ளங்கிய குபேரர்க ளெனமிகப் பரவுஞ்
சீர்வி ளங்கிய வணிகர்கள் சிறந்துவாழ் தெருவு
மோர்வ ளங்களி னறம்புரிந் திசைகொள்வே ளாளர்
சேர்வு றும்பெருந் தெருவுமற் றிடங்களுஞ் செறியும். (௬௧)

வேறு.

சித்த வல்வினை தீர வடர்த்தலாற்
புத்தி முத்தி புரிந்தருள் செய்தலா
னித்த மாகி நிகரறு நீர்மைபா
லத்த னன்ன தறைந்திடு மந்நகர். (௬௨)

நிகரில் பூரண கும்ப நெடுங்கொடி
மகர தோரண தீப மணிவிளக்
ககவு பல்லிய மார்ந்திடு வீதியிற்
றிகழு நாளு மொழியாத் திருவிழா. (௬௩)

வீதி யூடியர் மேனிலை யெங்கணுஞ்
சாது மாமகச் சாலைக ளெங்கணு
மாதி நாயக ராலய மெங்கணுங்
கோதி லாவரு ளும்பர் குலக்குழாம். (௬௪)

ஏர்கொ ளற்பொழு தேயிர வேய்வன
போர்ம தக்களி யேபுகர் பூண்பன
சேர்வி மைப்புன மேசிறை சேர்வன
வார்ம திக்கலை யேகுறை வாவன. (௬௫)

பழன நீள்கழ்னி யேபறி பட்டன
வுழலு நீள்கதி ரேயுலை வுற்றன

(௬௨) நித்தம் - நித்தியம். (௬௩) அகவு - ஒலிக்கின்ற. (௬௪) சாதுர - சாதுக்கள்; பெரியவர்கள். (௬௫) இரவு - இராத்திரி. X யாசகம். புகர் - புள்ளி X குற்றம், சிறை - அணை X சிறைச்சாலை.

குழுமு பல்லிய மேயதிர் கொண்டன
வுழையில் வாவிக ளோமலங் குற்றன. (௬௬)

சோலை நீள்சினை யேயலர் துன்றுவ
மாலை மாமல ரேதுகள் வைப்பன
வோல வண்டின மேமது வுண்பன
கோல நீள்வய லேபயங் கொள்வன. (௬௭)

இல்லெ னுஞ்சொன் மனையை யியம்புவர்
கொல்லெ னுஞ்சொ லசைச்சொலிற் கூறுவர்
வில்லெ னுஞ்சொற் றனுவில் விளம்புவ
நல்ல தல்ல தறையா ருறைவது. (௬௮)

உன்னும் வேட்கை யுவப்பி னளிப்பது
மன்னு போக மெவையும் வழங்குவ
தின்ன தீர்கதி யின்ப மளிப்பதப்
பன்மை நம்புகழ் வேணு வனப்பதி. (௬௯)

வேறு.

கன்னலுஞ் செந்நெலுங் கமுகுமொண் கதலியுந்
துன்னுதண் பழனமுஞ் சோலையுஞ் சூழமப்
பன்னெடுங் கழைவனப் பதிபுகுந் தருளினன்
னன்னைநங் கவுரிபங் காளகங் காளனே. (௭0)

கொங்குவிண் டலர்மலர்க் கோதைதாழ் மாதர்தஞ்
செங்கையின் பலிகொளச் செறியுநீண் மறுகுபுக்
கங்கணுள் ளாளநின் றணிமிடற் றினிலெழத்
துங்கமா ரங்கைவண் டுடியதிர்த் தருளினன். (௭௧)

அருட்டரும் பொழுதுநீ டரிவைமா ரெவர்களும்
பொருபதங் களிவிடும் பொருவில்கிண் கிணியுடன்
பரிபுரந் துனிவரும் படிபகர்ந் தலறவே
யிருகையும் பலிகள்கொண் டெதிர்புறப் பட்டனர். (௭௨)

---

(௬௬) அதிர் - முழக்கம் X பயம். உழை - பக்கம். மலங்கு - ஓர்மீன் X கலங்குதல். (௬௭) துகள் - மகரந்தப்பொடி + குற்றம். பயம் - நீர் X அச்சம். (௬௮) தனு - வில். (௭௧) உள்ளாளம் - ஒருபண் + மேல்வருவனவுமது. (௭௨) துனி - துன்பம்.

அன்னவான் மின்னனு ரனவிலர் மயல்கொளற்
குன்னியே யென்னையா ளொருவனங் கவர்கடம்
முன்னமேர் மன்னுபுன் முறுவல்செய் தருளியே
பன்னுநீ டவிநயம் பலபுரிந் தருளினன். (௭௩)

அருளுமுற் றவிநயத் தளவின்மா னுளமிசைந்
திருவிழிக் கயறிருந் தேழைமா மாதரார்
மருண்மனத் திசைபுநாண் மடமொழிந் தொருவியே
யொருமையிற் பொருமதற் கோரிலக் காயினார். (௭௪)

ஒருகைபைங் குழல்சுமந் தொருகைவண் டுகிலணைத்
தருவிகண் பொழியவே யவசமாய் முலைசுமந்
தொருமருங் கொசியநீ டுலைதரும் பலிகொள்வோ
னிருமருங் கினுநிறைந் தின்னணஞ் சொல்லுவார். (௭௫)

யாமரே பலிகொளீர் பலிகொளீ ரெனமொழிந்
தருகுபோ யணையுமென் றூடுவார் பாடுவா
ருருகுவார் பொருமிநின் றாடுவா ராடுவார்
மருளுவார் தெருளுவார் மறுகெலா மறுகுவார். (௭௬)

விரவியே யெவர்களும் வெருவவுண் பலிசுமந்
துரிமையான் மருவியே யொழுகுறும் போதன்முன்
பரவுவா ரவிநயம் பலவுமெம் பரன்முனே
புரிகுவார் பெருகவும் புகழுவார் திகழுவார். (௭௭)

வாணிலா வியநிலா மதிநிலா முடியினார்
நீணிலா நகையினு னிறைநிலா பொறைநிலா
நாணிலா மடனிலா நலனிலா கலைநிலா
பூணிலா வெனமனம் பொருமியே புலருவார். (௭௮)

வேறு.

கள்ளார நுகர்ந்துவருங் களிவண்டு முரல்வனபோ
லெள்ளாத புகழ்வீசு மீசனார் மிடற்றிலெழு

(௭௩) அவிநயம் - நாடகம். (௭௫) உலை - உலைதலை. (௭௬) மறுகு - வீதி. (௭௭) ஒழுகுறும் - நடந்துசெல்லும். போதன் - ஞானசொரூபியாகிய சிவபிரான். (௭௮) நிலாம் - பிரகாசிக்கும். நிலா - நிலாது; இது: முற்றிறுதி தொக்கது; மேலுமதுவே.

முள்ளாள விசையின்மன முள்ளுருகி யுடைந்திடுவார்
விள்ளாத பேராசை வெள்ளத்தி லமிழ்ந்திடுவார். (௭௯)

வண்டகைய படிமீது வைத்தருள்குஞ் சிதபாதங்
கொண்டெமது மனஞ்சூறை கொண்டனரென் றுரைசெய்வார்
மண்டலமே லிதுவென்ன மாயமினி யிங்கிவரைக்
கண்டவுட னினவளைகள் காணேமென் றுரைசெய்வார். (௮௦)

யாரின்மகிழ்ந் திடுவார்கைப் பலிகொள்வா னணைந்தனரென்
றோரினமா மடநல்லா ரெல்லோரு முரைசெய்வார்
பேரழகி னியபரமிப் பெருமான்வந் தருளியபின்
னேருறுநங் கலைபோன தென்னவதி சயமென்பார். (௮௧)

காய்ந்துமதன் பொருமாறு கண்டுமொரு சற்றிரங்கா
ரேந்திழையீர் கடுநெஞ்ச ரிவரோவென் றுரைசெய்வார்
தோய்ந்திவர்தோட் புணராமற் சும்மாநின் றெழிந்தோமே
லேப்தமதொரு பெண்மைநமக் கென்னென்று பகர்ந்திடுவார். (௮௨)

சிந்தைமிகும் பெருங்காமத் தீமதனைச் செய்துளையிற்
கந்தமிகு மிளந்தென்றற் காற்றுமடைந் ததுவென்பார்
வெந்தழல்போ லுலகெங்கும் வெண்ணிலா வெயில்பரப்பி
யிந்துதயம் வந்தெழுந்தா லிருக்கநிழ லேதென்பார். (௮௩)

தாரேந்தி மதியேந்துஞ் சடைமுடியீர் நெடுந்தூரம்
பாரேய்ந்து நடந்தணைதிர் பகரில்விடாய் மிகவுடையீர்
பீரேந்தி யுமக்கிசைமால் பெரிதேந்து மெம்முடைய
வாரேந்து செவ்விளநீர் மணம்விருப்பா தென்னென்பார். (௮௪)

குறைமதியை முடிகாட்டுங் கோலமலிந் தெம்முடைய
நிறைமதியை நீர்கொண்டீர் நீதியோ வெனப்புகல்வார்
நறையிதழித் திருப்புயமே னயந்தணையா தொழிப்பீரே
லிறையுமினி யுயிர்நில்லா தெமக்கிரங்கீ ரெனவழிவார். (௮௫)

யாரின்மத னிடும்பூசல் பாரீரென் றுரைசெய்வார்
தாரிணையிங் குமதருளாற் றாரீரென் றிதம்புகல்வார்

(௮௦) வண்டகைய - வளத்தினழகுடைய. (௮௩) ஏ - பாணம். (௮௪) பூரேய்ந்து - பூமியிற் பொருந்தி. அணைதிர் - வந்தீர். பீர் - பசலை.

வாருலவு தனத்தணைய வாரீரென் றுளமயர்வா
ரோரினிய மொழிதடுமா றோரீரென் றுரைசெய்வார். (௮௬)

ஏருலவும் வளைதாரு மெனநின்று வழக்கிடுவார்
நீருரையுந் தேவரீ ருடன்வருவே னெனமொழிவா
ராருமுமக் காகாதிங் கடியமனை யாவனென
வீரியநின் றுரைத்திடுவார் மின்போல மேல்விழுவார். (௮௭)

மங்குறவழ் மணிமாட மறுகுதொறு மிவ்வண்ணந்
திங்கண்முகச் செடிச்சியராந் திகழ்தருமா தரைமயல்செய்
திங்கிதமா யுண்பலிகொண் டெவ்வுலகு நலமெய்த
வங்கணனெங் கங்காள னணைந்தருளு மெல்லையினில். (௮௮)

முன்னியுணர்ந் தவனருளான் முகுந்தனும்வந் தொருவரிய
மின்னினுட னொருகாள மேகம்வரு வதுபோலப்
பன்னரிய புகழ்வீசும் பங்கயமா துடன்கலந்து
மன்னியபே ரன்பினுடன் வந்தான்முன் பணிந்தனனால். (௮௯)

தெருண்மருவு தவத்தோங்கு தென்மலயக் குறுமுனியு
மருள்பெருகுங் கழைவனத்தி லருந்தவங்கள் புரிந்துறையும்
பெருமைதரு சிவஞானப் பெருந்தவமா ரிருடிகளு
மருகணைந்து தொழுதுபணிந் தாடுதல்பா டுதல்செய்வார். (௯௦)

வந்துபுரந் தரன்முதனீள் வானவர்கண் மலர்மாரி
சிந்திமருங் கினினிறைந்தார் சித்தருடன் விஞ்சையர்கள்
கந்திருவ ரிசைமொழிந்தார் கணமுனிவர் துதிகொண்டார்
முந்தியதுந் துபியைந்து முழங்கிமிக வெழுந்தனவால். (௯௧)

பரிவொடுமுன் பணிந்திடுமால் பதுமமலர்க் கரமலர்கள்
சிரமிசையஞ் சலிகொண்டு செயசெயவென் றெழுந்தருளிப்
பரமன்வருங் கங்காளப் பவனிநலங் கண்டுருகி
யிருவிழியும் புனல்பொழிய விசைந்துசில மொழிந்திடுவான். (௯௨)

தார்பெற்ற சடைமகுட சங்கரகங் காதரநின்
சீர்பெற்ற கங்காளத் திருவுருக்கண் டிளைத்திடலாற்

---

(௮௬) தடுமாறு - தடுமாறுதல். (௮௮) செடிச்சியர் - கெட்டவர்.

கார்பெற்ற நிறத்தடியேன் புண்டரிகக் கண்ணனெனும்
பேர்பெற்ற நலம்பெற்றேன் பெற்றேன்மற் றுளநலமும். (௬௩)

ஓலமிடு மருமறைக்கு மொருவருக்குந் தெரிவரிய
சீலமுனா நீயடியேன் செய்தவத்தின் வெளிப்படலாற்
சாலநலந் தருபுருடோத் தமனெனும்பேர் விளங்கினனென்
யோலவுளார் யாவரெனம் பொருந்துதுதி புகலுற்றான். (௬௪)

வேறு

ஒளிநீறு புனைகோல முடன்ஞால மெவையு
மெளிதாக விடர்தீர விரவாய பலிகொண்
டளிகூர வடிதேடு மடியேன திருகண்
களிகூர வருசீல கங்காள சரணம். (௬௫)

அடன்மேவு கடைநாளி லழிவுற்ற நெடுமால்
சடநால விடுதண்டு தளிரொண்கை மிசைகொண்
டிடர்தீர வடியேனை யினிதாள வருளின்
கடல்போல வருகின்ற கங்காள சரணம். (௬௬)

அதிகோய மதவேழ வுரியாடை யணியீங்
கிதநாலு மறைதேடு மிருபாத குறைவெண்
மதிசூடு சடையாள விடையாளை மருவுங்
கதிவேணு வனமேவு கங்காள சரணம். (௬௭)

பரபோக நாதா பரானந்த ரூபா
நரகாப காரா நடேசா மகேசா
சரபாவ தாரா சபாநாத னேசங்
கரபோத காபால கங்காள சரணம். (௬௮)

வெங்காலன் விழமோது விறலாள திறலின்
பொங்காழி விடமுண்ட புகழாள வுலகின்
மங்காத பேரின்ப வடிவாள பெருகுங்
கங்காத ராதுங்க கங்காள சரணம். (௬௯)

---

(௬௬) கடைநாள் - யுகாந்தகாலம். சடம் - உடம்பு. நால - தொங்க.
(௬௭) இடையாள் - இடப்பாகத்திலுள்ள உமாதேவி.

எரிசேர் கராவின்ப ரின்பாள சரண
மருளுடை காவன்ப ரன்பாள சரணம்
பரிபூர ணுமங்கை பங்காள சரணங்
கருணாக ரா துங்க கங்காள சரணம். (௧00)

## வேறு

என்றுபுகழ்ந் திடுமுகுந்தன் முகநோக்கிக் கங்காள னெங்கோன் மிக்க, மன்றன்மலர்த் துளவணியுங் கேசவகே சரநிரைத்தா மரையாள் செய்யா, டன்றுணையா கியதுணைவா நினதிதையாம் புயம்புகுந்து தங்கு மெம்பால், வென்றிபெறு வரமுனக்கு வேண்டுவன மொழிதியென விளம்ப லுற்றான். (௧0௧)

மாதவநீ ணெடுமாலும் வணங்கியெழுந் தெனையாளும் வள்ளலேயிம்
மேதகைய கங்காள வேடமுட னித்தலத்தின் மேவி யுன்றன்
பாதமலர் கண்டவர்கட் கழியாத முத்திநலம் பாலித் தென்று
மேதமறவமர்ந்தருடற் கிரங்காயென் றினிமைபெற விரந்து தாழ்ந்தான். (௧0௨)

அப்பொழுதெம் பெருமானு மப்படியே யாகவென வருள்பு ரிந்து
முப்பகைதீர்குறு முனிக்கும்பெருந்தவமாரிருடிகட்குமுறைநின்றேத்து
மொப்பரிய தேவருக்கும் யாவருக்கும் வேண்டுவர முதவிச்சென்று
பொய்ப்பகைதீர்கழைவனத்துட்பூங்கோயிலமர்ந்தனனோர்புகழ்க்குன்றென்ன ()

பூதமுடன் பேய்காளி முதலான பரிசனங்கள் புடைசூழ்ந் தெங்குங், கோதகல நெடுங்காவல் கொண்டனவண் டாகண்டர் குழாங்க ளோடு, சீதரனுங் கங்காளன் றிருவடியே சரணென்று சிந்தை நாடி, யாதரவிற் பணிந்தமர்ந்தா னவன்பெருமை தனையெம்மா லறைதற் பாற்றோ. (௧0௪)

மெய்த்தவர்மா தவர்கேண்மின் விடையாளன் கங்காள வேடந் தன்னை, யித்தகைய கழைவனத்தி லணைந்துவந்து கண்டவர்கள் யாவரேனு, முத்தியினை யடைந்தழியாப் பேரின்பத் தமிழ்ந்திடுவர் மொழிந்த மாற்றஞ், சத்தியமே முனிவரரே வேறிதற்கோ ரையமிலை சாற்றுங் காலை. (௧0௫)

---

(௧0௧) கேசரம் - பூந்தாது. (௧0௨) இரங்காய் - திருவுளமிரங்கி யருள் செய்வாய். (௧0௪) அண்டாகண்டர் - அண்டத்திலுள்ளா ரெல்லாருடைய.

மங்காத பெரும்போக முத்திநலம் வழங்குமமை வனத்து நாதன், கங்காளத் திருக்கோலங் காண்பவரே முத்திநலங் காண்பர் காணுர், வெங்காதற் பிணிபெருகிப் பெரும்பாசத் துவக்குண்டு மெலிவுக் காளாய்ப், பொங்காழிப் பெரும்புவியிற் பிறந்திறந்து திரிந்துழல்வர் புகலுங் காலே. (க௦சு)

ஆதலினுற் பவப்பிணிக ளறநினைந்தோ ரனைவோரு மணிநெல்வேலி, மாதலத்தி னடைந்தெனையா ளருளாளன் வடிவுடைய மங்கை பாகன், நீதகற்றுங் கங்காளத் திருக்கோலந் தொழுதகலாச் சேவை செய்வர், மேதகையீர் நீவிரும்போய்ப் பணிமினென வருள்புரிந்தான் மிக்க சூதன். (க௦எ)

அங்கமெலா மணிந்துபெருங் கங்காளன் வருஞ்சரிதை யதிக குய்ய,மிங்கிதனை யுரைத்தனனீங் கிதுபடித்தோர் கேட்டவர்க ளியம்புமெங்கள், சங்கரனுர் கங்காளந் தரிசித்தோ ருற்றகதி தன்னிற் சேர்வர், புங்கவரே யெனவுரைத்தான் சூதமுனி யோர்பதினெண் புராணம் வல்லோன். (க௦அ)

ஐந்தாவது கங்காளவேடச் சருக்கம் முற்றிற்று.

ஆகத்திரு விருத்தம் ௩௧௭.

---

(க௦சு) துவக்கு - கட்டு. (க௦அ) அங்கம் - எலும்பு.

ஆ று வ து :

# வேண்டவளர்ந்த சருக்கம்.

—:0:—

ஓராறு புனைந்தருள்வோ னுமைபாகன் கழைவனத்து
ளீராறு முனிவர்தொழு மெந்தையிரு பதத்தடையும்
பேராறு தருங்காதற் பெருங்கடலாஞ் சூதனுக்குச்
சீராரு மருந்தவர்க ளிருந்தவுரை கிரமுறைப்பாம். (க)

மெய்யுணர்ந்து பொய்வினைதீர் மெய்த்தவனே கழைவனத்துக்
குய்யமாஞ் சிவலிங்கக் கோலமா யமர்ந்தருள்செய்
யையன்வெளிப் பட்டகதை யருள்புரியென் றுரைசெய்தார்
மையலிலா முனிவரானு மனமகிழ்ந்து மொழிகின்றான். (உ)

அருந்தவர்நீர் கேட்டகதை யதிகுய்ய மருந்தவத்தால்
வருந்தியிது கேட்டனனென் வாழ்வனைய தேசிகன்பாற்
றிருந்துதவம் பெருகுமக்குஞ் செப்புவனின் றெல்லீரும்
பெருந்தகைமை யகலாத பேரன்பி னுடன்கேண்மின். (ங)

சங்கினமுஞ் சங்கினங்க டருமுத்தும் வெண்மதியும்
பொங்கியெழுந் தாரகையும் போல்விளங்கி வினைவயல்சூழ்ந்
தங்கணனூர் மூங்கில்வனத் தயற்பொருநைக் கரைமீதின்
மங்கலநல் வளந்தருமூர் மணவைநக ரெனவுளதால். (ச)

காராரும் பெரும்புரிசை கதித்தோங்கு மாநகரிற்
சீராரு முழுதுகண்ட ராமனெனப் பெயர்சிறந்து
தாராரு முடிவேந்தர் தாழ்ந்துதிறை யேந்தவிரும்
பாராரும் புகழ்த்தெய்வப் பாண்டியன்வீற் றிருந்தனனால். (ரு)

அன்னபுகழ்த் தென்னவன்ற னினிமைகொண் டமைவனத்துட்
டுன்னிவிலங் குறுபயங்க டொலைத்தினிமை பெறமேய்த்து
நன்னிழனீர் செறிவித்து நற்றுப்போ னயப்புதவி
மன்னியபாற் பெருஞ்செல்வ வளம்பெருக்கு மோராயன். (சு)

---

(க) உரை - சொன்ன.

தென்னவன்முத் தமிழ்தெரிசந் திரகுலதீ பன்விமலன்
பொன்னடிக்கன் பகலாத பூபாலன் சிறப்பினுடன்
மன்னியளித் தருள்செயலான் முழுதுகண்ட ராமக்கோ
னென்னுமதப் பெயருடையோ னேழைமையே வடிவானோன். (௭)

நிலவுமுடன் மிகவளைப்பு நீண்டுயர்ந்த நெடுந்தாளு
மலஞ்செறியுங் கறைப்பல்லு மான்விளிக்கும் பெருங்குரலு
மலினமிகுங் கருவடிவு மாசுறுகம் பளவுடையுந்
தொலைவினெடுந் தடியுடனே தூக்கியகைக் குடமுமுளான். (அ)

மடமையனங் கிவன்றமிழ்தேர் மாறனுக்கு நாடோறுங்
குடநிறையப் பால்சுமந்து கொண்டணையும் பொழுதெல்லா
மிடமுமைசே ரமைக்கட்டை யிடறிவிழுந் தெடுத்தணையுங்
கடமருவும் பாலினைமுன் கவிழ்த்தெழுந்து கருத்தழிவான். (௯)

திட்டெனவீழ் குடமுடையாத் திறமதனை யதிசயிப்பான்
மட்டவிழுந் தொடைமன்னன் மனங்கறுப்ப னெனவயர்வான்
கட்டமிகுந் திடக்குடப்பால் கவிழ்த்திடுமக் கட்டையினை
வெட்டுவனென் றுருத்தெழுவான் விரைந்துடனே பிறழ்ந்தொழிவான்.

நெஞ்சமழிந் தாயனக னெட்டுயிர்த்து நெடிதிரங்கி
யஞ்சியமைக் கட்டையின தடிக்கவிழ்ந்த குடத்தின்கண்
மிஞ்சியபா றனையெடுத்து வேய்வனத்தை யகன்றுவிறல்
வஞ்சிமண லூர்ப்புறத்து மன்னவன்றன் மனையணைவான். (௧௧)

இறைமுறைசெய் பவரெல்லா மிடையகொடு வருகுடப்பால்
குறைவதென்னென் றனைதோறுங் கோபித்துப் புடைக்கவரா
வறைவதொரு திறமில்லா தஞ்சிவிரைந் தோடிடுவா
னிறையவினிக் கொடுவருவ னெனவகன்று நிரைசேர்வான். (௧௨)

இன்னணமா கியநாளி லெவ்வுலகுந் திறைகொடுவாழ்
தென்னவனு மொருநன்னாட் செழும்பொதுவர் தமையழைத்துக்

---

(௭) பூபாலன் - அரசன். மதம் - கெருவம். (அ) மலம் - அழுக்கு. விளிக்கும் - அழைக்கும். மலினம் - குற்றம். (௯) அமைக்கட்டை - மூங்கிற் கட்டை. (௧௧) வஞ்சி - தருமதேவதை. (௧௨) இறைமுறைசெய்பவர் - அரசனுடைய நீதி செலுத்தும் மந்திரிமார். ஆநிரை - பசுக்கூட்டம். (௧௩) பொதுவர் - இடையர்.

கொன்னாலவும் பானிறையக் கொண்டுவரக் கற்பித்தா
னன்னவருங் குடப்பால்கொண் டரையன்மனை நிறைத்தனரால். ()

மற்றவனு மன்றுமிக மனம்பயந்து பயங்கொண்டு
முற்றிடுமவ் வழியில்வா முன்போல விடறிவிழுந்
திற்றதுதன் றாழியென வெழுந்துகுட மிஞ்சியபால்
கொற்றவன்றன் பொற்கோயில் கொண்டணைந்து புகுந்தனனால். ()

அறைகழற்பூ பதியணைந்த வாயனைக்கண் டிவன்குடப்பால்
குறையவரக் காரணமென் கூறுவிரென் றுரைசெய்தா
னிறைமுறைசெய் பவர்யாரு மெய்துமவன் செய்திதனைப்
பொறைதிகழ்மன் னவன்கேட்ப வடிபணிந்து புகல்கின்றார். (கரு)

சுடரிலைவேற் கரமன்ன தூரிசனிவ னொருநாளுங்
குடநிறையப் பாலெடுத்துக் கொண்டுவந்த திலையாங்க
ளிடையவிது வென்னென்னி லியன்றவகை தெளிவுரையா
னடலையிழந் தஞ்சிடுவ னடிக்கவெனி லொளித்தகல்வான். (கசு)

ஈங்கிடையன் செய்ம்முறையீ திவன்குடப்பால் குறைந்துவரும்
பாங்கறியோ மெனவுரைத்தார் பகைதெறுகை நெடுவேலான்
றாங்கரிய பெருங்கோபந் தரித்திருகண் டழல்சொரிய
வாங்கணையும் பொதுவனைமுன் னழைத்திதனை யறைகுவான். (கஎ)

அண்டவுனக் கிக்குணம்வந் தடுத்ததுநன் றலநாளுங்
கொண்டணையுஞ் செழுங்குடப்பால் குறைந்துவரக் காரணமே
துண்டெனினின் றுரையென்றா னுயராம னுளநடுங்கி
வண்டலர்தார்க் கைதவன்கான் மலர்பணிந்து மொழிகின்றான். ()

அண்ணலையென வெவ்வுயிர்க்கு மருள்வழங்கி யுலகாளுந்
தென்னவமன் னவவென்னை தெய்வீக மோவறியே
னின்னலுற வரும்வழியிற் கிளைக்கட்டை யிடறிவிழுந்
துன்னரிய குடப்பாலை யொருமிக்கக் கவிழ்த்தொழிவேன். (ககூ)

இவ்வழிவிட் டொருவழிவே றெய்துவமென் றெய்திடினு
மவ்வழியி லெனையறியா தணைந்துகுடப் பால்கவிழ்ப்பன்

---

(கச) பயம் - பால். (கசு) அடலை - வலிமையை. (கஅ) அண்ட - இடையனே. (ககூ) கிளை - மூங்கில்; மேலுமதுவே.

றெவ்வரென வழியின்கட் செறிந்திடறி விழுநாளு
மெவ்வமிழைத் திடுமிதனுக் கென்செய்வோ மெனவயர்வேன். (௨0)

கொலைதிகழ்கைக் கோடாரி கொண்டணைந்திக் கட்டையினை
நிலனுறவெட் டுவமென்று நினைப்பனுடன் மறப்பன்மன
முலையவிழுங் குடமுடையா தருளுதல்கண் டெடுப்பனதி
லலமுறுபால் சிறிதிருக்கு மதுகொண்டிங் கணைந்திடுவன். (௨௧)

இன்னவகை யாலடியே னெடுத்துவரு மீர்ங்குடப்பா
றன்னளவு குறைந்ததெனச் சாற்றியயர்ந் தனனின்றான்
மன்னவனங் கதுகேட்டு வன்னியிடை நெய்சொரிந்தா
லன்னமனச் சினமேற்கொண் டாயன்முகந் தனைநோக்கி. (௨௨)

மட்டில்பெருங் கொடுவஞ்ச மனக்கசட விடுமதியின்
கட்டுறவிப் பொய்களெலாங் கழறினைநன் றினியதனை
விட்டிடுநின் பொற்குடப்பான் மேவாமற் குறைந்தொருநாண்
முட்டிடினு முன்கரும முடித்திடுவ மொழிந்தனமால். (௨௩)

இற்றைவரை புரிபிழையும் பொறுத்தனமே லிருந்தகைமை
யுற்றினிதுப் யெனவுரைசெய் துவர்ப்புமனத் துடன்விடுப்ப
மற்றவனு மெய்ந்நடுங்கி மனமயங்கி யடிதாழ்ந்து
கொற்றவனே மேலினியோர் குறைவரா தெனவகன்றான். (௨௪)

ஆங்கதனும் பொதுவன்விரைந் தானிரைச்சென் றக்கணத்திற்
றீங்குறுமொண் கோடாரி தெரிந்தெடுத்துத் திரங்கிடையிற்
பாங்குபெற வணைத்துநெடும் பசுங்கொடியாற் பிணிக்கொண்டு
வாங்கிருள்சே ரிரவெல்லாம் வழுத்தரிய மனத்துயராய். (௨௫)

உண்டிவிரும் பாதுநெடி துயிர்ப்பனயர்ந் தொருசற்றே
கண்டுயில்வ னுடன்சிந்தை கலங்கியழிந் தெழுந்திருப்பன்
பண்டைவினைப் பயனோவன் பணைக்கட்டைப் பகைநினைவ
னெண்டருமித் தகையிடைய னெய்தியசீர் வைகறையின். (௨௬)

---

(௨௧) அலமுறு - அமைவுற்ற. (௨௩) முட்டிடின் - தவறினால். (௨௫) கோடாரி - (இடைநீண்ட விகாரம்.) திரங்கு - திரைந்த. பிணி - கட்டு. (௨௬) பணை - மூங்கில்.

சக்கராயுதன் சதுமுகன் சதமகன் பவனன்
புக்க பாவகன் றிவாகர னிசாகரன் புகழ்சேர்
முக்க ணுபகர் பசுங்கழை முத்தர்தா ளருச்சித்
தக்க ணீள்பெரு வரமெலா மளித்திடப் பெற்றார். (ருச)

தருந்த ராதலம் புகழ்நெல்லைத் தலத்தின்மா தவர்தா
முருந்தன் மாநள னிராமன்மன் புரூரவா முறையே
திகந்தர் தாம்புகழ் தருமபுத் திராதிபூ பதிகள்
புகுந்தி றைஞ்சிவேய் முத்தர்தாள் புகுந்தருள் பெற்றார். (ருரு)

வேணு மாவனம் விரும்பிய விண்ணவ னெனையா
டாணு வாகிய சங்கரன் றன்னைநற் றவத்தீர்
பூணு மாதர வுடன்றொழப் புவியின்மேற் பெற்றோ
ராண வக்குறும் பறுத்துட னமருல காள்வர். (ருசா)

வேறு.

சொற்றவிச் சருக்கந் தன்னைச் சொற்றிடக் கேட்டோ ரின்பம்
பெற்றுநற் கதியைச் சேர்வர் பின்னர்வெம் பிறவி யெய்தார்
கற்றவர் புகழு நெல்லைக் கருணைசேர் வடிவு நாத
னுற்றுநெல் வேலியான திறத்தினை யுரைக்க லுற்றாம். (ருஎ)

ஆறாவது வேண்டவளர்ந்தசருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (நஎச)

---

(ருச) சதமகன் - இந்திரன். பவனன் - வாயு. பாவகன் - அக்கினி. நிசாகரன் - சந்திரன். அக்கண் - அவ்விடம். (ருரு) திகந்தர் - திசையின் எல்லையிலுள்ளவர்; திக்குப்பாலர்.

ஏழாவது:

# நெல்வேலிச் சருக்கம்.

[:o:]

மன்னுமருந் தபோதனரின் மதிதிகழ்சூ தனைநோக்கி
முன்னவனும் மேவயீன்ற முத்தனொரு சிவமறையோன்
செந்நெறனக் கொருவேலி யாயதிறஞ் செப்பென்னத்
தன்னிகிர்மா முனிவரனுந் தகைமைபெற மொழிகுவான். (க)

இருண்மலவெவ் வினைநீங்கி யியல்புறுமா தவர்கேண்மின்
முரணுறவம் புவிமீது முன்னமொரு பன்னிரண்டு
வருடமழை யின்றியுயர் மாரிமறுத் தொழிந்தனதீ
வெருண்மருவிச் சராசரங்கள் மிகுதுயர மடைந்தனவால். (உ)

காலையெழும் பரிதியும்வெங் கதிர்பரப்ப வெந்நிலமும்
பாலைநில மாய்நதிகள் பாய்குளங்க ளோடைகள்சூழ்
வேலைகளுஞ் சுவறினபார் விரிந்துகமர் வெடித்தனபின்
சாலவுநெல் லகங்குறையத் தருமங்கள் குறைந்தனவால். (ந)

தேசமெலாம் வளஞ்சுருங்கச் செந்தழலோம் புதனெகிழ்ந்து
பூசுரரும் புலம்பினர்வான் புத்தேளி ரவியுணவின்
மாசுறுவெந் துயரடைந்தார் வருணவாச் சிரமத்தின்
பேசுறுநன் னிலைபெயர்ந்தார் பெற்றிமையுற் றவர்யாரும். (ச)

தனையர்முகம் பாராது தாயருநற் றந்தையரு
மினையலுடன் றனித்தனிவே றிருந்தடகு நுகன்றிடுவ
ரனையவரும் மவ்வகைய ராயினரென் றலென்னே
மனைவியருங் கணவர்முகம் பாராது மனமழிந்தார். (ரு)

தேனலர்நற் பெருமரங்க டீந்துதுகள் பட்டனவெங்
கானிலுறை விலங்குகள்வெம் பறவைகளின் கணமாய்ந்த
மானிடரும் பெரும்பசியால் வாடிமிக மானமழிந்
தூனுலவு பிணமருந்தி யொழிந்ததற்கு மளவிலையால். (சு)

---

(உ) தீ - கொடிய. (ந) கமர் - பிளப்பு. (ச) பெற்றிமை - தன்மை.
(ரு) இனையல் - வருந்தல். அடகு - இலை.

இன்னணமா கியகாலத் திருங்கலையா வையுந்தெரிந்த
தன்னிகரில் சிவமறையோன் றழைத்தகழை வனத்துறையு
முன்னவன தருட்பூசை முட்டாத வகைசெய்து
துன்னுவனங் கவனுக்குந் தொலைந்ததுநன் மனைவளமும். (எ)

ஆங்கதுகண் டுடைமையாளு மமையின்று தருமுத்த
ஞோங்கியமெய்ப் பூசையினுக் கொருவகையுங் காணும
லேங்கிமன மிரங்கியினி யென்செய்வோ மெனநினைந்து
தாங்குதுயர்ச் சிந்தையனாய்ச் சந்நிதிநின் றிதுசொல்வான். (அ)

அலைகடனஞ் சயின்றமரர்க் கமுதளிக்கும் பரனேயிவ்
வுலகமெலாந் துயர்தீர வுன்னருளான் மழைபொழிவித்
திலகியமெய்ப் பூசையுநீ யின்பமுறக் கொண்டருளி
யலமுறுநா ளெந்நாளின் றருளாயென் றினிதிறைஞ்சி. (கூ)

நாட்டியல்வற் கடகாலத் திடர்நினைந்து நலிதுயரங்
காட்டியசிந் தையினன்றேன் கைக்கொணர்ந்த நெல்லினைநன்
ஞட்டமொரு மூன்றுடைய நம்பர்தமங் கணத்துலரப்
போட்டலர்மஞ் சனமெடுப்பான் பொருநைமா நதியணைந்தான். (கo)

வேறு.

திருநதிக் கடைந்தவன் றிரும்பு முன்ன மெம்பிரா
னருளினிற் கடற்படிந் தணைந்து கொண்ட லெங்கணும்
வெருவுறப் பரந்திருண்டு வெள்ள மெங்கு மன்னுறப்
பொருதிரித் தெழுந்துகால் விழுந்து நீர்பொ ழிந்ததால். (கக)

மன்னு சோனை மாரி பெய்யு மாறுகண்ட வேதியன்
பன்னு மங்க ணத்தினெற் பரப்பிவைத்து வந்தனன்
கொன்னு லாவு நீர்வளைந்து கொண்டுபோகு மென்செய்தே
னின்ன தீர வேறுநெல்லு மில்லினில்லை யேயெனு. (கஉ)

மான்மு யங்கு நெஞ்சனாய் மயங்கினன் பசுங்கழைப்
பாலனாரு மையகோ பசித்தி ருப்ப ரோவெனுச்
சால வுந்த ளர்ந்துளஞ் சலித்தனன் றரிப்பிலன்
சீலயோகர் கைதொழுஞ் சிறந்த கோயில் சென்றனன். (கங)

---

(எ) முட்டாத - முட்டுப்படாத. (கூ) அலமுறும் - அமைவுறும். (கo) வற்கடம் - பஞ்சம். அங்கணம் - முற்றம். (கஉ) சோனைமாரி-விடாமழை.

வேறு.

எந்தையெப் பொருட்கும் வேலி யென்னநின் றருள்வேய் முத்த
னந்தணன் றுயரந் தீர்ப்பா னங்கணங் கணத்து வெய்யில்
வந்துதா னெறிப்பச் செய்து மழைநனைந் திடாது பாத
விந்தநெந் திடநெல் லுக்கு வேலியாய் நின்றான் மாதோ. (கச)

அன்றுவா னமர ரெல்லா மரிவைமார் மனைக டோறுஞ்
சென்றிரந் துழல்வோ னெற்குத் திருந்திய வேலி யாகி
நின்றன னென்று போற்றி நெல்வேலி நாத னேயென்
றென்றுபூ மாரி பெய்தா ரியங்கிய முழங்க வார்த்தார். (கரு)

சென்றவே தியனுங் கண்டு சிறிதுநெஞ் சனையா வாற்று
னின்றிலன் பணிந்தெ ழுந்தா னிமலனே போற்றி போற்றி
யென்றுநின் முடி ஞன்சூழ்ந் திருநிலங் குலுங்கப் பாய்ந்தா
னென்றவென் னுயிர எித்தா யுத்தமா வெனவு ரைத்தான். (கசு)

கோவின்மே லேறி முன்னங் குலகிரி வளைத்து நண்பர்
மூவருந் தப்ப மேவார் முப்புர மெரித்த வீரர்க்
காவகை மேக மிந்நெல் லணங்குறு வகைபெய் வித்தல்
பூவின்மேற் புதுமை யோவென் றரன்றிறம் புகழ்ந்தான் பின்னர்.

உணங்குநெல் லெடுத்துக் குத்தி யொல்லைநெல் லரிசி யாக்கி
யணங்கழ லுலையிற் பெய்தின் னமுதமைத் தடைவு சேர
மணங்கமழ் கறிக ளாக்கி மனமகிழ்ந் தானுக் கேற்ப
விணங்கவே யமுது செய்வித் திறைஞ்சிநற் கதிய டைந்தான். (கஅ)

கையின்மான் மழுவேய் முத்தன் கனமழை தருத லாலே
வையக மெல்லா மாறு வளஞ்சுரந் தனமேல் வானோ
ரையரந் தணர்கள் வேள்வி யவியுண வருந்தி வாழ்ந்தார்
செய்யமா தவரு முய்ந்தார் யாவையுஞ் செழித்த வன்றே. (கசு)

ஆலபோ சனவேய் முத்த ரங்கணத் துணங்கு நெற்கு
வேலியாந் திறத்தி னுனெல் வேலிநா யகரென் றுனர்
மாலெலா மகற்றும் வேணு வனமுநெல் வேலி யான
தேனுமித் தலத்தின் மேன்மை யாவர்தா மிசைக்கற் பாலார். (உ௦)

---

(கச) அங்கணங்கணத்து - அவ்விடத்துள்ள முற்றத்தில். விந்தம் - அரவிந்தமென்பதன் முதற்குறை. (கஅ) அணங்கு-அழகு. (உ௦) ஆலம்-விடம்.

கடிதுவிரைந் தாவின்பால் கறந்துகுடங் களினிறைத்து
முடியிசைக்கொண் டங்கணைந்தான் முன்போல மூளைக்கட்டை
யடியிடற நிலமிசைவீழ்ந் தக்குடப்பால் கவிழ்ந்தொழிய
விடியெனமுன் பதிர்த்தெழுந்தா னெட்டுமிரண் டுந்தெரியான். (உஎ)

வேறு

கோரங்கொடு நீடதி கோபவகங்
காரங்கொடு மீதரை கட்டியவெம்
பாரங்கொள் கொடாரி பறித்தடுகை
வீரங்கொடு வெட்டினன் வெட்டியகண். (உஅ)

நதிகொண்டெழு வெள்ள நவிற்றிடமுன்
குதிகொண்டு விழுங்குரு திப்புனலங்
கெதிர்கண்டன னஞ்சி யிரங்கினன்மான்
மதிகொண்டிது வென்னென மாழ்கினனால். (உகூ)

பொன்றுதெழு மிப்புது மைத்திறநீள்
மின்றேள்வரை வென்றிகொண் மீனவனுக்
கின்றேடி யுரைப்ப மெனக்கருதிச்
சென்றோடி யணைந்திது செப்பினனால். (௩௦)

ஆய்வுற்றுயர் மன்னவ வங்கிடறும்
வேயிற்கிளர் கட்டையை வெட்டினன்வெந்
தீயிற்குரு திப்புனல் செந்நதியிற்
பாய்வுற்றது நீடிதொர் பண்பறியேன். (௩க)

பகர்வுற்றதி னீடிய பண்புருவ
மிகவுற்றுயர் மூல விலிங்கமெனத்
திகழ்வுற்றது கண்டு தெளிந்திடநீ
மகிழ்வுற்றெழு கென்று வழுத்தினனால். (௩உ)

ஆயன்சொல் செவிப்புக வாய்புகழ்மன்
னேயுஞ்செய லற்புத மித்திறம்யா

---

(உஎ) கடிது விரைந்து - (இருபெயரொட்டு) மூளை - மூங்கில். எட்டுமிரண்டும் - அகரமும் உகரமும். அ உ அறியா அறிவிலிடை மகனே யென்றூர் பிறரும். (உஅ) கொடாரி - (கோடாரியின் விகாரம். மேலுமதுவே) கண் - மூங்கில். (உகூ) நவிற்றிட - செய்ய.

மேயங் கெதிர் காணாது மேவுதியென்
றேயங்கவ னோடத ரெய்தினால். (௩௩)

கோபாலன் விரைந்ததர் கூடிவரும்
பூபாலனை முன்கொடு போய்நயனத்
தீபாலனை வெட்டிய சீரிடமுற்
றேபாலன காணுதி யென்றவுடன். (௩௪)

மாறுத நெடும்புகழ் மன்னவனு
மாறூர்சடை யைம்முக னார்முடிமே
லூறுப்விழு சோரியொ டுற்றுறல்கண்
ணேறுவிது வந்ததென் னென்றறியான். (௩௫)

வேறு.

செய்ய நாயகற் கருதுநேர் சென்றன னின்று
ஐய னேயிதற் கென்செய்கே னருடியென் றிசைத்தான்
மெய்ய னேயென விழுந்தெழுந் தலறிமெய் வேர்த்தா
னுய்யு மாறினி யெங்ஙனென் றுருகிநெட் டுயிர்த்தான். (௩௬)

கடைச்சி வந்தவேல் விழிப்பெருங் கனதனக் குடமின்
னிடைச்சி பங்கனை வெட்டினை யிடையனீ கெட்டே
னடைச்ச வெங்கொடும் பாவியே னறையுமா றினியென்
கிடைச்ச நின்மொழி கேட்டிலேன் முனமெனக் கிளந்தான். (௩௭)

கன்னி காவலன் பின்னரெங் கன்னியோர் பங்கன்
சென்னி மேல்விழுங் குருதியைச் செங்கையாற் றுடைப்ப
மன்னி வீழ்ந்திடா தொழிந்தது மற்றது கண்டே
யின்ன றீர்ந்துள மகிழ்ச்சிகொண் டிறைஞ்சின னிசைப்பான். (௩௮)

மெத்தி நீள்கழைக் கட்டையின் விளங்கிடு மொருவேய்
முத்த னார்சிறுத் திருந்தருண் முறையினா லெனையா
ளத்த னேவளர்ந் தருளென வண்டகோ ளகைச்சென்
றுப்த்த பேருருக் கொடுவளர்ந் தோங்கிமுன் னின்றான். (௩௯)

(௩௩) அதர் - வழி. (௩௪) தீபாலன் - அக்கினிக்கண்ணுற்ற நெற்றியுடையோன். பாலன - காப்பாற்றுமரசனே. (௩௫) கண்ணேறு - கண்திட்டி. (௩௭) அடைச்ச - அடைத்த. கிடைச்ச - கிடைத்த. (௩௮) கன்னிகாவலன் - பாண்டிநாடுகாக்கும் பாண்டியராசன்.

வந்து பாண்டியன் வேண்டிட வளர்ந்தரா யகற்கண்
டந்த ராதியர் மிகப்புகழ்ந் தலர்மழை பொழிந்தார்
புந்தி நாரத ராதியர் புகழ்ந்திசை கொண்டார்
பந்த நீங்கிய மாதவர் யாவரும் பணிந்தார். (௪0)

தென்னர் வேந்தனு மொருபரன் றிருவடி தொழுது
தன்னி னேயமே மாடவசமாய்த் தன்கணீர் பொழிய
வென்னை யாளுதற் கித்தனை யருள்கொலோ வென்று
பன்ன ரும்புகழ் பாடின னாடினன் பணிந்தான். (௪௧)

செங்க ணனுய ரெண்கணன் றேடியுங் காண
வங்க ணவொரு முக்கண வரவமர் புயங்க
கங்க ணபரி பூரண காரண வாரு
மெங்க ணயக போற்றியென் றெழுந்தன னிசைப்பான். (௪௨)

அளந்து காணுதற் கரியவெம் மண்ணலே யரனே
கிளர்ந்த நற்கிளை யுதித்தெழுங் கிளைப்பெருஞ் செல்வா
வளர்ந்தெ ழுந்திறம் புதுமையோ மன்னுமர்ச் சனையோர்
தளர்ந்தி டாவகை சூழுந்தி யென்றுமுன் றாழ்ந்தான். (௪௩)

கரும்பு நேர்மொழி பங்கனர் வேம்பினோன் கண்ணி
விரும்பு பார்த்திவன் காண்குற வேண்டமுன் வளர்ந்து
பரம்பு மவ்வுருக் குறுகினர் பங்கயன் முதலோ
ரரும்பு மன்பினர் யாவரு மதிசயங் கொண்டார். (௪௪)

திருந்து மன்னவ னளவிலா மகிழ்ச்சியிற் சிறந்து
பரிந்து வேய்தரு முத்தனோர் பவளமால் வரைபோ
லிருந்த தோற்றமுன் கண்டுளத் தெழுந்தபே ரன்பாற்
பொருந்து சீர்த்தியின் பெருந்துதி புனையலுற் றனனால். (௪௫)

ஆயன் மோதுகைக் கொடாரியா லமையவெட் டுண்டு
சீயு லாவுபுண் கொடுதிகழ் சென்னியாய் சரண
மாயமால்கொடு வேண்டவே வளர்ந்துபா ருலகி
னாபி னேனைபாண் டருள்புரி நம்பனே சரணம். (௪௬)

ஆதி நாயகிக் கிடந்தரு மழகனே சரணங்
கோதி லாமணக் கோலமாங் குழகனே சரணங்
காதன் மாதரை மயல்கொள்கங் காளனே சரணந்
தாதை யேயரு ணடமிடுந் தாளனே சரணம். (சஎ)

என்று போற்றினன் பாற்பசு வேவையு மன்பா
னின்ற வித்தன னிருக்குமெய் யுருக்குமெய் நிமல
னன்றி கூர்மலே மகளுட னயந்திருந் தருளக்
குன்று போலுநீ டாலயங் கொட்புற வெடுத்தான். (சஅ)

வீறு நித்திய விழவுநை மித்திய விழவு
மேற தேறிய பரமனுக் கன்புட னியற்றி
மாறி லாமகப் பூசையும் வயங்குறச் செய்து
கூறு பாண்டியன் மணவையிற் குடிபுகுந் தனனால். (சகூ)

மதிம யங்குறு பொதுவனு மதியணிந் தருளோ
டதிக செப்புமன் றுடித னுருவமென் றறியா
திதுவு மோர்களைக் கட்டையென் றெண்ணிவெட் டினனன்
றுதவு வெந்துயர் கொண்டழிந் துற்றவன் பினனாய். (ரு0)

பால நேத்திர ராயவெய்ப் பாலனு ருக்கியா
மேல வேகுடப் பால்சுமந் திடுவனென் றியம்பிச்
சீல மேற்கொடு பாலெலாந் தினந்தினங் கொடுவந்
தாலு மன்புட னூட்டுவித் தருங்கதி யடைந்தான். (ருக)

இத்தி றத்தினு லியம்புமக் குய்யநீ டிலிங்கஞ்
சத்தி யத்தவர் தொழவெளிப் பட்டது தயங்குஞ்
சித்தி முத்தியின் பயன்பெறு தெய்வமா தவரே
யுய்த்து ரைத்தன னவ்விலிங் கப்பெய ருரைக்கில். (ருஉ)

ஊன்று வேயகத் துதித்தலா லுலகெலாம் புகழ்வே
யீன்ற முத்தெனும் பெயரினு லியைந்ததவ் விலிங்கந்
தோன்றி யுள்ளவர் யாவருந் தொழுதிடப் பெற்றான்
மூன்று கண்ணுடைப் பரமராய் முத்தியை யடைவார். (ருங)

(சஅ) கொட்பு - வளைவு. (சகூ) மகப்பூசை - ஓமாக்கினியோடு கூடிய பூசை. (ரு0) செப்புமன்று - தாமிரசபை.

மாதபோ தனரே யெங்கள் வள்ளலிவ் வாறு மன்னும்
பூதலந் துயரந் தீரப் பொலிவுறு மழைபெய் வித்து
வேதியன் பரியு நெற்கு வேலியாய் நின்ற கதை
யீதென வுரைத்தான் சூத மாதவ னென்னு மேலோன். (உக)

ஏழாவது நெல்வேலிச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௩௯௬.

## எட்டாவது:
# தீர்த்தச் சருக்கம்.

ஆய்ந்தநெறி முனிவனைப்பார்த் தருமுனிவர் சிவஞான
வேந்தபோ தனபிரம விருத்தபுரத் தினில்வினைமா
றீந்தொழியத் திகழேம புட்கரிணி யுடன்சிந்து
பூந்துறையின் பெருமையெலாம் புகன்றருடி யெனப்புகல்வான்.

இறையருண்மெய்த் தவர்கேண்மி னினித்தீர்த்தப் பெருமைகளை
யறையவெனி லெனக்கெளிதோ வாயினும்யான் சிறிதுரைக்கேன்
முறையினருட் பரன்முன்னு முகுந்தனையும் விரிஞ்சனையு
நிறையருளிற் படைத்தருளி நீடுலகி னிறுத்தியபின். (உ)

ஆங்கமரு மிருவரையு மம்புவியின் சிருட்டிதிதி
நீங்கள்புரிந் திடுமென்று நிகழ்த்திமறைந் தனனிறையோன்
பூங்கமலா சனன்மடத்துப் புணர்மதத்தி னறியாது
யேங்கியரும் புட்கரிணி மருங்கிலனைந் தேகினனால். (௩)

எய்துமவ னக்கரையி லிருந்துசிவத் தியானமுடன்
மெய்திகழுந் தவம்புரிய விடையோனு மத்தடத்தி
னைதுருவாஞ் செம்பொனிறத் தங்கிசமா யெழுந்தலரோ
னுய்திறத்தின் சிருட்டிசெய வுபதேசஞ் செய்தனனால். (௪)

தேமலரோற் குபதேசஞ் செய்தளித்தோ னவ்வுருவ
மாமலர்நற் றடமூழ்கி மறைந்துபுனல் வடிவாறு

(உக) பரியும் - அன்புறும். (௧) போதனை - போதித்தலுடையாய்.
(௩) மடம் - அறியாமை. (௪) அங்கிசம் - அமிசம்.

னேமநிறந் தங்குவரு மெய்தியதின் மறைந்துறலாற்
பூமிசையத் தடமேம புட்கரிணி யாயினதால். (௫)

நவ்விமறி தரித்தபிரான் ஞாலத்தி லுயிர்களெலாந்
திவ்வியநற் கதிபெறவித் தீர்த்தவடி வாய்நின்று
ளவ்வளவோ வித்திற்செம்பொ னம்புயமும் பூத்திடலான்
மைவினைதீர்த் தருள்பொற்றா மரைத்தடமென் றிலகியதால். (௬)

பாதாள வாகினியாம் பாடலங்கம் பாநதியுந்
தாதார வீங்கலர்பொற் றாமரைவா வியுநாளு
மாதான பூமிசைவாழ் மாக்களெலாம் படிந்தெழுந்து
நீதான தொழிந்திடநித் தியசானித் தியஞ்செயுமால். (௭)

இத்தடப்பொற் றாமரையி லெய்திவந்தி யாரேனும்
பத்தியுடன் படிந்தெழிலே பாவமும்போ யருள்பெறுவார்
சத்தியமிங் குரைத்தமொழி சந்ததமுந் தேவரெலாம்
வைத்தவரு ளுடனிந்த மாதீர்த்தக் கரைசெறிவர். (௮)

தேசுமலி தருவசிட்டன் றிகழ்வாம தேவனருட்
காசிபன்சா பலிகதிர்த்த பாராசரனற் புக்மௌன்றும்
வீசுவிபா தன்விசுவா மித்திரன்பிங் கிருடியிவ
ராசைபொரெட் டினுமேவி யத்தீர்த்தச் சேவைவிடார். (௯)

இன்னவகை தேவர்களு மிருடிகளு மிகநெருங்கி
மன்னியபொற் றாமரையின் மகிமையுரைத் திடவெளிதோ
பண்ணுசிவ சிராத்தமதிற் பண்ணிலவர் சிவலோகந்
துன்னுவர்நற் றியானசெபஞ் சூழிலவர் சிவமாவர். (௧௦)

போற்றலரி தாமேம புட்கரிணித் தீர்த்தத்திற்
காற்றளைந்த மனிதர்மிரு கங்கள்பற வைகள்கிருமி
சிற்றுயிரு கீடங்கள் சேர்ந்ததருப் புற்கொடிகள்
சாற்றுசரா சரமெவையுந் தாவில்சுவர்க் கம்புகுமால். (௧௧)

---

(௫) ஏமம் - பொன். (௬) நவ்விமறி - மான். (இருபெயரொட்டு.) (௭) பாதாளவாகினி - பாதாளத்திற் செல்லும் கங்கை. நித்தியசானித்தியம் - மோக்ஷங்கிட்டுதல். (௧௧) கீடம் - வண்டு.

மன்றல்விரிந் தலர்பொற்றா மரைத்தடத்தி லறியாது
சென்றொருநாட் படிந்திடினுஞ் செல்வமுறு மிடிவினைநோய்
குன்றுமொரு காலத்துங் குன்றாத திருவருளு
மொன்றுமவ லங்கவலை யொழிந்துபிறப் பிறப்புமறும். (௧௨)

போயொருகாற் றிகழேம புட்கரிணித் தடம்படியி
லாயிரங்கோ தானமினி தளித்தபலன் வந்தணுகு
மேபவிதிற் படிந்தொரிர விருக்கிலா னுலகனைவ
ராயபல நாட்படிந்தோர்க் குளபயனை யளப்பரிதால். (௧௩)

பூரணையிற் கதிரின்மதி புகுநாளி லயனங்க
ளோரிரண்டின் விடுக்களின்மற் றுள்ளமா தப்பிறப்பிற்
சாரும்விதி பாதத்திற் சந்திரசூ ரியர்ப்பாந்த
ளாரவிழுங் குறுகாலத் தணிமாசி மகநாளில். (௧௪)

புந்தியுற வணைந்தேம புட்கரிணித் தடம்படிந்து
தந்தம்வகைக் கிடான தானமளித் தளைமுத்தா
மெந்தையையுங் காந்திமதி யெனும்பசும்பூங் கொடியினையும்
வந்திசெய்வோர் பலனயுத வருடத்தி னுரைப்பரிதால். (௧௫)

பூகநெடும் பொழினெல்லைப் புகழ்ப்பொற்றா மரையினணைந்
தாகமுட னீளம்பரிதி யுதித்தெழுகா லையிலெழுந்து
மாகமுழுக் கிசைவோர்கள் வானவர்கள் சூழ்ந்திறைஞ்ச
மோகவினைக் கடனீந்தி மொழிமுத்திக் கரைசேர்வர். (௧௬)

பூதலம்விண் சுவர்க்கமிசைப் பொலிதீர்த்த மத்தனையு
மாதரவி னுலருகி லடைந்துகுடைந் திடும்பலனிற்
பார்திகழ வொருகோடி பலனதிகம் பெறுவார்கள்
மாதரார் புகழ்ப்பொற்றா மரைத்தடத்திற் படிவோர்கள். (௧௭)

தேக்குநதிச் சடைமுடியார் திருமுடியே பரவுபெரு
வாக்குமளித் திடுமந்த மாதீர்த்தப் புகழனந்த
நாக்கொடுமீங் குரைப்பரிது நவில்சிந்து பூந்துறையின்
பாக்கியநற் பெருமைதனைப் பகர்ந்திடநற் றவர்கேண்மின். (௧௮)

---

(௧௪) விடு - விஷு. விதிபாதம் - ஓர் புண்ணிய காலம். (௧௫) வந்தி - வணக்கம். அயுதம் - பதினாயிரம். (௧௬) மாகம் - மாசிமாதம். (௧௭) மாதர் - அழகு.

நித்திலமார் தருமுத்த நிரைகொழித்து மணிகொழித்துத்
தத்துதிரை யெறிந்துவருந் தண்பொருநை யாநதிநீ
டுத்தரவா கினியாகி யுயர்ந்தெழுந்த தருகுளிர்வேய்
முத்தர்பெருஞ் சந்நிதியின் முன்குணபால் விளங்கிடுமால். (௧௯)

ஆதிதனின் முக்கோடி யரைக்கோடி தீர்த்தமணைந்
தோதருமு வுலகத்தி னுளமலருங் கொணர்ந்துபெருஞ்
சீதமலி பொருநையின்முன் சித்தியுறப் படிந்தெழுந்து
போதுதலா விதுசிந்து பூந்துறையா மருவியதால். (௨௦)

தேயமலி யித்தகைய சிந்துபூந் துறைப்புனலிற்
போயொருகான் மூழ்கினர்முன் பூதகணம் புடைசூழ
மேயவேய் வனநாதன் வெள்ளைவிடை மீதேறி
நேயமார் தருகாட்சி நித்தியமுங் கொடுத்தருள்வன். (௨௧)

பூமதுவந் திழிசிந்து பூந்துறையிற் படிந்தவர்பான்
மாமகளு நாமகளு மன்னியிடை விடாதுறைவர்
காமர்பெற நினைந்தபொருள் கைகூடு மெய்கூடுந்
தீமைவினை நீங்குமிருஞ் செல்வமெலாங் குடிபுகுதும். (௨௨)

சிந்துபூந் துறையொருக்காற் சிந்திக்கிற் றெரிசிக்கி
லந்தநீர் பரிசிக்கி லந்தமிலாக் கதியடைவர்
பந்தமாம் வினையவையும் பரிதியின்முன் பனிபோல
நைந்துமாய்ந் துறுநல்ல ஞானமிசைந் திடுமன்றே. (௨௩)

போதெலாம் விரிசிந்து பூந்துறையிற் படிந்தியன்ற
தாதிமா மதிசூடு மமலனிரு பதத்தன்பாம்
வேதமா தவர்க்குதவு மெய்த்தவன்யா வனொருவன்
சோதிசேர்ந் தெழுமூன்று சுற்றமுடன் கதியடைவன். (௨௪)

ஆர்த்தசீ கரத்தரங்க வம்பொருநை நதியடிக்கோர்
தீர்த்தமாய் விளங்குவது சென்றுமூழ் கியபலன்கள்
பார்த்தசீர் தருசிந்து பூந்துறையின் மூழ்கினர்பாற்
கூர்த்துமே விடுமினியார் கூறுவரிங் கிதன்பெருமை. (௨௫)

எட்டாவது தீர்த்தச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௪௨௦

(௨௫) கூர்த்து - மிகுந்து.

## ஒன்பதாவது:

# நிருத்தச் சருக்கம்.

—:*:—

இந்து வாழ்சடை யெந்தைநெல் வேலியி
னந்த தீர்த்தப் பெருமை நவிற்றினஞ்
சிந்தை யாரவச் சின்மய னல்லரு
டந்து நீணடஞ் செய்தமை சாற்றுவாம். (௧)

போத மாதவர் புண்ணியச் சூதனை
யாதி நாயக னுடலங் குற்றருள்
காதை யோதுதி யென்றனர் காதலா
லாத ரங்கொண் டவனும் வழுத்துவான். (௨)

மாய வாழ்வற வாழ்விக்கு மன்னவ
னுய நீள்புறங் காடரங் கிற்புரி
நேய நாடகந் தன்னினு ணேயமாந்
தூய மாதவர் கேண்மின் சுகம்பெற. (௩)

யாணு லாமொழி மங்கை பராபரை
வேணு மாவன மேவிய விண்ணவன்
றூண லந்தரு மானந்தத் தாண்டவங்
காணு மாசை கருத்தின் மிகுந்தனள். (௪)

கணப ணுடவிக் கட்செவிச் செஞ்சடைத்
துணைவ னாகிய சோதியை யாதரித்
திணையி லாப்புக ழின்பத் திருநடங்
கணவ னேயரு ளென்று கசிந்தனள். (௫)

எங்க ணாதனு மெங்க ளிமாசல
மங்கை கூறு மதுர மொழிக்கிசைந்
தெங்கு மன்னுயி ரெல்லா நலம்பெற
வங்க ணைத்து மவளுடன் மன்னியே. (௬)

---

(௫) கணையுடைவி — கூட்டமாகிய படத்தின் மிகுதி.

பானு கம்பன் பரிந்திரண் டாயிர
மான வங்கையிற் சங்கமொ ராயிரந்
தான வூணர்ந்து தழங்கி முழக்கிட
வான துந்துபி யைந்தும் வளர்ந்தெழ. (எ)

தென்ன வென்றுயர் தென்மலை மாமுனி
மன்னு மியாழ்முறை வாசிப்ப நேசமாய்த்
துன்னு சாரதர் தும்புரு நாரதர்
இன்ன ரங்கொடு பாடல் கிளர்ந்தெழ. (அ)

கருது பூத கணங்க ணெருங்கிட
மருவு தொண்டர்கள் வந்து வணங்கிடச்
சுருதி யெங்குந் துதிகொண்டு நின்றிடப்
பொருவி றேவர்கள் பூமழை சிந்திட (கூ)

அபர நீள்பர மாகிய முத்தியின்
சுபம டைந்துயிர் தொல்புவி வாழ்ந்திட
விபுல வேய்வன மேற்கிளர் தாமிர
சபையில் வந்து தயங்கின னன்புடன். (க0)

ஆதி நாயகி யாளுடை நாயகி
மாது செல்வ வடிவுடை நாயகி
காதல் கூர்ந்திரு கண்களி கொண்டிடத்
தீதி லாநடஞ் செய்யத் தொடங்கினன். (கக)

வேறு.

ஒருமுய லகனுட னெறுநெறு நெறுவென வொருதாள்வைத்
திருமையி னொருபத மிசைதிசை திசைகொள வியல்வீசித்
தரவருள் வரவென விரவொரு கரமலர்த் தளிர்வீசிப்
பொருவறு வொருகர மபயம துறமுறை பொலிவித்தான். (கஉ)

எரியக லொருகர மிசைகொடு மழைமுகி லிடியென்னப்
பெருகதிர் துடியொரு கரமலர் மிசைகொடு பிறழ்பூசற்

---

(எ) யானுகம்பன் - பூதத்தலைவன். (க0) விபுலம் - விரிவு. (கங) எரி - அக்கினி. துடி - உடுக்கு.

கருவிழி யுமைபவள் மதிமுக மிசைதிகழ் கண்ணுகித்
திருமுக மதியினி னகைநில வெழவரு டிகழ்வுற்றான். (௧௩)

படர்சடை யாடப் பகிரதி யாடப் பணிகான்மெய்ச்
சுடர்மதி யாடப் படவர வாடச் சுடர்வீசிப்
புடைதிகழ் காதிற் குழைபொரு தாடப் புயமாடத்
தடவரை மார்பிற் றொடைகளு மாடத் தருமன்பால். (௧௪)

கரமரு வும்பொற் றுடியுட னங்கிக் கனலாடப்
புரிபுர மஞ்சொற் பெறவெதிர் கொஞ்சிப் பதமாடத்
திரமிகு மெண்டிக் குடனுய ரண்டத் திரளாட
வருடரு மன்பிற் றிருநட மன்புற் றருள்செய்தான். (௧௫)

இனிதுபரன்றந் தருளு நடங்கண் டினிதாய்நன்
முனிவர் வணங்கம் பிகைபெரு கின்பந் தனின்மூழ்கிக்
கனிவுட னங்கம் புளக மிகுந்தங் கணனையென்
றுனிவிர வும்புணர் வொடுமெதிர் கொண்டின் புருவானுள். (௧௬)

அல்லல் வினைத்தீர் நல்ல தவத்தோ ரத்தாநல்
வல்லி யிடத்தா நல்ல நடத்தா மத்தாகல்
வில்லனினைத்தோ ருள்ளவ கத்தா புறத்தாவே
யில்லில் சுகத்தா டன்னை யளித்தா வெனநின்றார். (௧௭)

அந்தமில் பூத கணங்க டபோதன ரயன்மாலோ
டிந்திரன் வானவர் சந்திர சூரிய ரிசைபாடுங்
கந்திர கானவ ரம்புவி யோர்புகழ் தரும்பாரும்
வந்தனை யோடு பணிந்து புகழ்ந்து மகிழ்ந்தார்கள். (௧௮)

சதுர்மறை மிகவும் புகழ்தரு தாமிர சபைநாதன்
வதன சரோருக வுமையெமை யாளுடை மடமானங்
கதிகழு ளார்வம துறவினி தாகிய வருள்வைத்தே
வுததியின் மேவிய வமுதென வோர்மொழி யுரைசெய்வான். (௧௯)

---

(௧௭) வினைத்தீர் - சந்தநோக்கித் தகர மிரட்டித்தது. மத்தா-ஊமத்தம்பூவை யுடையவனே. வேயில்லில் - மூங்கில் வனமாகிய கோயிலில். தாள்-திருவடி.

அருளுந்த வார்வக் கொடியுனை நாமுன்ளு ஞறுமன்பிற்
பிரிவதின் மனதிற் றிகழுவ தேயிப் பெருவேணுத்
தருவன மாமற் றுணதுரு வாயிச் சபைதன்னிற்
பரிவு விடாமற் றிருநடமாடும் பரிசுற்றேம். (௨௦)

கருதிய விர்தச் சபைதனி னந்தாள் கண்டோர்கட்
கிருமையி னின்பக் கதியை யளிப்போ மிதுவுண்மை
தருவா மினிமென் னுளதுரை யென்றான் றனியன்பான்
மருவிய வின்பக் கௌரியு மிதுவே வரமென்றாள். (௨௧)

எறிநில வுர்துஞ் சடையவ னன்றெறன் றெழில்சேர்புன்
முறுவ றிகழ்ந்தங் குமையை நயந்தான் மொழிமாது
மறிவு திருந்துஞ் சுரர்களு நந்தா வடிபேணிச்
செறிபுகழ் தந்தங் கணைய னின்றார் சேவித்தே. (௨௨)

தவர்புகழ் நீள்கழை வனமுறு தாமிர சபைமீதிற்
கவுரி மனோரத பவுரிகொ டாடிய கதையீதென்
றுவமையின் மாதவர் மனமகிழ் வார்தர வுரைசெய்தான்
சிவனிரு தாண்மலர் கதியென வேமதி தெளிசூதன். (௨௩)

வேறு.

தீர்க்க சத்திர யாகமுஞ் செய்துமுற் றுறவே
மாற்க ருத்தகல் சூதர்பால் வாய்ந்தவிக் கதைகள்
கார்க்கு லந்திகழ் கழைவனக் கடவுட னருளா
லார்க்கு மன்பொடு கேட்டன ரருந்தவ ரெல்லாம். (௨௪)

கைகள் கூப்பினர் தொழுதனர் கண்பனி சொரிந்தார்
மெய்கள் வாய்ப்புறப் புளகித மெய்தினர் வியந்தார்
பொய்கள் வாட்டிய தவளவெண் பொடியெலா மணிந்தார்
மொய்கு ழாத்தொடு கழைவன முன்னியங் கெழுந்தார். (௨௫)

நாத சூதமா தவனுட னைமிசா ரணிய
மாத போதனர் யாவரும் வீழ்க்கொடு நடந்தே
சீத நீர்வயல் விளங்கிய திருநெல்வே லியினிற்
காதல் கூர்ந்தினி தணைந்தனர் கருதுமக் கணத்தின். (௨௬)

---

(௨௩) பவுரி.—கூத்தின் விகற்பம்.

வந்த மாதவர் திருந்துவேய் வனத்தினைப் பணிந்தார்
சந்த மேயபொற் றமரைத் தடத்துடன் பொருநைச்
சிந்து பூந்துறை யாடினர் திருவருள் பெற்றார்
புந்தி வாய்ந்தரு ளுபக ளாலயம் புகுந்தார். (உஎ)

கனக மாமலை வடிவுடைக் கருணைமா துடனே
யனக வேய்வனக் கடவுட னடியிணை பணிந்தார்
மனமெ லாமழிந் துருகினர் பரவினர் வாழ்ந்தார்
வினைக ணீங்கினர் வேண்டின வரமெலாம் பெற்றார். (உஅ)

வென்றி நீடமை வனத்துள வியப்பெலாந் தெரிசித்
தன்று மாதவர் புரிநயப் பறைவதற் கெளிதோ
நன்றி கூர்ந்தவ ருவந்துபின் னைமிசா ரணியஞ்
சென்று சேர்ந்தனர் தத்தமாச் சிரமங்கள் செறிந்தார். (உகூ)

அத்த னார்கழை வனக்கதை யறைந்தவர் கேட்டோர்
புத்த கந்தனில் வரைந்தவ ரருச்சனை புரிந்தோர்
சத்த மோர்ந்திதன் பொருடனைச் சாற்றின ரெவரு
முத்த ராகுவர் கொடுவினை முழுதுநீங் குவரால். (௩௦)

அளவி லந்தண ரிவைய ரருந்தவர் விருத்தர்
வளர்கு ழந்தைதாய் தந்தைகோ வதைத்தவர் செழும்பொன்
களவு கொண்டவ ரேனுமிக் கதையினைக் கேட்பி
னுளரும் வல்வினைப் பெருக்கெலா மொழிந்துவீ டடைவர். (௩க)

பாரில் வேந்தர்க ளிராசிபேய் பாம்புபொய் விலங்காற்
சேரும் வெம்பய மொழிந்திடுஞ் சிறந்தள கேச
னேரெ னும்படி வாழ்வர்க ளிலவுவ டிருமா
னூர விக்கதை வரைந்தவே டங்கையிற் றரிக்கின். (௩உ)

சயஞ்செய் புத்திரர் மித்திரர் களத்திரந் தழைக்கும்
வியந்து சிந்தையில் வேண்டிய வேண்டிய பெறுவ
ரியம்பு மிக்கதை கூறிடத் திறைவனு முமையு
நயந்து வந்தருள் புரிவர்மெய்ஞ் ஞானமு முண்டாம். (௩௩)

---

(உஅ) அனகம் - பாவமில்லாமை.

வேறு.

பூதி சாதன மெங்கணும் பொங்குக
சாதி வைதிகஞ் சைவம் விளங்குக
சோதி வான்மழை தூங்குக வையமே
நீதி வேந்த னிலைபெற்று வாழ்கவே. (௩௪)

ஒன்பதாவது நிருத்தச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௪௱௪

வேணுவனபுராணம் முற்றிற்று.

அனவரததானநாதர் துணை.

| பக்கம். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௩ | ௨௫ | ருமைப | மைப |
| ௩௪ | ௧௦ | ணைத்தா | ணைந்தா |
| ௪௦ | ௨௬ | முருகக்கடவுளை | மன்மதனை |
| ௫௧ | ௨௧ | தரா | தாரா |
| ௫௮ | ௧௬ | னனன் | னனென் |

உ

சிவமயம்.

திருநெல்வேலிக்

# காந்திமதியம்மைபிள்ளைத்தமிழ்.

இது,

தச்சநல்லூர் உபாத்தியாயர்

வன்னியப்ப பிள்ளையவர்கள் குமாரர்

திருநெல்வேலி வித்துவான்

அழகியசொக்கநாதபிள்ளையவர்களால்

இயற்றப்பெற்று

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு. ரா. அருணாசலக்கவிராயர் எழுதிய
உரைக்குறிப்புடன்


சுவாமிநெல்லையப்பர் கோவில் தருமகர்த்தர்கள்

திருநெல்வேலி ஸ்ரீமத் A. V.

இராமசாமிபிள்ளையவர்கள்

திருநெல்வேலிப்பேட்டை ஸ்ரீமத் வெ. மு.

சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஆகிய இருவர் பொருளுதவியால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

உ

சிவமயம்.

இந் நூலாசிரியராகிய

# அழகியசொக்கநாத பிள்ளையவர்கள்

## சரித்திரச் சுருக்கம்.

இவர், நீர்வளமு நிலவளமும் நிறைந்த திருநெல்வேலி வேளாள குலதிலகராகிய வன்னியப்ப பிள்ளையவர்களது அருமைப் புத்திரராய்ப் பிறந்து தமிழ்க் கல்வியை நிரம்பக் கற்றுக் கவிபாடுவதில் அதி சமர்த்தராய் அரிய பெரிய பல வித்துவான்களுடன் பன்னாட் பழகி, இளமைப் பிராயத்திலே யீசுர பத்தி முதலிய எல்லா நற்குண நற்செய்கையு மியைந்து பற்பல அற்புத சந்தப்பாக்கள் ஒவ்வொரு சமயந்தோறும்பாடிக் கற்றாரையுங் கல்லாரையு மகிழ்வித்துத் தம் வாழ்நாளைச் செலுத்திச் செப்பறைப் பதிக்கடுத்த இராசவல்லிபுரம் கார்காத்த வேளாள குலமணியாயுங் கொடைவள்ளலாயுமிருந்த பா. முத்துசாமிபிள்ளையவர்களால் ஆதரிக்கப் பெற்றுப் பின்னர் வயது வளர வளரத் திரிபு யமகம் கற்பனை சிலேடை மோனை முதலியவைகளுஞ் சொல்வளம் பொருள்வளங்களு நிறையக் காப்பியம் பாடும் வல்லுநராய் உலகமாதாவாகிய திருநெல்வேலிக் காந்திமதியம்மை பேரில் ஒரு பிள்ளைத்தமிழ்ப்பிரபந்தம் பாடி அவ்வம்மை சந்நிதியிலிருக்கும் ஊஞ்சல் மண்டபத்தில் கொல்லம் ஆயிரத்தைம்பத்தைந்தாம் ஆண்டு தை மாதம் இருபத்தேழாந் தினம் ஞாயிற்றுக்கிழமை யிரவில் அரங்கேற்றி அன்பர் பலரையும் அகமகிழச் செய்தனர். பிள்ளைத் தமிழரங்கேற்றும்போது கூடவிருந்து முழுதுங் கேட்ட மேற்குறித்த பா. முத்துசாமிபிள்ளையவர்கள் உயர்ந்த விலைமதிப்புப் பெற்ற இரண்டு வயிரக்கடுக்கன்களை இவர்காதிலணிந்து மிகக்கௌரவப்படுத்தினர். இதுவும், பிள்ளைத்தமிழரங்கேற்றிய காலமும் திருநெல்வேலி அனவரததானநாதர் கோயில் வாயில் வித்துவான் ஸ்ரீமத் கவிராஜ நெல்லையப்ப பிள்ளையவர்கள் கூறிய சாற்றுங்கவிகளால் தெரியவருகின்றன. இதன் பின்னரும் இவர் தமிழாராய்ச்சியிலே சின்னாளிருந்து இற்றைக்குச் சற்றேறக்குறைய இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்னர்ச் சிவபதமடைந்தனர்;

இவரது கவித்திற முதலியவைகளை இவர் சிவபதமடைந்த காலத்தில் இவர் நண்பர் பலருட் சிறந்த வித்துவான் ஸ்ரீமத் வெ. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் இராசவல்லிபுரம் பா.முத்துசாமிபிள்ளையவர்களுக்கு 30—12—1885ல் எழுதியனுப்பிய செய்யுட்களாலும் அறியலாம்.

அ ச் செ ய் யு ட் க ளா வ ன .

விந்தமிழை யாதரிக்குந் தரிக்கின்முலை பொறுக்குமிடை மின்
னூர் வேளே, பந்தமிழை யாதரிபோற் றரற்பணிவோய் மதுரரசப்
பாவின் பத்து, வந்தமிழை யாதரிய லருக்குப்பொன் னிலம்வழங்கு
ம் வள்ளா லென்றுஞ், செந்தமிழை யாதரிக்குஞ் சந்தமுத்து சாமீ
யென் சீரார் மாமா. (க)

நீரேகப் பால்பிரித்துண் புட்கள்போற் கவிரசங்கொ ணெல்லையப்ப
னேரேறு குமாரசுவா மிக்கோவா மிருவர்தமு ளேவ ரேனுங்
காரேநேர் கரத்தாய்நீ யேனுமற்று னண்பர்களுட் கடையே னன்றி
யாரேனுந் திருநெல்லை யம்பதியி னில்லாத வமையத் தந்தோ. (உ)

வே று .

உருடாரத் தினமார்ந் திலகிரு தோண்மே லொளிரிளம் பரிதிநேர்
முகனுள், வருடாத் தினமா னினமெனு நயன மாதரார் மனங்கவர்
மார,னருடாரத் தினமார் வத்துட னுமையை யரன்றனைப் பணிபவன்
வித்வ, புருடாரத் தினமா மழகிய சொக்க நாதன்விண் புலத்தினை
கினனே. (ந)

ஆந்திரப் பதம்போற் பதமின்றென் பவர்வா யடைபடச்
செந்தமிழ்ப் பதம்போல், ஆந்திரப் பதமின் றெனப்புரிந் திட்ட வழ
கிய சொக்கநா தக்கோ, மாந்திர சத்தென் மொழிக்குநே ரின்று
வடமொழி யிதுதெரி யாதே, மாந்திர மரர்கா ளெனவுரைத் திட
ற்கு வானநா டடைந்தனன் கொல்லோ. (ச)

(க) விந்தம் இழையாதரிக்கும் - விந்தமலையை நூலாதாங்கும். பந்தம் இழையாது - மலபந்தத்தைச் செய்யாது. அமிழ் - அமிழ்ந்துகின்ற. (ந) உருள்தரத்தின் அம் - உருண்ட மலைகளின் அழகு. உள் - (ஆடவர்) நெஞ்சை. வருடு - தடவும். அரத்துஇனம் - அரங்களின் கூட்டம். (ச) ஆந்திரப்பதம்- தெலுங்குப்பதம். ஆந்திரப்பதம் - ஆகிய உறுதியுடைய பதமென்பதுமாம் மாந்து - குடிக்கத் தக்க. ரசம் - ரசத்தையுடைய. ஏமாந்திர் - ஏமாந்து போனீர்கள். அமரர்காள் - தேவர்களே.

மண்ணினிற் சிங்கக் குட்டியாஞ் சிறி வாசனு தியவிசை வாண, ருண்ணிய வாக்கு மழுதெனப் பாட வொப்பில்பல் பதந்தந்தோ மினிமேல், விண்ணினு ரதன்றும் புருமுத லோர்க்கவ் விதம்பதந் தருதுமென் றேவிண், ணண்ணினன் மிக்க வழகிய சொக்க நாதரா வலரினு யகனே. (௫)

சிலரிசைச் சந்தத் தினிற்சிலர் திரிபிற் சிற்சிலர் சிலேடைகற் பனையில், வலரெனப் படுவ ரவ்வண மின்றி வழங்குமெப் பாவினும் வல்ல, புலவனு மொருவன் போதுமென் றெண்ணிப் புலவர்தம் புல த்துமுத் தமிழு, நலமுறத் தேர்ந்த வழகிய சொக்க நாதனை யழைத் தனர் போலும். (௬)

மாயிரு ஞாலத் தொளிர்தரு புலமை மருவழ கியசொக்க நாத
ஞாயிறு தோன்றிக் காலையாம் பால நற்பரு வத்திலங் கினது [தோ
சேயிள வொளிகான் மாலையாம் விருத்தத் திருப்பரு வமுமிரா தங்
பாயிரு ளொழிந்த மதியமாங் குமரப் பருவத்தி லத்தமித் ததுவே.

வேறு.

நவவாயி லொருகூட்டி லுற்றவழ கியசொக்க நாதக் கிள்ளை, சிவவாநின் றொளிர்வாயின் மழலைபெற்று வளர்த்தவர்தஞ் செவிக்கு நல்கிக், குவவான் கொங்கையினு ரிதழ்க்கோவை ரசமருந்திக் குகன்க சுகம்போற், றவவானந் தம்பயக்கும் பாடல்பல சொலியுயர்விண் டனிலே கிற்றே. (௮)

நின்பாற்செய் வேண்டுகோ ளொன்றுள தலை தென்னையெனி னிகழ்த்து கின்றேன், றென்பாலு டக்கவிஞர் சிகாமணியா மப்புல வன் சிறியேன் பால்வை, யன்பானவைப்பதனை யவனேனுங் கொண் டகன்று னதற்கி டாக, வென்பானீ வைத்திருக்கு மன்பதனைக் கூடு மெனி லிரட்டிப் பாயே. (௯)

இங்ஙனம்
மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்
மு. ரா அருணாசலக்கவிராயர்.

---

(௮) நவவாயில் - ஒன்பது த்வாரம். சிவவாநின்று - சிவந்து. குவவு - திரட்சி குகன் சுகம்-முருகக் கடவுள்கையிலிருக்கும் அருணகிரிநாதராகியகிளி.

உ

சிவமயம்.

# சாற்றுக் கவிகள்.

---

திருநெல்வேலி

## முருகதாச சுவாமிகள் இயற்றியவை.

அக்கமே மெய்ப்புலவர்க் காகு மழகிய
சொக்கநா தன்றொடுத்துச் சூட்டினான்—மைக்ககண
மேந்திமதிள் சூழுநெல்லை யீசனணைந் தின்புறுசீர்க்
காந்திமதி பிள்ளைக் கவி. (1)

வேறு.

சென்னியப் பன்றிரு நெல்வேலி யூரிற் றினமருவுங்
கன்னியப் பன்னகட் பார்வையிற் பிள்ளைக் கவிபிறந்த
தன்னியப் பன்னெறி யோர்க்கஞ் சிடாக்கங்கை யங்குலத்து
வன்னியப் பன்றரு மைந்தரின் முன்னவன் வாயிடத்தே. (2)

வேறு.

மழவிடை யத்தனார் வந்தெய் தத்திகழ்வேய்
வனநக ரிற்குலா வுஞ்செல் விக்கடியார்
பழவினை யைக்கொல்வீ ரம்புல் கட்கணைதோய்
பசியகி ளிக்கிவா றென்றொல் லத்தமிழ்தேர்
கழகம தற்குள்வா ழுந்தெய் வப்புலவோர்
களுநிகர் மற்றையோ ருஞ்செய் திட்டிலரா
லழகிய சொக்கநா தன்கல் விக்கடல்வா
யமுதமெ னச்சொனான் வண்பிள் ளைக்கவியே. (3)

---

திருநெல்வேலி

## கூடத்துக் குருக்களையா அவர்கள் இயற்றியது.

எழுத்துச்சொற் பொருளியாப்போ டணிமுதலைந் திலக்கணமு
மினிதி னாய்ந்து, பழுத்ததமிழ்ப் புலவனழ கியசொக்க நாத னெனப்
பகரு மேலோன், விழுத்தகைய நெல்லைநகர்க் காந்திமதி யம்பிகை
டான் மேவு மன்பாற், றழைத்தபிள்ளைத் தமிழ்மாலை சாற்றினா
னியாருமதி சயிக்கத் தானே. (1)

திருநெல்வேலி

## கவிராஜசுந்தரமூர்த்திபிள்ளையவர்கள் பாடியது.

ஆர்கலி சூழ்ந்த சீர்கெழு தரணியிற்
பல்வளம் பெருகிய நெல்லைமா நகரத்
தெண்ணான் குறுப்பில் விண்ணாடு போலச்
சுபந்தின மருவிய தபதி நகரத்
திம்மி முதலாப் பம்மிய கணக்கிற்
றோர்ந்து மியற்றமிழ் சார்ந்து மருவிய
பன்னயம் பெறுசீர் வன்னி யப்ப
போதக னுதவிய தாதவிழ் கடுக்கை
வேண்டவளர் செல்வ னீண்ட கருணையிற்
பழகிய வேளா மழகிய சொக்க
நாதன் சொற்ற மேதகு பாடலாம்
மின்னஞ் சுநுசுப் பன்னம் போல்வாள்
காண்டகு மலைமகள் தூண்டா விளக்கனாள்
நாலெட் டறம்புரி கோலக் கரத்தினாள்
வில்லொடு பழகிய நல்ல நுதலினாள்
வடிவாள் போல்விழி வடிவா ளானாள்
குமுதம் பொருந்து மமுதச் சொல்லினாள்
மதிமுகக் காந்தி மதியாம் பெயரினாண்
மீதியற் றமிழாற் கோதறு சொற்களால்
விழுமிய பொருள்களாற் குழூஉச் சொற்களாற்,
காப்பு முதலாக் கனிந்த வூசலெனும்
யாப்புறு பனுவல் பத்து மடங்கிய
பிள்ளைக் கவிக்கிணை வெள்ளைக் கிழத்தி
பாடிய பனுவலுந் தேடிய பூசுர
நற்றவத் தருமி பொற்குவை தரப்பெற
ஆலவாய்ச் சொக்கர் கோலமார் வாயாற்
பாடிய பனுவலும் பயன்பெறு மலாது
கூடுபெப் பனுவலுங் கூறவொ ணாதே. (1)

திருநெல்வேலி

## கவிராஜ நெல்லையப்பபிள்ளையவர்கள் இயற்றியவை.

ஆயிரத்தைம் பத்தைந்தா மாண்டு தன்னி
லார்ந்ததைமா தத்திருபத் தேழாந் தெய்தி
ஞாயிற்றுக் கிழமையிராத் திரியில் வாய்த்த
நல்லசுப லக்கனத்தி னியமார் நெல்லைக்
கோயிலுக்கு ளூஞ்சன்மண் டபத்தின் மேவிக்
கோதிலழ கியசொக்க நாத மேலோன்
றுபினிய காந்திமதி வடிவாண் மீதிற்
சாற்றுபிள்ளைத் தமிழையரங் கேற்றினனே. (1)

### வேறு.

அருநெல்லைக் காந்தி மதிவடி வாண்மே
லழகிய சொக்கநா தன்சொல்
லருந்தமிழ்ப் பிள்ளைக் கவிப்பிர பந்த
வழகினைத் தேர்ந்தக மகிழ்ந்து
கருதியக் கவிஞன் வாக்கினு மின்னாங்
கனபிர பந்தமுண் டாகக்
கருணைகூர் வெள்ளைக் கமலத்தா ளையர்ந்து
காதினி லரும்பொரு ளுரைப்பான்
மருவிலிற் றிருக்கும் வண்மையா மென்ன
வையக மெங்கணும் வழுத்த
மதித்தெழில் வயிரக் கடுக்கனன் கணிந்து
வளம்பெறப் புகழ்ப்பயிர் வளர்த்தான்
றருநிகர் கொடையான் றெருளுநன் னடையான்
றருந்தெய்வ பத்திமை யுடையான்
றனபதி ராஜ வல்லிமா புரம்வாழ்
தருமுத்து சாமிமா தவனே. (2)

---

சேற்றூர்ச் சமஸ்தான வித்துவான்

## மு. ரா. அருணாசலக்கவிராயர் இயற்றியது.

சீர்பூத்த நெல்வேலிக் காந்திமதித் தாய்பருவந் தேர்ந்து தேர்ந்து
நார்பூத்த பாமாலை புனையுமழ கியசொக்க நாத னென்னும்
பேர்பூத்த நாவலன்பிள் ளைத்தமிழென் றுலகறியப் பேரிட் டாலும்
மேர்பூத்தவப்பாடற்பொருள்பெரியதமிழெனப்பேரிசைக்குமன்றே

கல்போது மிட்டா

## புன்னைவனக்கவிராயரவர்கள் இயற்றியது.

சலவுகடல் விடமுண்ட நெல்வேலி நாதர்புனை
தும்பையினி லருகினிதழித்
தொடையினி லெருக்கினிற் கொக்கிறகி லாத்தியிற்
சொரிமதக் கலுழியானைத்
தோலினிற் புலியதட் கலையினிற் கடுவொழுகு
துளையெயிற் றுரகவணியிற்
றாயசெம் பவளச் சடாடவியின் மார்பினிற்
றுயல்வருந் தலைமாலையில்
விலகிவில் லுமிழுக்கு மணியினிற் பப்பாதி
விரிதிரைக் கங்கையொழிய
மேனியி லணிந்திடுஞ் சீர்மரு வுமாதேவி
வியனெல்லை நகரில்வாழும்
வேதவே*தாந்தசா க்ஷாத்கார வடிவமாய்
மெய்ம்மறைக் குற்றபொருளாய்
விரிமருப் புக்கொண்ட மகிடனைச் சூட்சியால்
வென்றுவரு சோதிமயமா
யலகிலா னந்தப் பெருக்கான காந்திமதி
யம்மைபொற் பதவெற்பினி
லற்புதத் தமிழெழுனும் பாவைதனி னான்குபொரு
ளானதோர் நீரைவாரி
யரியதோ ரெழுமதந் தருமின்னன் மின்னியீ
ரைந்துடைய சுற்றமான
வதிகவுவ ரைக்கெடுத் தீரைந்து தொகைகொண்ட
வழகெனுந் தாளமேவி
யிலகுமுப் பத்திரண் டெனுமுத்தி யென்றோங்கு
மிணையில்பல திவலைவீசி
யியலான காண்டிகை விருத்தியுரை யென்னுமோ
ரிசையைப் பரப்பிமேலா
மெழில்பெருகு மெங்களழ கியசொக்க நாதமுனி
லென்றுந் தழைத்திருக்க
வினியபின் னைக்கவிப் பிரபந்த மாரிதனை
யெண்ணிப் பொழிந்ததன்றே. (1)

ஊற்றுமலை

## கந்தசுவாமிப்புலவரவர்கள் இயற்றியது.

மழலைமென் றீஞ்சொற் காந்தி மதியெனும் வடிவாள் செம்பொற்
கழன்மிசை மதுரப் பிள்ளைக் கவித்தமிழ்ப் பனுவ னன்றாய்ப்
பழகிய வாணர் மெச்சும் படிபடி மீதிற் சொன்
னழகிய சொக்க நாத வற்புதக் கலைவல் லோனே. (1)

---

சிந்துபூந்துறை

## இராமசுவாமியாபிள்ளையவர்கள் இயற்றியது.

சென்னிலவும் பொழிற்றிருநெல் வேலிநகர்க் காந்திமதித் தேவிமீதி
னன்னயவா னெங்களழ கியசொக்க நாதமுகி னண்ணு மன்பாற்
பன்னுபிள்ளைத் தமிழ்ப்பெருமைபகரமுடியாமலொல்கிப்பாதாளத்தின்
மன்னுபுகழ்ச் சேடன்போயொளித்தனனென்றாலென்னால் வழுத்தற்பாற்றே.

---

ஊற்றுமலை

## திரவிபம்பிள்ளையவர்கள் இயற்றியது.

வானில வியவெண் பிறைநுதற் காந்தி மதிவடி வாண்மல ரடிக்கே
கானிலவியசொன்மலர்கொடுபிள்ளைக்கவியெனுமாலைகோத் தணிந்தா
னூனில வியவிப் பிறவியி லெய்தா வுறுதியு முளதெனத் தெளிந்தே
நானிலம் புகழு மழகிய சொக்க நாதனுந் தமிழ்ச்சிகா மணியே. (1)

---

திருநெல்வேலி முனிசிப்கோர்ட்டு வக்கீல்

## சுவாமிநாதபிள்ளையவர்களியற்றியது.

நிலம்பெருகி வான்புகழ்சேர் நெல்வேலித் தலத்தினுறை நிமலனார்தம்
வலம்பெருகிக்கருணைவளர் வடிவாளென் றுரைகாந்திமதித்தாய்மீதிற்
றலம்பெருகிக் கமழ்பிள்ளைத்தமிழன்பிற் சுவையின்பந்தழைக்கப்பாடி
நலம்பெருகி வாழ்வுற்றா னண்பினழ கியசொக்க நாத வேளே. (1)

முற்றிற்று.

---

உ

சிவமயம்.

திருநெல்வேலிக்

காந்திமதியம்மை

# பிள்ளைத்தமிழ்.

## நூற் காப்பு.

### விநாயகர் துதி.

கார்பூத்த மும்மதக் கயமா முகத்தினன் கனல்வுண லைப்பிடித்துக், கவளநுகர் வாயினன் றவளவொண் கிம்புரிக் கவினெழுத் தாணிபதனாற், — போர்பூத்த பாரதக் கதைபினைச் சிகரவட பூதரத் தெழுதுநிபுணன், புவிபினரு முதன்மையிற் பூசைபுரி யுங்கடவுள் பொற்பதஞ் சென்னிபுனைவாம், — வார்பூத்த மென்முலைக் கவுரியென் ஞான்கறம் வளர்த்துலகை வாழவைக்கு, மலர்நீல முங்குமுத மலரு நிகர் முக்கண்ணி மலைபரச னீன்றவல்லி, — பார்பூத்த செஞ்சடைப் பவளவரை யெனமுங்கி லடியில்வந் தருளுநெல்லை, யநவரதர் பங்கி லதனி னமருவு காந்திமதி யம்மைதமி ழழகுபெறவே. (க)

### குருவணக்கம்.

கனிதரு பெருங்கருணை மருவுபதி னொருகரக் கணபதியை யநவரதமுங், கருதலிற் பெறுபய னனந்தத்து ளொன்றெனக் கடையனேன் றனையுமகவென், — றினிதுபெற் றருமையில் வளர்த்துப் படிப்பித் திகத்தொடு பரத்துமின்ப, மெய்தவரு ளுபதேச முதவுசற் குருவான வெந்தைதாள் சிந்தைசெய்வாங், — துனிசிலை யெனக்கிரி யெடுத்தபெரு மான்மைபல் கூர்ந்துடற் கூறளிப்பக், கொண்டுமற் றொருபாதி தனிலுந்த னவயவக் கோலங் குறிப்பவாய, — பனிமதிக் குழவி

(க) கனல் - வெப்பம். நிபுணன் - மிகவல்லோன். ஆர் - ஆத்தி. நெற்றிக்கண் சிவப்பாதலிற் குமுதம் உவமையாயிற்று.

விடம் வளைமருட மியாழ்துடி பணைப்பாந்தள் கமடமுதலாம், பல புனைந் திடல்கண்டு மகிழ்நெல்லை வடிவம்மை பைந்தமிழ்க் கவிதழைய வே. (௨)

## அவையடக்கம்.

மணிகுலவு கந்தரத் தரவரதர் மனமகிழ வளர்நெல்லை வடிவம்மைதன், வாடா தலர்ந்தமலர் வகையனந் தங்கமழும் வார்குழற் காட்டிடத்திற்,—றிணிகுலவு தோள்வழுதி மகளாய நாளெயிற் செறி நிம்ப மலர்சூடலாற், றெய்வதச் செந்தமிழ்ப் புலவர்பகர் பனுவல் பல திகழ்தருந் திருவடிக்குப்,—பணிகுலவு மெய்யன்பு சிறிதுமில் லாவெனது பாமாலை யினைவிரும்பிப்,பற்றிப் புனைந்தருள் புரிந்திடவ துண்டெனப் பாவுதற் கொருமையுற்றே,—னணிகுலவு மலயமால் வரைமுகடு தனினிலவு மமலமா முனிமுதற்சொல், லடியவர்க ளனைவோரு மவ்வண்ண மேயுவந் தாட்கொள்ளல் வேண்டுமென்றே. (௩)

---

### முதலாவது:

# * காப்புப் பருவம்.

## திருமால்.

திருமருவு மார்பனைக் கரியமுகில் வண்ணனைச் செந்தா மரைக் கண்ணனைத், திசைமுகன் றந்தையைத் தசரத குமாரனைத் தேந் துழா யணிபலானைக்,—குருகுலப் பாண்டவ சகாயனை முகுந்தனைக் கூராழி யங்கைபானைக், கூர்மாவ தாரனைப் பாற்கடன் மிசைப்பள் ளி கொண்டவனை யஞ்சலிப்பா,—மருமறைப் பொருளின்முடி வான வளை வானவர்க் கரசியைச் சடிலமுடியீ, தறுபதா யிரவருட மணி முடி சுமந்துலகை யாண்டவன் பங்கினளைப்,—பொருநையந் துறைக மழு நெல்லைவடி வாளைப் புகழ்ந்துதொழு மன்பரகமாம், பூங்கோயி விற்குலவு காந்திமதி தன்னைப் புரந்தருள வேண்டுமென்றே. (க)

---

(௨) வளை - சங்கக்குழை. துடி - உடுக்கு. (௩) நிம்பம் - வேம்பு.
* காப்புப் பருவம் - பாட்டுடைத் தலைவியைத் திருமால் முதலியோராற் காவல் புரிவிக்கும் பருவம். (க) பொருநை - தாம்பிரபன்னி.

## சிவபெருமான்.

மறுகுதொறும் விலைகள்கூறி வளையொடுசெல் வணிகர்முன் மதுரையிடை தோன்றியொரு வண்மையைக் காட்டினர், மதனை யடும் விரதர்மேரு வரையுமொரு சிலையதாக வளைதல்செய்பு ராந்த கர்கை யின்மழுத் தூக்கினர், வரியுழுவை யுடையதோலி னுடை யர்மழ விடையர்வேணு வனமதனில் வேண்டவளர் கண்ணுதற் காட்சியார், மணிகொண்மர கதகலாப மயிலில்வரு குமரவேளை மகக ரிமை யீந்தவரோர் மின்னெருக் காத்தியோ,—டறுகிதழி யிறகார வெ ணிலவொளிறு நெடியவேணி யமலரிரு நான்குருவ ரைம்முகத் தீர்த்தனு, ரலறியரு கனுகுமேன மகிழவமர் பொருகிரீடி யகநினைவ தாம்பகழி முன்னளித் தாட்கொள்வா, ரமரர்முனி வரர்கள்பாட மறி கதற விரைவிலாடு மணிமருவு தாம்ப்ரசபை மன்னுமெய்க் கூத்தனு, ரருள்பெருகு தவளநீறு முழுதணியு மருணமேனி யநவரதர் பூங் கழல்கள் சென்னிவைத் தேத்துவா,—மிறுகுமுலை யிணைநீல நிற முடைய கொடியைநீடு மெழுபுவியை யீன்றருளு மன்னையைச் சூற் கொண்மூ, வினமுமிரு நிதியுநாண வுதவுகர மலரினாளை யிபதிலகம் வாய்ந்தபிறை நன்னுதற் கீற்றின்மீ, திலகுகுறு வெயர்வைதோய நடநவிலு முமையையிடி விமயமலை வேந்தனருள் கன்னியைத் தேக்கரு, வினியதமிழ் மதுரவாரி யமுதமுறழ் கருணையளை யெம தறிவி லார்ந்தகிளி தன்னைமட் டூற்றும்வாய்,—நறுமலர்கொள் குழலி னளை யிருகுழையொ டிகல்செய்வேலி னயனவெழி லோங்குசிறு பெண்ணினைப் பூத்ததா, நளினமல ரணையின்மீது வளருமிரு மகளிர் பேண நகைபயிலு மாங்குயிலை விண்ணவர்க் கேற்றவூர், நடுவினுழு சிகரிநீள மளவுகழு கொடியவாளை நனிவயலின் மேய்ந்துகடி துன்னு நற்றேப்பின்மே, னகுமணிகொடலைகண் மோது பொருநைவரு திரு நெல்வேலி நகரினுறை காந்திமதி யம்மையைக் காக்கவே. (உ)

## சந்திவிநாயகர்.

அண்ட மளாவிருங் காதுடைக் கீர்த்தியோ னங்குசபாசமென் றோள்களிற் சேர்த்துளா, னைங்கரன் முடிகந் தாழ்வறத் தூக்குகோ

(உ) கிரீடி-அருச்சுனன். அருணம்-சிவப்பு. (ங) மூடிகம்-பெருச்சாளி.

னம்பக மேனியன் சீர்பெறச் சிற்றமார்,—சண்டையி னேர்பெருந்
தோன்முகற் கூர்த்ததோர் தந்தம தாலடுந் தீரன்மிக் கேற்றிலார்,
சங்கர ஞானதன் ஞானதமெச் சாற்றல்கூர், சந்திவி நாயகன் றாள்களைப்
போற்றுவா,—மெண்டிசை யோர்தொழுந் தாய்தனைச் சாட்சியா மெ
ங்கணு மேவிநின் றாளையுட் டேக்குபே, ரின்பநி லாவுசெஞ் சோதி
யைப் பாக்களா லென்றும்வ ழாதுவந் தேதொடுத் தேத்திவீழ்,—
தொண்டர்கள் பான்மிகும் பாசம்வைத் தாட்கொணீர் துன்றுமை
யாளைமென் பூவையைக் கோட்டிறு, ரெருங்கிய வேய்வனஞ் சூழ்
பதிக் கேற்கவாழ் சுந்தர நீடுமைந் தோகையைக் காக்கவே. (௩)

## முருகக்கடவுள்.

மதிவாழ் சடைப்பரம ரருள்பா லனைச்சுடிகை மணியார் பணிப்
ப கையதா, மயில்வா கனத்தில்வரு முருகோனை விற்பொலியும் வயி
ரா யுதற்குமெழிலார், வனசா தனத்திருவின் மணவாள னுக்கு
மொரு மருகோனை முக்கண் வரைநேர், மதமா முகக்கடவு ளிளை
யோனை முத்தமிழின் வலியோனை முத்தை யனைநீர்,—கொதிவாரி
யொத்தநிற மறமாதொ டத்திமகள் குயமீ தணைத்து மகிழ்சீர்,
கொளுமா திரட்டிபடு புயவேளை வெற்றிகொடு குருகூவெ ளுப்பில்
குருகே,கொடியா வுயர்த்தவனை வடிவே லெடுத்தவுணர் குலவே ரறு
த்த வனையோர், குறுமா முனிக்கருளு முருமா மலைக்குமர குருநாத
னைப்ப ணிகுவா,—மதிர்வான் முகிற்குறையு மௌனும்வேய் வனத்தி
லெம தனையான சத்தி தனை நீ,டமரா திபர்க்கருள்செய் கவுமா ரியைப்
பொருவி லருள்வா ரியைப்பெ ணரசா, மழியாத சிற்பரையை யுமை
யா டனைப்புரிசை யணியா வுடுக்கு மியல்போ, டவிர்கோ புரத்தொ
ளுதி யுறுகோ யிலுக்குளினி தமர்பேதை யைப்பொ ருநைமா,—நதி
யாளை முத்தருணர் கதியாளை யிக்கதென நவில்வாய் மொழிக்கி
ளியைநார், நலமேவு வெற்பிறைவ னருமா தவப்பயனை நடையோதி
மத்தை யிளநீர், நகுதாள மொத்திலகு முலையாளை முத்தனைய நகை
யாளை நெய்த்த குழன்மே,னளிர்தார் முடித்துலவும் வடிவா யிளையச்
சிறிது நவியா தளித்த ருளவே. (௪)

(௩) தோன்முகன் - கயமுகாசுரன். இறால்-தேன்கூடு. வெய்வனம்-மூங்கிற்
காடு. (௪) குருகு-கோழி.

## நான்முகன்.

புள்ளே றுயர்த்தமெய்ப் புகழே றுகைத்தகைப் புலவேறு கழு முட்படைப், போரேறு சங்கரிக் குந்தொறுந் தொன்மையிற் பொறி யேறு சிறைவண்டறுக்,—கள்ளேறு கமலப் பொகுட்டேறும் வாழ்க் கைகொடு கவினேறு முலகளித்துக், கலையேறு மறைமுழக் கிசை யேறு திசைமுகக் கடவுண் முன்னின் றுகாக்க,—முள்ளேறு கூவிளங் கனியினிற் கிள்ளேறு முலையரம் பையர்களிப்ப, முகிலேறு புநிதன் கை முகிலேறு சிரசின்கண் முடியேற வணரேறும்,—வள்ளேறு கூருரத் திடியே றிடித்திடலின் வடியேறு மயிலெறிந்தோர், மயி லேறு மிளமதலை மடியேறி விளையாட மகிழ்நெல்லை வடிவாளையே. (௫)

## தேவேந்திரன்.

குலவரை குலைந்திடச் சிறையரியும் வன்றிறற் குலிசா யுதத் தடக்கைக், குரிசிலைக் கயல்விழிப் பொருசிலைக் கவினுதற் குமரியயி ராணிகொங்கைக்,—கலவையங் குங்குமச் சேறுபடி மார்பனைக் கற்ப கக் காவினிழற், காவலனை யாயிரங் கண்ணிலகும் வண்ணமெய்க் கட வுளைக் கருதிநிற்பாஞ்,—சலவும்வெண் டிரைமுகட் டெழுஞாயி றுச் சியிற் றோன்றலுமொ ராழியந்தேர்த், தூரகதமொ ரேழுமணி மேடை யிற் செம்மணிச் சுடரொளியி னாற்சிவப்ப,—வலவனல மால்கண்டு நகுவதென மறுகுதொறும் வளையுமிழு மணியெறிக்கும், வளமருவு நெல்லையம் பலவாணர் களிகூரும் வடிவைப் புரக்கவென்றே. (சு)

## திருமகள்.

செந்துவ ரிதழ்த்திரு மடந்தையைக் கிளியில்வரு சித்தசனை யீன்றதாயைத், திரையாழி தந்தபொற் கொடியினைப் பஃறலைச் சேடா தனத்தன்மோலிப்,—பைந்துழாய் நறுமணங் கமழ்தருஞ் சிற டிப் பாவையைப் பூவினுயர்செம், பதுமப் பொகுட்டினுறை நங்கை யைச் செல்வப் பழம்பொரு ளினைப்பரசுவா,—மந்தரியை யபிராம சுந்தரியை நெல்லைநக ரம்பிகையை யம்பராசை, யன்னநடை யபிலு மெழின் மின்னையொளிர் கிண்ணமுலை யமுதையுமை யாளைநீலக்,— கந்தரர் விரும்பிய விருந்தினை யருந்தவர் கரங்குவித் துப்பாவுங்,

---

(௫) புள்ளேறு - கருடன். கழுமுள் - சூலம். (சு) வலவன் - தேர்ப்பாகன். அலமரல் - சுழலல். (எ) மோலி - கிரீடம்.

கழலுடைய கவுரியைக் காந்திமதி யம்மையைக் காத்தருள வேண்டு
மென்றே. (௭)

## கலைமகள்.

கதிரோனெனும்பே ரருச்சகன்மைக் கடனீர் படிந்திட் டாயி
ரம்பொற்,கைபற் றினமுந் திறக்கும்வெள்ளிர கதலக் கமலா லயத்
துமென்கட்,—பதிரா வகத்தும் வீற்றிருக்கும் பவளச் செழுந்தாட்
ணைபைங்கூந்தற், படிக நிறப்பெண் பாவைதனைப் பாவாற் பரவிப் பணி
குதுமால்,—குதியா மகிழ்கூ ரன்பருளக் கூட்டில் வளரும் பசுங்கிளி
யைக், கோலா கலங்கொண் டருமறைப்பூங் கொம்பிற் குலவுங் கோ
கிலத்தை,—மதிள்சூழ் சிகரித் திருநெல்லை வடிவை யடியார் மலத்தி
மிர, மாற்ற வுதயஞ் செயுங் காந்தி மதியைப் புரக்க வருகவென்றே.

## துர்க்கை.

அம்பரம தன்கண்விசை கொண்டெகின வெண்பறவை யகி
யெழு மம்புயத்தற், கரியவேப் முத்தர்சடை யாமடவி யிற்பொ
லியு மலர்கமழ் பதத்தினாளை,—வம்பவிழும் வனமாலை துயல்வருந்
தோட்குரிசின் மருவுசீர் கடலுடுத்த, மாதணிம தாணிநடு மணிபா
கு நெல்லைநகர் வடிவாயி னைப்புரக்கத்,—தொம்பத நிலைப்புறச் சண்
டனோடு முண்டனைத் துற்கனை யிரத்தபீசா,சுரனைமற் றுருகா சுரனை
யடு முத்தலைச் சூலியெண் டோளியும்பற்,—கும்பம்வகி ரம்புகிர் மட
ங்கலூர் மூக்கட் குமாரிபொற் கஞ்சவாவிக், குடதிசைக் கோயில்
குடி கொண்டருள் பராசத்தி குங்கும நிறச்செல்வியே. (௯)

## முப்பத்துமூவர்.

நீறிகழ் மதத்தர்கழு வேறவருள் வித்தகனார்,நேடியழு மப்பொ
ழுது பாலுதவு சத்தியையா,—னேறிவர் மணிக்குயிலை வேயிடை
யுதித்தெமையா,ளீசரிட முற்றவடி வாயினை யளித்திடவே,—நாறி

---

(௮) அருச்சகன்-பூசை செய்வோன். மதிள்-மதில். திமிரம்-இருள். (௯)
வனம்-துளசி. மதாணி-பதக்கம். தொம்பதம்-அது நீ ஆதல்; இதன் தெளி
பொருளைச் சாத்திரவிசாரணையினா லறிக. உம்பற் கும்பம்-யானை மத்தகம்.
பொற்கஞ் வாவி-பொற்றாமரைத்தீர்த்தம். (௧௦) நேடி-தேடி.

ணர் மலர்த்தொடையல் சூடுமகு டத்தெழில்சேர், நாலிரு வசுக்க
ளுடனே ஞானிரு மருத்துவரீ,—ராறிக லருக்கர்பதி னோர்வகை யுருத்தி
ரரோ, யாகுமிவர் முப்பதொடு மூவரை வழுத்துதுமே. (௧௦)

காப்புப் பருவம்

முற்றிற்று.

## இரண்டாவது:

## * செங்கீரைப் பருவம்.

உம்பர்போற் றிமப்பிறங்கலு றுமோர்தடத் தொண்கமலமல
ரின்மிசைகண், ணுற்றெடுத் தச்சிமோந் தன்பினீ ராட்டிநீற் றொடு
நிலக் காப்புமிட்டுப்,—பம்பணி நுதற்குவெண் மணிச்சுட்டி சாத்தி
விற் படர்தலைப் பணி திருத்திப், பளபளெனும் வச்சிரக் குழைசெவி
பொருத்திவளை படுமிடற் றணிபலவுமிட்,—டம்பவளம் வளைகடக
முன்கைக் கிணங்கவிட் டரைவட மணிந்துபாதத், தணிசிலம் பிட்டு
முலை யமுதூட்டி மேனையு ளடங்கா மகிழ்ச்சியோடுஞ்,—செம்பவள
வாயின்முத் தாடுமொரு பைங்கிள்ளை செங்கீரை யாடியருளே, திரு
வளரு நெல்லைநகர் வடிவுடைய காந்திமதி செங்கீரை யாடியருளே.

மைக்கணிணை யிற்கருணை வழிதரத் திருமேனி வளர்பசும்
பிரபைவீச, மார்புகொடு மெல்லத் தவழ்ந்தயர்ச் சியினமுதுவண்கு
முத நிகர்வாய்ப்பலர்ந்,—திக்கமிழ்தின் மிக்கவா மெனமிகவு நீபயிலு
மின்னிளங் குதலைமொழிகேட், டென்னம்ம வென்னம்ம வின்னஞ்
சொ லின்னஞ்சொ லென்றுனைப் பெற்றோர்களும்,— க்கமுறு செவி
வியரும் வந்துநின் றுவகையம் பரவையி — மூழ்கமெய்ம்மைப்,பத்
தருக் கருளபய வரதமலிர் செங்கையும் பாதபங் கயமுமூன்றிச்,—
செக்கர்நிற மணிமுடி யசைத்துவிளை யாடுமயில் செங்கீரை யாடி
யருளே, திருவளரு நெல்லைநகர் வடிவுடைய காந்திமதி செங்கீரை
யாடியருளே. (௨)

---

* செங்கீரைப் பருவம்-ஒரு காலை மடக்கி யொருகாலை நீட்டி இரண்டு கைகளையு நிலத்தி லூன்றித் தலை நிமிர்த்து முகமசைய ஆடுநிலை. (க)வில்-ஒளி.

கனகரும மேபய னளிப்பதல் லாற்பிறி தொர் கடவுளன் றன்றெ
ன்னவே, கருதுமு ளகந்தைக் கிசைபந்தி மகமொன்று கடிதினிற்
புரிவோர்கள்பாற்,—பனகவணை யானைமோ கினியா வரும்படி பணித்
தவர்த நோன்பழித் தும்,பகரரு மெழிற்குலவு வேடமிட் டவர்மருவு
பன்னியர்த முன்னரேகி —பனகநிறை குன்றியணி வளைகலைபு நா
ணுட னகன்றிடச் செய்துமதவே,ளங்கமழி யும்படி விழித்துமகிழ்
வாருக் கடங்காத மயல்விளைத் துத்,—தினகர ரொனுங்குழைக் கா
தொடு பொருங்கண்ணி செங்கீரை யாடியருளே, திருவளரு நெல்லை
நகர் வடிவுடைய காந்திமதி செங்கீரை யாடியருளே. (௩)

ககனகூ டத்தினிமிர் குடுமிப பொருப்பினைக் கனைகட லுண் மத்
தினிறுவிக், கடுவொழுகு துளை யெயிற் றணிமணிப் பஃறலைக் கட்
செவி யராப்பிணித் துச்,—சிகரகோ வத்தனக் கவிகையன் மதிப்பச்
சினத்தெழுந் தீவிடத்தைத், தேவருய் வான்சுவண வடபூ தரப்
பொரு சிலைக்கர னெடுத்தயில லுந்,—தகரவார் பைங்குழற் றுய்நிணு
துள்ளஞ் சகிப்புறு தொள்வளைக்கைத், தாமரைக ளான்மிடற் றளை
வினிற் பெயர்வருந் தகைமைசா லமுதமாக்கி,—பகனிலா வுவகை
பூத் தாடும்பெ ரரசியினி தாடியருள் செங்கீரையே, யறம்வளர்த்
தகிலம் புரந்தருளு நெல்லைவடி வாடியருள் செங்கீரையே. (௪)

## வேறு.

மங்கை யுமைநின் னருட்காந்தி மதிப்பேர்க் கினிதா மெனக்
குறித்தோ, வானோர் வழுத்துங் கருணைவிழி மானுந் தகைவாய்ந் த
மைநினைந் தோ,—கங்கை மிலைந்தோன் மனமும்வெருள் கவின்றோய்
கடைவா ளியமைதனவோ, கடல்சூ ழுலகின் குவலயப்பேர் கருதி
வசங்காட் டுதற்பொருட் டோ,—செங்கை குவிப்பார் கவிச்சுவையிற்
செந்தே னிறையுஞ் சீர்விழைந்தோ, செழுமா மணிமே கலைமடி
தோய் சிறுதாட் குமர னுவப்புறவோ,—வங்கை தனின்மைக் குவளை
கொண்டா யாடியருளாய் செங்கீரை, யளிகூர் நெல்லைக் கரசிமகிழ்ந்
தாடி யருளாய் செங்கீரை. (௫)

---

(௩) நோன்பு - விரதம். (௪) நிறுவி-நிறுத்தி. தகரம்-மயிர்ச்சாந்து. (௫) கடைவாளி- இறுதியாகிய ஐந்தாவது பாணம்.

## வேறு.

முட்டமறு கமுகெழி லியினக டுழவள் மூசு தடந்தோறும், முழு வொலி யெனவெண் டிரையி னிளங்கரை மோதவ ளஞ்சேரும்,— புடவியின் வண்டு செழுஞ்சல சத்தலர் போதுகு செந்தேறல், போத வருந்தி யடர்ந்திசை யிற்சுதி போலுப லிந்தூத,—மிடல்கெழு மர விற் குயில்பா டக்கவின் மேவுப சுந்தோகை, மிகநின் றுடவாங்குறழ் சீர்கொடு மேல்வளர் தண்சோலை,—யடர்திரு நெல்லைப் பதிவளர் ருமையவ ளாடுக செங்கீரை, யமைதரு புங்கவர் தழுவு சுமங்கலை யாடுக செங்கீரை. (௬)

முருகலர் முத்துக் கொண்டை குலுங்கிட மௌலிநி மிர்ந் தாட,முத்தந் தருகென வுற்றவர் முன்பிள மூரல விர்ந்தாடக்,—நற மலர் கொட்டிபு வருகென வேண்டுநர் காதன்மி குந்தாடக், கலைமதி யெனவொளிர் வயிரக் குழையிரு காதிலி சைந்தாட,—விரிகதி ருமி ழ்பொற் சுட்டி நுதற்பிறை மீதுகி டந்தாட, விலையறு நவமணி வடமுத லியவுர மேவிய சைந்தாட,—வரைவட மொடுமணி நூபுர மாடிட வாடுக செங்கீரை, யமைதரு புங்கவர் தழுவு சுமங்கலை யாடுக செங்கீரை. (௭)

விசு கதிர்ப்பிறை வாணுத லிற்குறு வேர்வைதி கழ்ந்தாட, மேனிசெய் பச்சொளி மாதிர மெட்டினு மேலும்வி ரிந்தாட,—வா சுகி பைச்சிலை நாணெனப் புனை வார்மயல் கொண்டாட, மாயவி டத்து முகாசுர னுேத்த மகாரதர் திண்டாடத்,—தேசு பரப்பெழு மாதர் முதற்பலர் சேணினு வந்தாடச், சேட னெளிந்திட நீடகி லத்தொகை சேரவ சைந்தாட,—வாசு தவிர்த்தெமை யாளுடை யுத்தமி யாடுக செங்கீரை, யாய்மறை நற்றவ வேப்பவன் மூற்றவ ளாடுக செங்கீரை. (௮)

வான்றரு மாண்பத மூன்றுபு தாம்பிர மன்றே நின்றுடும், வாத ரிடத்தமர் மரகத மெய்த்திரு மங்காய் பொங்காழி,—தான்

(௬) முடம் - வளைவு. அகடு - வயிறு. அமை - மூங்கில். (எ) மௌலி - கிரீடம் உரம் - மார்பு. (அ) வாசுகி - ஒரு பாம்பு. நாண் - கயிறு. மகா ரதர் - நால்வகைரதவீரரிலொருவர்.

றரு மின்கொடி தோய்ந்துள பைம்புய றங்காய் கங்காயுந், தசை படு வேல்கொடு நிசிசர ராசி தடிந்தா டுஞ்சேயை,—யீன்றனை யெ மைநீ யாண்டருள் புரிவா யென்போர் துன்போட, விகபர சுகம் வலி துதவுந லருமை யிசைந்தாய் பைந்தாரு,—தேன்றரும் வரை வாழ் கோன்றவ மதலாய் செங்கோ செங்கீரை, திகழுமெ யடியவர் புகழ்வடி வுடையவள் செங்கோ செங்கீரை. (௯)

உரிமையி னசலமன் மருவுதன் மனையொடு முய்ந்தோ மென்றுட, வுளமலி கவலைய தொழிதலின் முனிவர ருன்சீர் கொண்டாட,—வரியயன் முதலினர் பதநிழ லருளென வங்கே வந்தாட, வளிமுரல் சததள மலரிரு மகளிரு மன்பா நின்றுட,—விரிதரு குவலய மணிதரு பெருமை விழைந்தோர் கண்டாட, மிடறுமை படர்தர நெடுமுடி நதியொடு விண்சே ரிந்தாரத்,—திரிபுர தகனனை நிகரமை வனவுமை செங்கோ செங்கீரை, திகழுமெ யடியவர் புகழ்வடி வுடையவள் செங்கோ செங்கீரை. (௧௦)

செங்கீரைப் பருவம்
முற்றிற்று.

---

மூன்றாவது:

## * தாலப் பருவம்.

இணையா டுதற்கொன் றெவ்வாநீ யெடுத்த விளையாட் டெனுந் திருக்கூத், திசையப் பசியுற் றவர்போன்மிக் கிரங்கி யேங்கி மிகக் குழைவாய்க்,—கணையா டயிற்கண் ணீர்சோரக் கதறிக் கால்கை யுதறியருட், கற்பி னனைமார் விரைந்தெடுப்பக் கண்டு மடிமீ திருந்து விம்மித்,—துணையா டகப்பைந் திதலைமுலை சுவைத்து முகம் பார்த் தகமகிழ்ந்து, துவர்வாய் கூட்டி மழலைகொஞ்சிச் சோதி மணிப்பூந் தொட்டி லிற்பொன்,—னணையா டையின்மேல் விழிவ ளர்பெண் ணமுதே தாலோ தாலேலோ, வலர்ப்பைங் கூந்தற் காந் திமதி யம்மே தாலோ தாலேலோ. (௧)

---

(௯) கங்கு - பருந்து. நிசிசரர் - அசுரர். (௧௦) அசலமன் - இமயமலையரசன். சததளம் - நூறிதழ்.

* தாலப் பருவம் - தாலாட்டுப் பருவம். தாலாட்டு - ஒருவகையாக நாவசைத்துப் பாடும் பாட்டு. தாலு - நா. (௧) திதலை - தேமல். துவர்வாய் - பவளம்போன்ற வாய்.

கள்ளப் பினிற்கொப் பளிக்குமிதழ்க் கமலங் களைப்பாழ்ங் களை களெனக், கடிந்தங் கெறியுங் கடைசியர்கட் கயல்கள் பிறழ்கின் றதிற்கருங்காற்,—பள்ளப் பயல்கள் விருப்பெய்திப் பருங்கை நீட்ட வவர்வளைக்கைப், பங்கே ருகங்கொண் டொதுக்கவுடன் பலவா யின்வென் றுவப்போங்கி,—மெள்ளக் கவர்வான் றொடங்குதலும் வெருளுற் றிரங்கு மிடற்றொலியான், மென்கோ கிலமெங் குற்றவென மேல்சூழ் நோக்கி வெறியயர்சீ,—ரள்ளற் பழன நெல்வேலிக் கரசே தாலோ தாலேலோ, வலர்ப்பைங் கூந்தற் காந்திமதி யம்மே தாலோ தாலேலோ. (உ)

கோட றவிர்சீர்ச் செழுஞ்சோலைக் குறும்வால் வளையைக் குழவியெனக், கொண்டு புனைசிற் றுடைமன்னிக் குளிர்நீ ராட்டிக் கவானிருத்திப்,—பாடல் வரிப்பூ முளரியிதழ்ப் பசுந்தே னெடுத்து வாய்புகட்டிப், பரிந்தொக் கலைவைத் துலவிநனி பாராட் டுபுதம் மடிக்கிடத்தி,—யூடன் மடவார் வெறுத்தெறிய வொளிர்பன் மணிக்கோத் தணிந்துகொஞ்சி, யுறங்கா யுறங்கா யெனத்தாலாட் டுரைத்து மழலைச் சிறுமியர்மிக்,—காடல் புரியுந் திருநெல்லைக் கணிமேய தாலோ தாலேலோ, வலர்ப்பைங் கூந்தற் காந்திமதி யம்மே தாலோ தாலேலோ. (ங)

ககனத் துலவ லாற்றமதங் காலா றுகக் காட்டுதலாற், கண்ணீர் ததும்ப மருவலரைக் கடிது சாடுந் தன்மையினுன்,—மிகமெய்க் கருமை யாற்றுளைக்கை வினையாற் றும்பி யெனும்பெயரால், வியன்கோ டுறலான் மதுகரம்பல் விதத்துந் தம்மின் வேழமெலாந்,—தகமிக் கியலுந் தொடர்புன்னிச் சார்ந்தங் கவற்றின் கவுட்சுவட்டுத், தான மடுத்துத் தரைபொதியுஞ் சம்புக் கனியிற் கிடந்தொளிர்சீ,—ரகன்மைப் பொழிலார் வேணுவனத் தணங்கே தாலோ தாலேலோ, வலர்ப்பைங் கூந்தற் காந்திமதி யம்மே தாலோ தாலேலோ. (ச)

---

(உ) அப்பினில்-நீரைப்போல. கோகிலம்-குயில். வெறியயர்-வெறிகொண்டு விளையாடுகின்ற. அள்ளல்-சேறு. (ங) கோடல்-கோணுதல். வரி-வண்டு. (ச) ககனம்-ஆகாயம் × காடு. தமதங்காலாறு-தம்முடைய அழகியபாதம் ஆறு × தம்முடைய மதம் வாய்க்கால் நதி. கண்ணீர்-கள்ளாகியநீர் × கண்ணிலிருந்து வரும் நீர். மருவலர்-வாசனை தங்கிய மலர் × பகைவர். துளைக்கை-துளைத்தல் × துவாரமுள்ள கை. கோடு-மரக்கிளை × கொம்பு தம்மில்-தம்மைப்போல. கவுட்-கன்னம். தானம்-மதம். சம்பு-நாவல்.

பரசுற் றொளிருங் கரத்தினர்செம் பவளச் சடிலா டவியினூ டும், பாலப் பிறைமீ தூரங்கிடந்த பன்றி மருப்பைப் பொருத்தி மலை,—யரசற் புதமா வளர்த்துமுத்தா டஞ்சொற் கனிவாய் முறு வலில், வடைத்து மதியிற் படைத்துவிளை யாடுமலர்க்கை யாரா முதே,—பிரசப் பதுமா டகப்பொகுட்டிற் பேழ்வாய்ப் பணில முமி ழ்மணியைப், பிறங்குங் கருவெண் றயிர்த்துமடப் பெடையோ திம முற் றடைகிடக்குஞ்,—சரசிற் றிருவாழ் தமிழ்நெல்லைத் தவமே தாலோ தாலேலோ, தருமம் வளர்க்குங் காந்திமதித் தாயே தாலோ தாலேலோ. (௫)

## வேறு.

அளறு மலிந்து கயற்செடி நாறு மலர்த்தட மூடுதியா, தறல் சுவ றிப்பா சடைபொதி யாதளி யறுகால் கொடுதுவையா,—திள நகை மடவியர் முகநிகர் மதிய மிலங்கி லகங்குவியா, திழையொடு புழைபட முட்பொலி தருதா ளிற்றின முற்றசையா,—துளநலி பனியிற் கருகா தலரிமு ஞென்றலி னென்றுமலர்ந், தொளிருமெய் யடியவ ரிதயச ரோருக வொண்மலர் மாளிகைவாழ்,—தளவமென் முகைநகை யரசெகி னப்பெடை தாலோ தாலேலோ, சதுமறை புகழ்வேய் வனவடி வுமையே தாலோ தாலேலோ. (௬)

கண்மலி தோகை மயூர முவப்பக் ககனத் திடைபரவுங், கரு மஞ் சுதனை வளைத்தறல் பருகக் கனலுமிழ் கட்டறுகட்,—டிண்மத வேழ நிமிர்த்த துதிக்கை செயிர்த்தெதிர் நீண்டவருந், தீவிட வா வென வெருவிய விருசுடர் திசைவில கிச்செலநீள்,—விண்மரு சோ லையின் மந்திகள் பாய்தலின் வீழ்கனி சிந்தியதேன், வெள்ளங் கவ ரியின் மடிசொரி பாலொடு விரவி வியன்பொலியுந்,—தண்மலர் வாவிகொ ணெல்லைக் கினியவ டாலோ தாலேலோ, சதுமறை புகழ் வேய் வனவடி வுமையே தாலோ தாலேலோ. (௭)

---

(௫) பரசு-மழு. உரம்-மார்பு. முத்தாடு-முத்தமிடுகின்ற. சரசு-தடாகம். (௬) அளறு-சேறு, செடி-தீநாற்றம். சுவறி-வற்றி. இழை-நூல். புழை-துவாரம். அலரி-சூரியன். (௭) தறுகண்-அஞ்சாமை, மரு-மருவுகின்ற. கவரி-எருமை.

இமிழ்திரை யெனுமா முரசொலி கொடுபூ வேலோர் வேள்
போரா, விடைதலி லடியார் குழுவெண நிகழ்கா வேடார் போதோ
டார்,—ரமிழ்துறழ் பலபா மழைசொரி தரநீ டாலோ ணர்நீர்தோ,
யணிமுடி திகழ்மால் வரைபடர் கொடியே யாளூர் மானேர்வாய்,—
குமிழ்மிசை மறிசேல் விழிபொரு குழைசார் கோதாய் வாளுள்
வார், குலம்வழி படவாழ் மயிலெனு மியலாய் கோடா மேலோர்
சூழ்,—தமிழ்முனி தவநேர் பொருணைந னதியாய்தாலோ தாலேலோ,
சதுமறை புகழ்வேய் வனவடி வுமையே தாலோ தாலேலோ. (௮)

சீலத் தயன்மலர் மேவிப் புரிதொழில் சீர்கே டாகாமே, தீ
யொத் துமிழ்விட வாய்மெத் தையன்வினை தீதா மாறாமே,—யோ
லத் திரைகடன் மேவிட் டகிலம தூறு மூழ்காமே, பூசற் கரநரை
வேழக் குரிசில்வி ணூர்வாழ் வோயாமே,—கோலத் தனிமுது
வேதப் பனுவல்கள் கோதா மாயாமே, கோபப் பிணிதவிர் வார்மெ
ய்த் தவம்வெருள் கோளு டாடாமே,—சாலத் திருவருள் சேர்கட்
கருமயி ருதாலோ தாலேலோ, தாழ்வற் றுயருநெல் வேலிப் பதியுமை
தாலோ தாலேலோ. (௯)

தொந்தி தழைந்துள தந்தியை முன்பெறு தோகாய் தாலே
லோ, தொண்டரொ டிம்பர்க ளும்பரு வுந்திரி சூலீ தாலேலோ,—
வைந்திகல் வென்றவர் தூன்றிம யங்கொள்கல் யாணீ தாலேலோ,
வம்புவ னங்க ளொருங்குத வும்பொது வாயீ தாலேலோ,—மந்திர
விஞ்சை நிறைந்த சுமங்கல வாழ்வே தாலேலோ, மஞ்சிவர் மன்றரு
மின்குற மின்றொழு மாயீ தாலேலோ,—தந்திர நண்பர் வருங்கழை
யின்புடை சார்வாய் தாலேலோ, தண்கதிர் விஞ்சு முகங்கொள்
பசுங்கிளி தாலோ தாலேலோ. (௧௦)

தாலப் பருவம்.

முற்றிற்று.

---

(௮) ஏவோர்-பாணத்தை ஆராய்கின்ற. ஆலோன்-சந்திரன். (௯) வினை-காத்தற்றொழில். நரை - வெண்மை. வெருள் - அச்சம். (௧௦) விஞ்சை-வித்தை. மஞ்சு - மேகம். கழை - மூங்கில்.

## நான்காவது:

# * சப்பாணிப் பருவம்.

எண்குலவு மமரர்மலர் மழைகொட்ட நனிகொட்ட மிடிதுட்ட மயிடன்முதலோ, ரிகலுளம் பறைகொட்ட வென்றிநம தென்றுசசி யின்பமிகு கொம்மைகொட்டக்,—கண்குலவு மெய்யன் புயங்கொட்ட வவுணமங் கையர்செங்கை கொங்கைகொட்டக், கனதெய்வ மறையோ ரகந்தொறு மகஞ்செயுங் கனலிலா குதிகள்கொட்டத்,— திண்குலவு மாசிரியர் பூசைமட மெங்கணுஞ் சேமக் கலங்கள்கொட்டத், தேவா லயங்களி லணங்கினர்பொன் மனைகளிற் றிருவிழாப் பேரிகொட்டத்,—தண்குலவு நின்கடைக் கண்கருணை கொட்ட வொரு சப்பாணி கொட்டியருளே, சாலிவா டீசர்த மிடத்தினி தமர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே. (க)

பைங்கதிர் பிறங்குநின் றிருமேனி யழகைநனி பாராட்டி முதிருமன்பிற், பணியுமெய்த் தவநிலவு கவிராச பண்டிதன் பாடற் கிரங்கிமேனாட்,— பொங்கமிகு பரிசெனக் காசிக் கவன்செலும் போழ்தூர்ப் புறத்தவன்றன், புதல்வியிற் றோன்றுபு தனித்திவ ணிரே னின் புறந்தொட்டு வருவலென்று,—வங்கவ ணியைந்திட வுடன் சென்று சிறிதுநீள் காதடிசி லட்டிட்டுமோ, ராவணத் திற்கண் டவாமிக விளக்கியுவ ணருமையிற் புனையுமந்தத்,—தங்கமய மணிவளை புலம்புநின் செங்கையாற் சப்பாணி கொட்டியருளே, சாலிவா டீசர்த மிடத்தினி தமர்ந்தகொடி சப்பாணி கொட்டியருளே. (உ)

புதுமலர்ச் சோனைமது வார்குழற் சசிமுதற் பொன்னுலக மின்னனார்தம், பூங்களத் துறுநா ணளித்தவிரு புதல்வர்துயில் பொருவில்போ தமளியென்றும்,—விதுவொடு கதிர்க்கடவுண் மேனாட் டடைப்பட்ட வெஞ்சிறைச் சாலையென்றும், மிகவுநெக் குருகியடி தொழுமுழுவ லன்புடைய மெய்யடியர் பையுளகலக்,—கதுவபய வரதமுற் றருள்விக சிதச்செழுங் கமலமலர் நிதியமென்றுங், கனியு

---

* சப்பாணிப்பருவம்-இரண்டுகைகளையும் ஒன்றுசேர்த்துக்கொட்டிவிளையாடும் பருவம். (க) கொட்டம் - பொல்லாங்கு. கொட்ட-கைகுவித்துக் கொட்ட. (உ) கவிராசபண்டிதன் - சௌந்தரிய லகிரிபாடிய புலவன். அடிசில் - சோறு. அட்டு - சமைத்து. (ங) சோனை - விடாது பெய்யு மழை இருபுதல்வர் - விநாயகர், சுப்பிரமணியர். உழுவலன்பு-எழுமையுந் தொடர்ந்தஅன்பு. விகசிதம்-விரிவு.

மென் குதலைப் பசுங்கிள்ளை பயிற்றுங் கவினார் குடம்பையென்
றுஞ்,—சதுமறைக ளோலிட் டிறைஞ்சுங்கை கொண்டின்றோர் சப்
பாணி கொட்டியருளே, சாலிவா டீசர்த மிடத்தினி தமர்ந்தகொடி
சப்பாணி கொட்டியருளே. (௩)

தறைதொடு புழைக்கைக் கடாங்கவிழ்ப் பப்பண்டி சரியவொண்
கிண்கிணிபணித், தாளிற் கிடந்தினி தலம்பவல முற்றிளவ ரன்வரு
முன் முந்துமொற்றைப்,—பிறைமருப் பிபமுகத் தொருமகற் கொ
ழுகுதீம் பிரசப் புதுக்கனிதரும், பேரமர்க் கட்கடவுண் மந்தா
கினிச்சுமை பிறங்குபொற் சடையெந்தையை,—நிறைதருமு ளன்பி
னிற் பூசித் தருச்சனை நிதம்புரிந் தைந்தெழுத்தி, னிலையுணர்ந் தரிது
புரி தவமுதிர்ந் திருநாழி நெற்கொண் டுலகுமுப்பான்,—குறை
விலெண் ணான்கறம் வளர்த்தகை முகிழ்த்தம்மை கொட்டியருள் சப்
பாணியே, கொல்லாத விரதர்மிகு நெல்வேலி வடிவம்மை கொட்டி
யருள் சப்பாணியே. (௪)

நீலமைக் குவளைமலர் மேல்வனக் காந்தள்போய் நேர்கவியு மதி
சயம்போ, னேமியிற் கயலினஞ் சார்தல்போ லுணவுதவு நீரோரு
கச்செவிலிமார்,—சாலமைத் தகையளிக ளுமக்க டம்மையெ
திர் தழுவல்போற் பழையநூலோர், தையலார் கண்குடங் கைக்கு
வமை யென்பதைத் தானுணர்த் திடுமுறைமைபோன்,—மாலமைத்
தருநிழற் கடவுண்மிக விழையுநீ வழுதிமக ளாகி வளர்நாண், மழ
லைப் பசுங்குதலை வாய்ச்சகியர் பலரோடி வந்துவந் தனைய வவர்
தங்,—கோலமைக் கண்புதைத் தாடுமிரு கைகொண்டு கொட்டி
யருள் சப்பாணியே, கொல்லாத விரதர்மிகு நெல்வேலி வடிவம்மை
கொட்டியருள் சப்பாணியே. (௫)

## வேறு.

கன்றார்த் திடப்பூங் கரத்தாற்பொற் கலச முலையார் தொகுத்
தாடுங், கழங்கம் மனைபந் தெழுனும்வெண் மைக் களிறார் தருந்தீங்
கவளமிவை,—யென்றார் வத்திப் பெரிதூச லிடுநீள் புழைக்கை

---

(௪) புழைக்கை - துதிக்கை. பேரமர்க்கண் - பெரிய யுத்தஞ்செய்த நெற்றிக்கண். (௫) நீரோருகச் செவிலிமார் - தாமரையாகிய செவிலித்தாயர். மால் - பெரிய. அமைத்தரு - மூங்கில் மரம். (௬) கன்று - வளையல்.

யிளைநீட்ட, வெழிலேந் தருவாழ் பறவையின மெறியுங் கவண்க லெனவிரிய,—மின்றூழ் பொலங்கொ ளலங்கன்முடி விண்ணோர் நகரி தனையளவி, வியனூர் மணிபற் பலகுயின்று மெய்வெற் பினநா ணுறமிளிர்செய்,—குன்றூர் நெல்லைப் பதிவடிவே கொட்டியருளாய் சப்பாணி, கொழிக்குங் கருணை விழிக்குயிலே கொட்டி யருளாய் சப்பாணி. (௬)

## வேறு.

செழுமதி மணமார் தருமிரு தாள்பணி சீரியர் மலையாமே, திருநுத விற்குறு வெயர்வை துளித்தணி திலகம் தழியாமே,— தொழுமொரு நால்வர் தமிழ்க்குரு குஞ்செவி தொடுகுழை துவளாமே, தொனிசெய் திலங்கெழி லாடக முன்கைச் சூடக நெறியாமே,—விழுமறை நவிலற முற்றும் வளர்த்தகை மெல்விரல் கன்றாமே, மின்னிடை மெலிவுற வளரள கத்தடர் மிஞிறிகல் புரியாமே,— குழுமிய மணிமுடி யிமவெற் பருண்மகள் கொட்டுக சப்பாணி, குளிர்சீ லக்கழை வனம்வாழ் சிற்பரை கொட்டுக சப்பாணி. (எ)

இடிநா ணப்பிளி றிடுமா சைக்களி றெட்டொடு பைச்சேட, னிபைபா ரச்சுமை யுதியா முற்பொழு திற்பசு மைத்தாகும்,—வடி வார் முட்டையு ளரியோ டுற்றவண் மட்டவிழ் கைப்பாண,பதவேள் பொற்புடல் பொடியா கத்தழல் வைத்துள கட்பாலர்,—முடிசேர் பொற்பத யுகவாழ் வைத்தொழு முத்தர் பெறச்சூடு, முதலே மைக் கட லிடைநீ டுற்றவிண் முட்டொரு கொக்காய,—கொடியோ னைச் செறு மயிலா யுற்றவள் கொட்டுக சப்பாணி, குளிர்சீ லக்கழை வனம்வாழ் சிற்பரை கொட்டுக சப்பாணி. (அ)

தியிலொர் தொண்டன் விழாதர சன்புடை செப்புரை தப் பாது, சேண்மதி யென்றெழ வோர்குழை யன்றெறி செக்கர் நிறத் தாயி,—வேயி லிலங்கிரு தோள்வடி வம்பிகை வெற்பிம யச்சாரன், மேய பசுங்கொடி யாயிர மெண்பெறு மிக்க பணச்சீர்கொள்,— பாயி லுறங்கும்வை போக துரந்தரி பச்சுதி ரச்சூலர், பாதியுடம் பக லாத சுமங்கலை பத்தர் கருத்தாய,—கோயில் கொளுங்கலி யாண சவுந்தரி கொட்டுக சப்பாணி, கோமள மிஞ்சுநெல் வேலி யமர்ந்தவள் கொட்டுக சப்பாணி. (௯)

---

இரிய - ஓட. மெய்வெற்பு-உண்மை-மலை. (எ) விழு - சிறப்பு. மிஞிறு- வண்டு- (அ) பாலர்-நெற்றியையுடையவர். பதயுகம் - இரண்டு திருவடி. கொக்கு - கூறுகிய மாமரம். (௯) தொண்டன் - அபிராமிபட்டர். பணம்- படம். வைபோகம் - மகிழ்ச்சி. துரந்தரி - வல்லபமுடையவள்.

### வேறு.

பொருதூண்கண் வரும்வெய்ய வரிநாண்கொ ளடல்செய்த புட்சரப மெய்ப்பாதியே, புகழ்தாங்கு மொருசைவ மகவேங்கி யழவல்லை புத்தமுத ளித்தாளுவா,—யருகீண்டி மனநல்கி மிகவேண்டி மலர்பெய்பு மற்புதர்கண் முற்றோணுவா, யடர்பாந்த ணிகர் மைய லிருணீங்கி விடவெல்லு மக்கரம ணித்தீபமே,—முருகே ய்ந்த முகைமௌவ னிரைவாய்ந்த நகைமல்கு முத்தொழின்மு தற் றேவியே, முடைசார்ந்த பவவல்ல லறுமாண்பு பெறவெஃகு முத் தருணர் மெய்ச்சோதியே,—குருகார்ந்த விருகையி லறமோங்க நிகழ்செல்வி கொட்டியருள் சப்பாணியே, குளிர்பூந்தண் வயனெ ல்லை வளர்காந்தி மதிவல்லி கொட்டியருள் சப்பாணியே. (க0)

சப்பாணிப் பருவம்

முற்றிற்று.

---

ஐந்தாவது:

## * முத்தப்பருவம்.

---

இறுகு நகிலத் தணங்கினர்கை யிதழ்ப்பங் கயத்தே மலர்குவிய, விம்பை பெருகுங் கொடும்பழிசே ரிகல்வா ளவுண விருளோ துங்க,—மறுவில் குதலை மொழியமுத மாந்துங் கிளிநீ தழுக்காறு, மலியு மிருநே மிபம்பறவை மான முலைக்கண் மேனொக்க,—நறு மென் மலர்தூய்ப் புகழ்தொழும்பி னல்லோர் கணமாங் கடன்முழ ங்க, நவைதீர் மேனை யாதியர்வாய் நளிர்சே தாம்பன் மலர்தரப் புன்,—முறுவ னிலவுற் றவிர்கனிவாப் முத்தந் தருக முத்தமே, முத்த ருணர்வேய் முத்தர்புணர் முத்தே முத்தந் தருகவே. (க)

---

(க0) அரி - நரசிங்கம். வல்லை - சீக்கிரம். பாந்தள் - பாம்பு. அக்கரம் - பஞ்சாக்கரம். முடை - ஒரு தீ நாற்றம். குருகு-வளையல்.

* முத்தப் பருவம் - முத்தங்கொள்ளும் பருவம். (க) நகிலம் - முலை. நேமி - சக்கரவாகம். மான-ஒப்ப. நளிர்-குளிர்ச்சி.

வடிவேற் குமர னருமையிற்கண் வளர்நின் றுடைகட் குடை
கதலி, மணிமுத் தரிவா ளினிற்றுணியாம் வதன வழகுக் குடை
தருசேற்,—கொடிவேள் குடைமுத் தொருதக்கன் கொடும்வேள்
வியைச்செற் றிடும்வீரன், குலப்பொற் கழற்கா லிடைகுமையுங்
கொழிதண் ணருட்கட் குடைகயன்முத்,—திடிவே லையின்புன்
முடைகமழு மெழிற்குச் சணிவார் சடைக்குடையாம், பின்முந்
திகல்கூர் கலுழன்மயி லீர்க்கச் சிதையு மிவற்றைமறை,—முடி
வேண் டுறுமியாம் விழையேமநின் முத்தந் தருக முத்தமே, முத்த
ருணர்வேய் முத்தர்புணர் முத்தே முத்தந் தருகவே. (உ)

கைக்குஞ் சலதிப் புனலிப்பி கலுழ்முத் துருவேற் றுமைபொ
ருந்துங், கடுஞ்சூ கரத்தி னுலவைமுத்தங் கனமண் ணகழ்காற்
கரைவுபடு,—மைக்குஞ் சரவான் மருப்பிடத்து வருமுத் துருவாற்
பெருத்திழியும், வளர்பூ கதமுத் தடர்பகட்டு வாளைத் திரளாற்
கோழையுறு,—மெய்க்குஞ் சுரிவா ரணஞ்சொரிந்த வியன்முத்
தினஞ்சேற் றிடைபிறழும், வேள்கைச் சிலைமுத் தாலையிடை வீ
ணொழுங்கு மிடைந்தறுகான்,—மொய்க்குங் குழலாய் நின்றிருவாய்
முத்தந் தருக முத்தமே, முத்த ருணர்வேய் முத்தர்புணர் முத்தே
முத்தந் தருகவே. (ங)

விளரிச் சுரும்பு முரலளக மின்னார் களமுத் துளவெனநூல்,
விரிப்ப தன்றிப் பெறுமாறும் விளங்கும் விதமும் வினவுகிலேங்,—
கிளரிக் குறழ்செஞ் சாலிமுத்தங் கிறிவா யுழவர் தொடும்பகட்டுக்,
கிளைக்கா றுவைப்பக் கேடுபடுங், கிரிக்கோ மகணின் பதம்போல்
வான்,—வளரிச் சையிற்செய் தவங்கருதி வனத்து டொருதா
ளூன்றிநின்று, வடிக்குங் கண்ணீ ருடன்பங்க மாறு துறக்கண் டக
மிடையு,—முளரிச் செழுமுத் துயர்வன்றின் முத்தந் தருக முத்
தமே, முத்த ருணர்வேய் முத்தர்புணர் முத்தே முத்தந் தருகவே.

---

(உ) குலம் - நன்மை. குமையும் - அழியும். குச்சு - சடையிலணியும் ஓராபரணம். விழையேம் - விரும்ப மாட்டோம். (ங) சூகரம் - பன்றி. உலவை - கொம்பு. பூகதம் - கமுகு. கோழை - குற்றம். (ச) விளரி - ஒருபண். கிளர் - விளங்குகின்ற. கிறிவாய் - (உழவின்) வழிவாய்ந்த. போல்வான் - சமானமாகும் பொருட்டு. கண்டு - செய்து. இடையும் - வருந்தும்.

ஐவாய் மானி னங்கைமுத்து மானி னெயிற்றி லவிருமுத்து, மடல்கூ ருடும்பி லமையுமுத்து, மணிமஞ் சுகநீள் கழுத்தின் முத்து,—மைவாய் முகில்கள் பெய்யுமுத்தும் வரிச்சூர் முதலை வழங்குமுத்து, மற்றும் பலவா வகுக்குமுத்து மனத்தாற் சிறிது மதிப்பனவோ,—மெய்வாய் கண்மூக் கொடுசெவியின் விடய மதைநீத் தவர்க்கருளும், வேய்முத் தவர்தம் வாய்முத்தம் விரும்புங் கொடியே மிகக்கருணை,— செய்வாய் வினைகள் கொய்வாய்நின் றிருவாய் முத்தந் தருகவே, திகழ்சீர் நெல்லைக் கினியபசுந் தேனே முத்தந் தருகவே. (ரு)

கண்முத் தவர்தஞ் சடைக்காட்டிற் கமழு மத்த மருக்கமுடிக், கணநேர் தும்பை யிடையொளிக்குங் கறைக்கூன் பிறைக்கீற் றுடற்குறையுந்,—தண்முத் தணிமேதாய்ந் திலங்குமுலைச் சலிலத் தணங்கினுருவமுந்தத், தளிக்க வுதைத்த வலத்தகப்பொற் சதங்கைத் துணைப்பூந் தாள்வருடிப்,—பண்முத் தமிழிற் பழுக்குமின்சொற் பாவாய் காவா யெனவிரந்து, பணிந்தேத் தனுமுட் கனிந்துசற்றே பால்போ னிலவு கால்வீசுந்,—தெண்முத் தவிருஞ் செம்பவளத் திருவாய் முத்தந் தருகவே, திகழ்சீர் நெல்லைக் கினியபசுந் தேனே முத்தந் தருகவே. (சா)

## வேறு.

ஊனொழுகு கழுமுட் படைக்காத் தெந்தைபொடு முயர்கயிலை மால்வரையின்மீ, தொண்கமல மங்கையர்கள் வெண்கவரி காலசைத் துபயபா ரிசமுநிற்பக்,—கானொழுகு கூந்தற் றிலோத்தமை முதற்றேவ கணிகையர் நடிப்பமேவிக், காந்தளி னிசைந்துபொற் கடகமிட் டவிர்செழுங் கைத்தலத் தினிதிணைந்தும்,—வானொழுகு புத்தமிழ்தின் மதுரங் கனிந்தொழுகு மழலைப் பசுங்கிளிக்கு, வள்ளவா யமுதம் புகட்டிமகிழ் பூத்தருண வண்குமுத மலரினின்று,— தேனொழுகு வதுபோலு மென்சொற் பயிற்றுநின் செய்யவாய்

(ரு) ஐவாய் - சிங்கம். ஆவின் - பசுவினது. மஞ்சுகம் - கொக்கு. (சா) கண்-மூங்கில். அருக்கம்-எருக்கு. சலிலம்-கங்கை. அலத்தகம்-செம்பஞ்சுக்குழம்பு. தெண்முத்து - தெளிந்த முத்துப்போன்ற பல். (எ) கழுமுள் - சூலம். உபயபாரிசம் - இரண்டுபக்கம்.

முத்தமருளே, சிந்துபூந் துறைகுலவ வந்தகாந் திமதிநின் செய்ய வாய் முத்தமருளே. (எ)

கருதலர் தமைக்குடர் குழம்பச் சவட்டிக் கறைப்படு திறற் பெருமூரற், காலிற் றளைந்திட்ட நிகளந் துகட்படக் கந்துதறி யெதி ருநிழலைப்,—பொருதுகட் கடையன லுகுத்துத் தடக்கிம் புரிக்கோ டியர்த்தியதிர்கால், புடையெழத் தழைதுணைச் செவியிரட் டிக்கடைப் புனலிற் கடாங்கவிழ்த்திட்,—டுருமுறழ் தரப்பிளிறும் வெடிகுரலி னண்டமுக டுஞ்செவிடு படவெஞ்சினத், துடனதட் டிப் பனை பொரூஉங்கர நிமிர்த்தலகி லும்பல்வான் றருவலைப்பத்,— தெருவிலத் தெய்வமலர் கமழ்நெல்லை யூரிறைவி செய்யவாய் முத்த மருளே, சிந்துபூந் துறைகுலவ வந்தகாந் திமதிநின் செய்யவாய் முத்தமருளே. (அ)

## வேறு.

வெற்றி யுறப்பணி சித்தச னிக்குவில் வித்தைபெ றப்புரிவாய், மித்தை விருப்பி னெனக்குமு னற்பினை மிக்கருள் கற்பகமே,— வற்றன் மரத்தினு ணட்டொரு சற்றுமின் மட்டிகண் முற்குறுகாய், மச்ச வினத்தை வனத்து முடுக்கிய மைக்கண னப்பெடையே,— செற்ற மிகுத்தெரு மைத்தகு வற்செறு செக்கர்நி றத்தவளே, செப் பரு முத்தமி ழிற்கனி வுற்றுரு சிக்குமொ ழிக்கிளியே,— முற்று கழைக்க ணுதித்தவர் பத்தினி முத்தம ளித்தருளே, முக்க ணுடைக்குபி லொத்த வனப்பினண் முத்தம ளித்தருளே. (க)

## வேறு.

பதுமனுங்கன் றரியர்சித்தம் பயில்பெண்முத்தந் தருகவே, படிறுடைச்சண் டனைமுடிக்கும் பதுமைமுத்தந் தருகவே,— யதுலமெய்த்தொண் டினர்மனத்தொன் றமலைமுத்தந் தருகவே, யறம்வளர்க்குங் கரதலத்தன் பரசிமுந்தந் தருகவே,—குறுகுலத்

(அ) சவட்டி - அழித்து. ஊரல் - ஊரல்போலும். நிகளம் - சங்கிலியாகியதளை. கந்து - கட்டுத்தறி. இரட்டி - அசைத்துவீசி. உரும் - இடி. (க) மரத்தின்-மரத்தைப்போலும். எருமைத்தகுவன்-மகிடாசுரன். (க0) படிறு-பொய். பதுமை - பாவைபோன்றவளே. அதுலம் - ஒப்பில்லாமை.

தெங் கணுநடிக்குங் குடிலைமுத்தந் தருகவே, குலவரைப்புங் கவன் வளர்க்குங் குழவிமுத்தந் தருகவே,—சதுமறைக்கின் கிணிய ணிச்செஞ் சரணிமுத்தந் தருகவே, தமிழ்கொழிக்குங் கழை வனத்தின் றலைவிமுத்தந் தருகவே. (கo)

முத்தப் பருவம்

முற்றிற்று.

---

ஆறாவது:

## வாரானைப் பருவம்.

என்று மழிவற் றொளிர்நலம்வேட் டிளஞ்சூ ரியர்க ளிருவருண, திணைவார் செவிப்பா லடைந்திடல்போன் றிலங்குங் குழைக ளசைந்தாடத்,—துன்று மணிப்பொற் கலைசிறிது துவள மலைநேர் முலைப்பொறைக்குஞ், சுரும்பு முழங்குங் கருங்கூந்தற் சுமைக்குந் தளர்சிற் றிடையெனச்சொன்,—மின்றுன் பதுகண் டிரங்குதலின் மிழற்றுஞ் சதங்கைப் பதம்பெயர்த்து, மேலோர் வழுத்தக் கனல் வரைபோன் மிளிர்தாம் பிரத்தால் விதித்ததிரு,—மன்று ளிறைவ ருடனுறை மயிலே வருக வருகவே, வரைமால் வனத்துத் திருநெல்லை வடிவே வருக வருகவே. (க)

சிலையொத் தவிர்வா ணுதல்வரம்பிற் செறிவேர் வகற்ற வருக மணற், சிற்றி லிழைத்தட் டுணுந்தாளச் சிறுசோ றெமக்குந் தர வருக,—நிலைமைத் தருநின் னுடன்முழுது நிறைதா டுடைக்க வருகவிரை, நீரிற் குளிப்பாட் டிடவருக நெடுங்கட் கணிமை யிட வருக,—விலையெத் திசைக்கு மடங்காது மிளிர்பொற் பணிபூட் டிட வருக, மிகவென் மடிமீ திருந்தமுதம் விழைவிற் பருக வருக வியன்,—மலையத் தமிழ்கேட் டுளமகிழும் வாழ்வே வருக வரு கவே, வரைமால் வனத்துத் திருநெல்லை வடிவே வருக வருகவே. ()

---

(கo) குடிலை - பிரணவப்பொருளா யுள்ளவளே. சரணி-பாதத்தை யுடையவளே. * வாரானைப்பருவம்-வருதலை விரும்பியபருவம். வாரானை யென்பதில் ஆனை தொழிற்பெயர்விகுதி. (க) மின் - மின்னல். மிழற்றும் - ஒலிக்கும். கனல்வரை - அக்கினிமலை, (உ) அட்டி - சமைத்து. நிலை - மோக்ஷநிலை.

தண்மைப் பொலிவான் மணிவானந் தரிக்கு மியல்பாற் சலதியி டைச், சாருந் தகையால் வளைகோட்டாற் றனிச்செம் புதனைத் தரு தலினல்,—வெண்மைப் படிவத் தாற்படரு மீன்க ளாற்கைக் கிளை மாக்கள், விதிர்ப்ப வீரெண் கலைவீசும் வியனு லரவ மேவிடலா,— துண்மைப் படலுற் றுாிருளை யொதுக்க லாற்பே ரலவனென்று, முறலா லமுதப் பெருக்கமதா லொண்சீர் மதிய முறழுமெனும்,— வண்மைப் பொருநைத் துறையாடு மடவோ திமமே வருகவே, வரைமால் வனத்துத் திருநெல்லை வடிவே வருக வருகவே. (௩)

கலையை வளர்த்த பிறைக்கோட்டைங் கரத்தோன் றுணைவன் றனைநோக்கிக், கவின்றோய் முகமா றுன்னுருவிற் காணு நிமித்தங் கழறெனக்,—கொலையை வளர்த்த நெடுங்கதிர்வேற் குகவே ணைமயின் றவருவகை, கொழிப்ப வொருமித் தென்னைமுத்தங் கொண்டு விளையா டெதற்கெனலு,—மலையை வளர்த்த கணவரொடு மகிழ்கூர்ந் திளைய மதலைதனை, வாரி யெடுத்து மடியில்வைத்திவ் வாறின் றுணர்ந்தே மெனப்பேசித்,—தலையை வளைத்து முத்தமி டுஞ் சயிலக் குயிலே வருகவே, சாலிப் பதிவாழ் காந்திமதித் தாயே வருக வருகவே. (௪)

வாரா திருந்தா லினிநானுன் வடிவேல் விழிக்கு மையெழு தேன், மதிவா ணுதற்குத் திலகமிடேன் மணியா லிழைத்த பணி புனையேன்,—பேரா தரத்தி னொடுபழக்கம் பேசேன் சிறிது முகம் பாரேன், பிறங்கு முலைப்பா லினிதூட்டேன் பிாிய முடனெக் கலை

(௩) தண்மை-குளிர்ந்தமேகம் + குளிர்ச்சி. மணிவானந்தரிக்கும்-அழகிய ஆகாயத்தில் தங்கும் + முத்துக்களையுடைய வெள்ளைநிறச் சங்குகளை அரித் துக்கொண்டுவரும். சலதி - கடல். வளைகோட்டால் - வளைகின்ற கோண லால் + வளையாகிய சங்கால். செம்புதனை-செவ்வையாகிய புதனை + செம்பை. கைக்கிளைமாக்கள் விதிர்ப்ப வீரெண்கலை- ஒருதலைக் காமமுடைய மனிதர்கள் நடுங்கப் பதினறுகலை × கையையுடைய யானைமுதலியமிருகங்கள் நடுங்க (எதி ர்ப்பட்டவரை) இழுக்கின்ற காடியை அலை. உண்மைப்படலுற்றுாிருளை - உள்ளே களங்க மடைதலைப்பொருந்திஅரிய (புற) இருளை × மெய்ம்மை யடை தலுற்றவாது அரிய (அக) இருளை.போலவனென்றும்-போனதுஅலவனென் றும் × பெரிய நண்டு என்றும். அமுதம் - அமிழ்தம் × நீர். உறழும் . ஒக் கும். வரை - மூங்கில். (௪) துணைவன் - தம்பி. நிமித்தம் - காரணம். ஒருமித்து - ஒன்றுசேர்ந்து; அதாவது, தாய்தந்தையரிருவருடைய ஆறுமுக மும் ஒன்றுசேர்ந்து. (௫) ஒக்கலை - இடை.

யில் வைத்துத்,—தேரார் வீதி வளங்காட்டேன் செய்ய கனிவாய் முத்தமிடேன், றிகழு மணித்தொட் டிலிலேற்றித் திருக்கண் வளரச் சீராட்டேன்,—முரா ரிமவான் றடமார்பிற் றவழுங் குழந்தாய் வருகவே, சாலிப் பதிவாழ் காந்திமதித் தாயே வருக வருகவே. (ரு)

## வேறு.

முத்தொழிற் கடவுளர்கண் மூவர்க்கு முப்பத்து முக்கோடி தேவர்கட்கு, முதிர்சுவைக் கலைவாணி பீடமிவர் சங்கர முனிக்குங் குனிக்குங்கழைச்,—சித்தசனை வென்றுள தபோதனர்க் கும்புகழ்ச் சீகாழி வாதனுக்குந்,—திகழுமா வாசையைப் பூரணைத் தினமெனச் செப்புமொரு தொண்டனுக்கும்,—கைத்தல முகிழ்த்தமுத தாரையிற் றுதிசொலுங் கவிராஜ பண்டிதற்குங், கழறரிய பேரருட் கடன்மடை திறந்தபடி கடையேற்று முதவுகருணை,—வைத்தருளி யென்றென்று மறவாமை தரும்வண்ண மணிநிறப் பிடிவருகவே, வண்டமி முடன்குலவு தென்றல்கமழ் நெல்வேலி வளர்காந்தி மதி வருகவே. (சு)

உரவஞ்ச மதனுடலை யடலைபுரி சிவயோகி யுன்றாளில் வீழ்ந்திறைஞ்ச, வொப்பா துதைப்பச் சடாடவியின் மலர்நின் றுதிர்ந்த மகரந்தநுண்டே,—ளரவஞ் சலிப்பவெங் கணில்விழ வுயிர்த்தழுச் சனிலநுத லழலைமூட்ட, வத்தழற் குருகுமம் புலியமுது பட்டணி யதட்புலி யெழுந்துசீறப்,—பிரவஞ்ச மாலொழிப் பவர்களுட் பரசோடு பிறங்குபிணை கண்டு வெருள்காற், பிரியமுடன் வருகென வழைக்குநின் விழித்துணைப் பேரழ கினுக்குளொல்கி,—வரவஞ்ச முறுவன்மிக் கலர்குமுத மலர்போலும் வாய்ப்பசுங் கிளிவருகவே, வண்டமி முடன்குலவு தென்றல்கமழ் நெல்வேலி வளர்காந்தி மதி வருகவே. (எ)

## வேறு.

பருவதாரி முதல்விண்ணோர்கள் பரவுமேனை புதல்வியே, படியில்வாழு முயிர்களாய பயிர்களுண்டு மெழிலியே,—யிருவர்தேட

---

(சு) இவர் - ஏறுகின்ற.ஒரு தொண்டன் - அபிராமிபட்டர். (எ) உரம்-நெஞ்சு. அடலை - சாம்பல். மூச்சனிலம் - மூசசாகிய காற்று. அதட்புலி-தோலாகிய புலி. பரசொடு-பாசுதலுடன்.ஒல்கி-நாணி. (அ)பருவதாரி-இந்திரன்.

வரியர்பாக மிசையுமாசை மனைவியே, யிடைவிடாது துதிசெய்
வார்த மிதயமேவு முதல்வியே,—யருவவாத ரறியொணாத வமல
ஞான சொருபியே, யறிவினூனும் விழிகளாலு மயில்வதாமி னமி
ழ்தமே,—மருவலார்முன் வெருளுறாத வலிமையீய வருகவே,
வளமைநீடு திருநெல்வேலி வளர்குமாரி வருகவே. (அ)

மண்பெணிதிய மென்றுசுழலும் வம்பின்முபல லருகவே,
வந்துதொழுமெ யன்பர்கவலை மங்கியிதய முருகவே,—சண்பை
முனிவன் வென்றகபவர் தஞ்சொல்வலிமை கருகவே, சந்தவரை
கொள் கும்பனனையர் சங்கமகிமை பெருகவே,—நண்பில்புதுமை
துன்றுமுடலை நம்புநிலைமை திருகவே, நஞ்சவினைஞ ருந்தொன்
மறைசொ னன்றின்மனது சொருகவே,—பண்புமருவு தொண்
டர்பலர்கொள் பண்டையமுது பருகவே, பைந்தண்மையினி னின்ற
முதல்வர் பங்கின்விமலை வருகவே. (கூ)

உலவையயிலு மணிகொள்பணிக ளுடையள்வருக வருகவே,
யுடலின்மருவு புழுதியழகொ டொழுகவருக வருகவே,—யிலவு
தளர முதிருமருண விதழிவருக வருகவே, யெழுதலரிய சுருதி
பரவு மிறைவிவருக வருகவே,—பலகில்பவமும் விரைவி லொழித
லருளவருக வருகவே, யடியர்கவிபை யிகலைமுனிபு மமலைவருக
வருகவே,—மலபமனைய விமபமுதவு மதலைவருக வருகவே, மறு
வில்கழையின் முதல்வர்தலைவி வருகவருக வருகவே. (௧௦)

## வாரானைப் பருவம்

முற்றிற்று.

(அ) அருவ-சுருங்கிப்போதலுடைய. அயில்வது-உண்பது. (கூ) அருக-குறைய. சண்பை - சீகாழி. கும்பன் - அகத்தியமுனிவர். நஞ்சவினைஞர்-நஞ்சுபோன்ற கொடுந்தொழில் செய்வோர். திருக - மாறுபட. (௧௦) உலவை - காற்று. இலவு-இலவம்பூ. அருணம் - சிவப்பு.

## ஏழாவது:

# அம்புலிப்பருவம்.*

முருகவிழு முண்டகச் செழுமலரை யொண்டிரு முகச்செவ்வி யாலொடுக்கி, முபனூறும் பலகலை நிறைந்தாசை யிருளினை முருக்கி மேனெறியினெய்திப்,—பெருகுதண் குவலயம் பூப்பநில வுற்றெமது பெம்மா னிடக்கணாகிப், பிறிதிணையில் புலவனை யளித்துமீ னினமிகப் பிறழுமலை மீதுவந்தோ,—ருருகெழு பகற்கடவுண் மறைதர விளங்கொளிபொ டுலவிபிசை வடிவமோங்கி, யுன்பெய ருறப்பெற் றுனக்கிணை யெனப்பலரு மோதுதலி னுவகைமிஞ்சி,—யருகில்வரு கென்றழைக் கின்றவிவள் பண்பறிந் தம்புலீ யாடவாவே, யாய்ந்ததமிழ் நெல்லைவளர் காந்திமதி வல்லியுட னம்புலீ யாடவாவே.

செல்வியைத் துணையெனக் கோடலாற் சிலபோது சிங்கத்தி லேறிவரலாற், சேயதாங் கந்தனை விரும்பலாற் பைந்தகைச் சினை மாலுடன் றோன்றலாற்,—கல்விமா னத்திவரு மாண்புமலி வுற்றொளிர் கலாநிதி யெனத்திகழ்வதாற், கருமையங் குறமானை வைத்தாள லாலன்பர் கனியமுத் தந்தருதலாற்,—பல்விதத் தஞ்சகோ ரக்கலி யொதுங்கப் பயக்குமின் னருள்வண்மையாற், பசியகதிர் விடுதலா னின்பண்பெ னம்மையொடு பகர்வதற் கிசைவாகுமா,—லல்விழைந் தயர்கருங் கூந்தற் பிராட்டியுட னம்புலீ யாடவாவே, யாய்ந்ததமிழ் நெல்லைவளர் காந்திமதி வல்லியுட னம்புலீ யாடவாவே.()

---

* அம்புலிப் பருவம் - சந்திரனை விளையாட அழைக்கும் பருவம். (க) ஆசை - திசை X இச்சை. குவலயம்பூப்ப - குவளைமலர X உலகமுண்டாக. நிலவுற்று - கிரணத்தைப் பொருந்தி X விளங்கி. இடக்கண் - இடதுகண் X இடப்பக்கம். புலவன் - புதன் X முருகக்கடவுள். ஒளி - வெண்ணிறம் X பசிய நிறம். உன்பெயர் - உன்னுடைய பெயராகிய காந்திமதி. (உ) சிங்கம் - சிங்கராசி X சிங்கவாகனம். சேயதாங்கந்தனை - சிவப்பாகிய ஆகாயத்தை (செவ்வானத்தை) X புத்திரனாகிய குமாரக்கடவுளை. பைந்தகைச் சினைமால்-பசிய அழகுடைய சூல்கொண்ட மேகம் X அம்மேகம் போன்ற விஷ்ணு. கல்விமானத்திவரும் - கல்வியின் பெருமையை விரும்பி வரும் X கல்லாற் செய்த விமானத்துளெழுந்தருளி யிருக்கும். கருமையங் குறமானை - கருநிறம் அங்கு பொருந்த மானை X கருநிறமுடைய அழகிய குறப்பெண்ணை. அஞ்சகோரக்கலி - அழகிய சகோரப் பறவையின் வறுமை X பயப்படத்தக்க அகோரம் (மிகக்கொடுமை) ஆகிய தரித்திரம்.

செம்மையுறு கணவர்தங் கனல்விழிச் சிசுவுணத் திரண்முலைப் பாலருத்துஞ், செவிலியரி லாரலந் தேவியரை யேவலிற் சித்தத்து நட்புவைத்தோ,—கொம்மைமுலை மேனையினி துதவுமை நாகனைக் கொதிவார் திரைக்கடலெனக், கூறுநின் னன்னைமிக் காதரிக்கும் பெருங் கொள்கையை மனங்குறித்தோ,—மும்மையுல கும்புகழ முதிர்நலம் புனைபாண்டி முதன்மைபெற வரசுபுரிவான், மோலி யணி யுந்தினத் துன்மரபின் மதலையா முறையுணர்ந் தோவழைத் தா,—ளம்மையின் சும்மையை யொளித்தருளு மம்மையுட னம்புலீ யாடவாவே, யாய்ந்ததமிழ் நெல்லைவளர் காந்திமதி வல்லியுட னம்புலீ யாடவாவே. (௩)

நீயுமொரு சுடரானவ யெனினுமிவ ளெங்கெங்கு நிலவருட் சுடராயினா, ணிறைகலைகள் பதினா றுனக்கறிஞர் தொன்னூ னிகழ்த்துகலை யெட்டெட்டுமிக்,—கேயுமிவ ளுக்குநீ மாதத்தி லோரோர்கா லிடபத்தி லேறிவருவா, யெந்தைவேய் முத்தரொடு மெப்போது மிடபத்தி லேறியிவள் பவனிவருவா,—டேயும்வெண் மேனிகொடு தானவர்க் கஞ்சுறுவை செல்வியிவ டன்கரத்துச், சிறுவனு மவர்க்கெம னெனக்குலவு வானுயிர்த் திரண்முதற் பகரனைத்து,—மாயுமவை யல்லாது நிற்குமிவ ளுளமகிழ வம்புலீ யாடவாவே யாய்ந்ததமிழ் நெல்லைவளர் காந்திமதி வல்லியுட னம்புலீ யாட, வாவே. (௪)

செங்கதிர்மு னின்னொளி மழுங்குமிவ ளவனுடற் றிகழொளி மழுங்கல் செய்வாள், சேர்ந்துபல கோளுனைச் சூழுமொரு கோளு மிவள் சீரடியர் முன்னுமணுகா,—வங்கமுறழ் வெள்ளிய வனப் பனீ யிவளெண்ணின் மாற்றுயர் பசும்பொ னனையாண், மாதத்தி லொருநாட் சுகம்பெறுவை யிவளென்றும் வளர்சுகா னந்த வடிவாள்,—சங்கர னுனைத்தாளி னுதைத் தானிவள் சரணபணிந்

(௩) செவிலியரில் - செவிலித் தாய்மார்போல. ஆரலந்தேவியர் - கார்த்திகை முதலிய ஆறுமனைவிகள். மைநாகன் - ஒருமலை. உன்மரபு - சந்திர குலம். அம்மை - வருபிறப்பு. (௪) இடபம் - இடபராசி. (௫) கோள் - கிரகம் + குற்றம். வங்கம் - ஈயம். ஒருநாட்சுகம் - சூரியனொடு சேர்ந்திருக்கு மின்பம்.

தேவல்புரிவான், றனிமண் டலத்தனீ யிவளுல கனைத்தையுந் தந்த சிறு பண்டியுடையா,—ளங்கா நிமிர்த்துனை யழைப்பதரி தல்லவோ வம்புலீ யாடவாவே, யாய்ந்ததமிழ் நெல்லைவளர் காந்திமதி வல்லி யுட னம்புலீ யாடவாவே. (ரு)

சற்றுநீ யொருதனுவில் வாழ்குவை யலாதுயிர்த் தனுவெலாம் வாழவறியாய், தனியாய கடகந் தரிப்பா யலாதிரு தகைக்கடக மங் கைதரியாய்,—மற்றுநீ யொருமானு ளாயலா திவள்போலும் வதன த்தி லிருமானிலாய், மன்னுமொரு வாயாம்ப லுக்கலது மிக்கநால் வாயாம்பன் மகிழநடவாய்,—பற்றுகும் பமதொன்றி னிற்பா யலா தன்பர் பலகும்ப மூடுநில்லாய், பரிவினின் குறைவினைக் கருதா தழைக்கின்ற பண்புன ததிட்டமன்றோ,—வற்றுமிழை யொத்திலகு சிற்றிடை மடப்பிடியொ டம்புலீ யாடவாவே, யாய்ந்ததமிழ் நெல் லைவளர் காந்திமதி வல்லியுட னம்புலீ யாடவாவே. (சு)

## வேறு.

பிடித்துத் தினமுங் கடற்படிந்தும் பெருவா னுலக நதிகுடைந் தும், பெற்ற பயனியா துரைகுரவற் பிழைத்த பழியும் பிறங்கெ யிற்றாற்,—கடித்துக் கொடும்பாம் புமிழ்துயருங் கறையுங் கயரோ கமுந்தனிப்பொற், கமலத் தடந்தோய்ந் தம்மைமஞ்சட் காப்புட் பருகிற் கழிந்திடுமே,—படித்துப் படித்துப் புகன்று மெண்ணிப் பாரா யொருசற் றேனுமதி, படையாவுனக்கு மதியெனும்பேர் பகர்ந்த தெவரோ பலநாளு,—மடித்துப் பாலும் புகட்டுவரோ வாட வாரா யம்புலியே, யருள்வேய் வனத்தெம் மரசியுட னடவாரா யம் புலியே. (எ)

சொற்ற லரிய பழம்பாடற் சுருதிப் பொருளோர்ந் துளதுணி வாற், சுவேத முனிகா லனைக்கடந்து சுகம்பெற் றிடலித் தல மலவோ,—கொற்ற மிகுமாற் றங்கரையிற் கொடிதா மிகலோ ருட னுறல்போய்க், கோதை யிவள்பூங் கழற்றுணையிற் குலவு மினத்திற் கூடிடலாங்,—கற்ற தமிழ்நா வலரிசைத்தேன் களித்துண் டிடலா

(சு) தனு - தனுசுராசி + உடல். கடகம் - கடகராசி × கங்கணம். இரு மான் - இரண்டு மான் போன்ற கண். நால்வாயாம்பல் - தொங்கிய வாயை யுடைய யானையாகிய விநாயகர். கும்பம் - கும்பராசி × கூட்டம். (எ) பிடி த்து - பற்றி. குரவன் - குரு. கறை - களங்கம். கயரோகம் - தேய்கின்ற பிணி;

மறம்வளர்த்த, கையா லழைப்ப தறிந்திலையோ கரும்பு தின்னக் கூலியுண்டோ,—வற்ற மிதுபோல் வாய்ப்பரிதா லாட வாரா யம்புலியே, யருள்வேய் வனத்தெம் மரசியுட னாடவாரா யம்புலியே.()

## வேறு.

தார்மலி தோள்பெறு தானவ ராருயிர் சாடோர் வெம்படையா, டாளுதை யார்தலி னீசடை வாயுறு சார்போர் கின்றிலையோ,— கூர்மற வாள்கொளுந் மாதுலன் மாமுடி கூறு மன்றொருநாட், கூனுட றேய்தர லான்மெலி வானது கூறு ருண்டுகொலோ,—வேர் மலி வேலமலி வேயினி தோரிற கியா யென்பவர்போ, லேசறு தாயிவ ணீவர நாடுத லேலேதா நின்றவளே,—வார்மரு பூண்முலை யாரிசையும் வாரினி வாவா வம்புலியே, வானுயர் வேய்வனம் வாழ்வடி வாளிடம் வாவா வம்புலியே. (கூ)

இலகுரி மையினிவண் மகிழ்தர விதுவரை யிங்கே வந்திலையா, லினியொரு சிறிதுளம் வெகுளுமுன் முதன்மக வென்றே றாங் கரிதா,—னுலவுறு முனையொரு கவளம தெனவெளி துண்டா லென் செய்குவா, யுதயனெ டிருகர மலரிடை புதைபட வுண்டோ வின்று கொலோ,—வலகறு புகழ்பெறு சிறுமக னயிலொடி லந்தோ வெங்க ளடைவா, யகல்வெளி தனிலெவ னெவணுற நினையினு மங்கா ரின்றி லனோ,— மலர்தலை யுலகினை யருண்மலை மகளெதிர் வந்தா டம்புலியே, வளமலி கழைவன வடிவுடை யவளிடம் வந்தா டம்புலியே.

## அம்புலிப் பருவம்

முற்றிற்று.

---

(அ) அற்றம் - சமயம். (கூ) உதை - ஊழ் காலத்தில்மிதிக்கு மிதி. மாதுலன் - மாமனாகிய தக்கன். (கூ) உதயன் - சூரியன். புதைபடல் - சிவபிரான் கண்ணாயிருக்கின்ற இடத்து அம்மை கையால் மூடப்பெறுதல். எவன் - எவ்விதம். எவண் - எவ்விடம்.

எட்டாவது:

# *அம்மானைப்பருவம்

---

இரசித விலங்கலொத் துலவியம ராபதிக் கிறைமகிழ வரும்வா ரணை, மிகல்கதுவு முற்கைக ளெனப்பயந் தோடவெளி திம்பர்நின் றும்பர்தாவிப்,—பிரசமல ரைந்தருவில் விளையாடு மந்திபல பில்கு தேங் கனிகளெனவுட், பெருமிதத் திற்கருங் கைநீட்டி முயலமெய்ப் பிரணவம் பொலியும்வேதச்,—சிரசினி னடித்திடுநின் முகமதியை வேட்டெழுஞ் சேதாம்பன் மாதர்சுற்றித், திரிவது கடுப்பநின் செங் கையம் பங்கையத் தேவியரை மேவிமீளு,—மரசிளம் பரிதிக ளெனப் பதும ராகமணி யம்மானை யாடியருளே, யழகார்ந்த திருநெல்லை மகிழ்காந்தி மதிவல்லி யம்மானை யாடியருளே. (க)

சோதிமிகு மகளங்க நின்முக மதிப்பாங்கர் சூழ்ந்திடை யரு திமைக்குந், துய்யவெண் டாரகைக் கணமென வாடகச் சூடகச் செங்கைவனசப்,—போதினின் றிளநிலா வெள்ளிமணி துள்ளிவீழ் பொற்பெனவ மலர்தன்னொடும், போற்றுமொரு தாய்வயி னுதித் துவாழ் கயிரவப் பூவைய ரெனுந்தங்கையர்க்,—கோதினிய கண வன்வரு கைக்குள் மகிழ்ந்தெதிர்கொ டுற்றுய்ப சரித்தழைத்தற், குய்ப்பக் கதித்தினி தெழும்புதம் பிள்ளைவெள் ளோதிமத் திரள் தெனநீ,—டாதிசத் துவசார மனையவெண் ணித்திலத் தம்மானை யாடியருளே, யழகார்ந்த திருநெல்லை மகிழ்காந்தி மதிவல்லி யம் மானை யாடியருளே. (உ)

மண்டுமலர் மணமல தியற்கைமண மலிதருநின் வார்குழற் கிணையாமெனும், வல்லிரு ளினைப்பாதி மதிநுதற் கணைதொட்டு வளைபுருவ விற்சமரினீ,—கண்டதுண் டம்பலபடுத்தியு மவற்றினைக்

---

* அம்மானைப் பருவம் - அம்மானை விளையாடும் பருவம். (க) இரசிதம் - வெள்ளி. கதுவு - பற்றுகின்ற. உற்கை - கொள்ளிக்கட்டை. சேதாம்பல் - செங்குமுதம். (உ) தாரகைக்கணம் - நட்சத்திரக்கூட்டம். ஆடகச் சூடகம் - பொன்வளையல். கயிரவம்-ஆம்பல். கணவன் - நாயகனாகிய சந்திரன். உய்ப்ப - செலுத்த. கதி[illegible]மேலோங்கி. ஓதிமம் - அன்னம். சத்துவம் - சத்துவகுணம். ([illegible]மதி - அர்த்த சந்திரன்போன்ற.

கந்துகத் தாடலெய்ப்பக், காமனை யெரித்தருமுன தாசைமேற் கொண்டுவளர் கழைவனச் சிவயோகிபால்,—வெண்டாள முறுவலிலொடு மம்மைநீ தூதுக்கு விடுகுயில்க ளென்னநின் கை, மென்கமல மலர்மீது பல்காற் பறந்துநனி வீழுமறு கானிகர்ப்ப,— வண்டமு மகண்டமு நிறைந்தாடு வாய்சீல வம்மானை யாடியருளே, யழகார்ந்த திருநெல்லை மகிழ்காந்தி மதிவல்லி யம்மானை யாடியருளே. (௩)

வெஞ்சூட் டடற்பரிதி யோராழி யந்தேர் விசித்தவாம் புரவியேழு, மேலைநிலைமீதிற் றழைந்தட ரிளம்புலெனும் விழைவொடுத நாவளைக்கச்,—செஞ்சூட்டு வாரணப் புட்கொடி பிடித்தலவு செவ்வேளு மைவார்கடற், செயமுரச வேளுந்த மூர்திகளை நேடித் திகைத்துத் திரிந்தலுத்துப்,—பஞ்சூட்டு மெல்லடிப் பாவையரி னாடலைப் பழகுமொழி வழுவுறுமற், பகர்தலைக் கொடுகண்டு கொள்ளவெத் திசையும் பசும்பிரபை வீசமேனி,—யஞ்சூட்டு மணமலர்க் கோதைநீ மரகதத் தம்மானை யாடியருளே, யழகார்ந்த திருநெல்லை மகிழ்காந்தி மதிவல்லி யம்மானை யாடியருளே. (௪)

இருணகிக் குங்கதிர்த் தரளவம் மனைபொன் னிழைத்தவம் மனைசெந்நிறத், திலகுமின மணிகுயிற் றம்மனையொ ணீலத் தியங்குமம் மனைமரகதத்,—தருணமணி யம்மனையிவ் வைந்துந் தொகுத்து வெண் டாமரைப் பனுவலாட்டி, தாக்கணங் கடுதொழி லுருத்திரி மயேச்சுவரி தனிமனோன் மணியாமென,—நிருணயிக் கும்பெயரினைவகைச் சத்திகளு நின்பா லுதித்தொடுங்கா, நிற்பதென வாரணநிகழ்த்தமு துரைநிலை நிறுத்திடக் காட்டுநெறிபோ,—லருணவிகசிதமலர்ச் செங்கைமலை மங்கைநீ யம்மானை யாடியருளே,யழகார்ந்த திருநெல்லை மகிழ்காந்தி மதிவல்லி யம்மானை யாடியருளே. (௫)

---

கந்துகத்தாடல் - பந்துவிளையாடுதல். எய்ப்ப - ஒப்ப. அறுகால் - வண்டு. (௪) விசித்த - கட்டிய. செஞ்சூட்டு - சிவந்த உச்சிப்பூ. ஊர்திகள் - மயில், கிளி. நேடி-தேடி. பாவையரில் - பெண்கள்போல. கொடு - (உட்)கொண்டு, உள்ளே நினைத்து. (௫) நசிக்கும் - கெடுக்கும். குயிற்று - பதித்த. தருணம் - புதுமை. தாக்கணங்கு - இலக்குமி. நிருணயிக்கும் - நிச்சயிக்கும். அருணம் - சிவப்பு.

## வேறு.

பாடற் கலைவா ணியுந்திருவும் பலகுற் றேவல் புரிந்திடப்பின், படர்குஞ் சினநேர் மெய்யடியார் பண்பி னளவிற் பயனனந்தம்,— வீடற் பொடுதந் தருள்கருணை மீனத் தடங்க ணிருமருங்கும், வெங்கா ளிமநச் சிருட்படல மிடையுந் தனிக்கந் தரப்பெருமா,—னூடற் கலகந் தனில்விலைநா னுனக்கென் றெழுதி யொப்பமும்வைத், துதவுங் கிரய சாதனப்பொன் னோலைக் குழைதொட் டலைத்தாட்ட,— வாடற் கொடிநெல் வேலியுமை யாடியருளா யம்மானை, யறமெண் ணான்கும் வளர்த்தசெல்வி யாடி யருளா யம்மானை. (௬)

கொங்கார் குவளை விழியாடக் கொடிநேர் செவிப்பொற் குழையாடக், குளிர்முத் தார முலையிளநீர் குலுங்கி யாடக் குனிபுருவப்,— பைங்கார் முகங்க ளிணைந்தாடப் பாதி மதிவா ணுதல்வரம்பிற், பனிவேர் வாடக் கனிவாயிற் படிக்குந் தமிழ்நின் றூடெழுநிற்,— சங்கார் தடங்கைத் துணையாடத் தழைசை வலப்பூங் குழல்பிடரி, தன்னிற் சரிந்து சரிந்தாடத் தனிவேய் வனத்துத் தலைவர்மகிழ்,— பூங்கார் மேனி யசைந்தாட வாடி யருளா யம்மானை, யறமெண் ணான்கும் வளர்த்தசெல்வி யாடி யருளா யம்மானை. (௭)

மணிதேர் சாலிப் புலவரிசை வளையுந் தழையும் புலவரிசை, மறையோ ரகத்தின் முத்தீயும் வளருங் கழைகண் முத்தீயும்,— பணிநேர் சினத்து மாதரங்கம் பயிலும் பொய்கை மாதரங்கம், படர்வான் மின்னைக் கொடிதிகழும் பலவா மணிப்பொற் கொடிதிகழும்,— கணிநீர் கடந்து வாசிக்குங் காவிற் கிளிநூல் வாசிக்கும், கைமா வினங்கள் கனமடுக்குங் கவின்கோ புரங்க கனமடுக்கு,—மணிகூர் நெல்லைப் பதிக்கரசி யாடி யருளா யம்மானை, யறமெண் ணான்கும் வளர்த்த செல்வி யாடி யருளா யம்மானை. (௮)

(௬) காளிமம் - கறுப்பு. நச்சு - நஞ்சு. (௭) கொங்கு - வாசனை. சைவலம்-பாசிக்கொத்து. (௮) மணி-முத்து. புலவரிசை-நன்செய் ஒழுங்கு. புலவரிசை - வித்துவான்கள் பாட்டு. முத்தீ - காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவநீயம் என்னு மூன்றுதீ. சினத்து - கோபத்தையுடைய. மாதரங்கம் - பெரிய அலை. மாதரங்கம் - பெண்கள் சரீரம். கொடிதிகழும் - கொடியதாக இகழும். கணி - மருதம். வாசிக்கும் - மணக்கும். கனம் - மேகத்தை. மடுக்கும் - கலக்கும். ககனம் - ஆகாயம்-

## வேறு.

சொற்பொரு ளாய்மணி யிற்சுட ராயுயிர் தேர்றுறு மம்மே
மெய், துப்புர வாதிய நற்குண மேவிய தூயவர் பண்ணீடு,—கற்பக
நேரரு மைப்புக ழாகரி காதகர் நண்ணுத, கட்கடை தோயும ழைக்
கரு ணைநிதி காதலி னெந்நாளும்,—விற்பன மீறிவ ழுத்துகு லேசுர
மீனவ னென்னுரை,மிக்குறு தானைகொ டெர்க்கையி னுலடும் வீறொடு
விண்ணுற,—மற்புத வேணுவ னத்தினர் சேர்குபி லாடுக வம்மானை,
யற்றமெ லாமறி வுற்றருள் கூர்மயி லாடுக வம்மானை. (௯)

செய்யுத் தரபுலம் வைகுற் றெருமுறை தென்முக மாநடைகூர்,
செல்வக் கவுடனுண் மெய்யற் புறும்வகை திண்மையி னுடிடுநாள்,-
சையத் துயரிய புல்வைப் பினைமுது சன்னிதி மால்விடையோர்,
சைகைக் குறியுணர் வெய்தித் தினவரு டன்மையு மாலயமார்,—,
மையப் பிதழிபில் வில்வத் தழைதரு வன்னியின் மாவடிநீண்,
மல்லற் றிகிரியி லல்லித் திருமலர் மன்னுற வீதலுநே,—ரையர்க்கள
வறு மையற் றருபிடி யம்மனை யாடுகவே, யல்லைப் பொருகுழ னெல்
லைப் பதியுமை யும்மனை யாடுகவே. (௧௦)

## அம்மானைப் பருவம்

### முற்றிற்று.

---

(௯) துப்புரவு - ஒழுங்கு. பண் - பாட்டு. ஆகரி - இருப்பிடமாயுள்ள வளே. காதகர் - பாதகர். தானை - சேனை. அற்றம் - சோர்வு. (௧௦) கவுடன் - கவுடதேசத்தரசன். சையத்து - மலைபோலும். சைகை - சைக்கினை. மை - மேகம். தருவன்னியில் - வன்னி விருக்ஷத்தில். திகிரி - மூங்கில். அல்லி - அகவிதழ். திருமலர் - தாமரை. நேர் - செய்த.

ஒன்பதாவது:

# * நீராடற் பருவம்.

வான்மருவு மலையமலை நின்றிரு முலைப்பான் மடுத்தலாற் கூட லாளு, மன்னங்க வளைவைத் திருத்தலா லமணரா வருபவர்க் கூறு செயலான்,—மென்மருவு நெறியன்ப ராடவே தக்கதவம் விளைவிற் பொருத்தும் வலியான், மிளிர்முத் தலைப்பாணி யம்பரஞ் சார்தலால் வியனார் மதிப்பொலிவினாற்,—றேன்மருவு கட்பூவை யென்பினில் வருத்தலாற் றிகழ்தோணி யூர்தரலினாற், செம்பாக மன்னுசீ ரம் பதிக மோதலாற் றிருஞான சம்பந்தரைப்,—போன்மருவு கருணைப் புகழ்ச்சிந்து பூந்துறைப் பொருநைநீ ராடியருளே, பூசுரர் வழுத்து முயர் கீசக வனத்திறைவி பொருநைநீ ராடியருளே. (க)

மின்பயில் சருங்கொண்டன் மரகதச் செய்குன்றின் மிளி ரிந்து காந்தமணிமா, மேடைப் பரப்பிலுறல் சுதரிசன வாட்படை விநோதன்வட பத்திரத்தின்,—மன்பயோ ததியிற் குலாவல்காட் டணிநெல்லை வடிவேயொண் முத்திருக்கும், வால்வளைகொள் செவி யுமற் றார்பணி மிகுத்தோங்கி மருணீக்கி யென்றுநிகழ்பே,—ரின்ப

---

* நீராடற் பருவம் - நீர் விளையாடற் பருவம்.

(க) மலையமலை நின்றிருமுலைப்பால் மடுத்தலால் - இமயமலையிற்பிறந்த நின்மலசொரூபியே உன்னுடைய திருமுலைப்பால் உண்ணலால் X பொதிகை மலையினின்று பெரிய முல்லைநிலப்பக்கங் கலந்துவருதலால். கூடலாளு மன்னங்க வளைவைத்திருத்தலால் - மதுரையை யாளும் பாண்டியராசனுடைய சரீரக்கோணலை நிமிர்த்தலால் X கூடுகின்ற இருளையாளும் சந்திரனுடைய சரீரம்போலும் (வெள்ளிய) சங்கங்களைவைத் திருத்தலால். அமணரா - சமணராக X நிருவாணிகளாக. ஊறு - இடையூறு. அன்பராடவேதக்கதவம்-தொண்டர் கொண்டாட (திருமறைக் காட்டில்) வேதங்களா லடைக்கப்பட்ட கதவை X அன்பர் ஸ்நானஞ்செய்யவே தகுந்த தவத்தை. முத்தலைப்பாணியம்பரம் - சூலபாணியாகிய அழகிய பரம்பொருளை X முத்துக்களையுடைய அலைநீர் சமுத்திரத்தை. மதி - அறிவு X மதித்தல். தேன் - வண்டு X தேன். கட்பூவை - கண்ணையுடைய பெண் + தேனையுடைய மலரை. என்பு - எலும்பு. தோணியூர்தரலினால் - சீகாழி நகரங்கொடுத்தலால் + தோணியூர்ந்து செல்லுதலால் செம்பாகமன்னு - செவ்விய பக்குவ நிலைபெற்ற + செம்பு உண்டாக நிலைபெற்ற. அம்பதிகம் - அழகிய தேவாரப் பதிகம் X நீர்மிகுதி. கீசகம் - மூங்கில். (உ) இந்து காந்தமணி - சந்திரகாந்தக்கல். சுதரிசனம்-சக்கரம். வடபத்திரம்-ஆலிலை. பயோததி - பாற்கடல். செவி - காது X அழகு. பணி - தொண்டு. X பாம்பு.

முற் கொண்டொரு பெருங்கன் மிதப்பச்செய் திருதோணி வந்தில கேவ், யெரிசையு முழவார வாரமிட் டெவாரா லு மிகழ்வரிய தாம் பிரபலம்,—பொன்புடை யொதுக்குதலி னெய்திவா கீசர்நிகர் பொரு னைநீ ராடியருளே, பூசுரர் வழுத்துமுயர் கீசக வனத்திறைவி பொருனைநீ ராடியருளே. (உ)

காதலர் கறுங்குவளை காவில்விழ வடர்நெடுங் கட்கருங் குவளை சேப்பக், காமர்நா சியிலணியு முத்தஞ் சிவப்பக் கதிர்த்ததுவ ரிதழ் விளர்ப்பத்,—தாதல ரலங்கல்புனன் மங்கைக்கு மெய்திடத் தணவி யின் பத்தமிழ்தருஞ், சடையனு ரருளமறை செப்புவரு ணத்துய ர்வு தாங்குபுபல் கலைதோய்வுறப்,—பாதலமெ லாமோதி வாங்குதி ரை நீள்கயம் பற்றிமின் னரவமணிவான், படர்சந்தின் வலியபெரு மூடலைத் தீர்த்தருட் பரவையொடு சங்கமித்துப்,—பூதலம் புகழ்தரந மாரூர ரிற்குலவு பொருனைநீ ராடியருளே, பூசுரர் வழுத்துமுயர் கீசக வனத்திறைவி பொருனைநீ ராடியருளே. (ங)

மிகுந்தளக பாரச் சொருக்கவிழ்ந் தெங்கணும் விரிந்திடவி னறலொழுக்க,மெத்தப் பயப்பட் டமிழ்ந்திடக் கெண்டைமை விழிக் கஞ்சி யுகளவளையு,—முகுந்தரள ராசியு மிடற்றினெ டெயிற்றிற் கொ வாமைதேர்ந் தலறநெரிய, வொண்சுணங் கவிர்முலைக் கெதிர் புற் புதங்கண்முழு துடையவுந் திக்கொப்பெனத்,—தகுந்தகை

முற்கொண்டு - முதலாவது கொண்டு × நேரேகொண்டு. இருதோணிவந்து - இரண்டு தோளிலுயர்ந்து × பெரிய தோணி வந்து. உழவார வாரமிட்டு - உழவாரமென்னும் படையை மலையாக அணிந்து × உழவுகள் பொருந்த நீரைச் செலுத்தி. பொன்புடை - (உழவாரப் பணிவிடைசெய்த இடத்தி லெழுந்த) பொன்னை மதிற் பக்கத்தில் × பொன்னை (இரண்டுகரைப்) பக்கத்தில். வாகீசர் - திருநாவுக்கரசு நாயனர். (ங) சடையனர் - சுந்தரமூர்த்திநாயனர் பிதா. வருணத்துயர்வு - ஆதிசைவகுலத்தி னுயர்ச்சி. பல்கலை - பல பதிகமாகிய கலை × விரிந்த கரை. பாதலம் - பரந்த சிவஸ்தலம் × பாதாளவுலகம். வாங்குதிரை - தாவுகின்ற குதிரை × வளைந்த அலை. கயம் - யானை × குளம். அரவமணிவான்படர் சந்தின்- பாம்பை யணிவானுகிய சிவபிரான் செல்லுகின்ற தூதால் × ஓசையைப்பொருந்தி ஆகாயமளாவிச் செல்லுகின்ற சந்தனமரத்தின். பெருமூடலைத்தீர்த்து- பெரிய பிணக்கை நீக்கி + பெரிய அடியையலைத்து இழுத்து. பரவை - பரவைநாச்சியார் × கடல். சங்கமித்து - கூடி. ஆரூரரில் - சுந்தரமூர்த்தி நாயனரைப்போல். (ச) அறல் - கருமணல். உகள - துள்ள. வளை - சங்கு. எயிற்றிற்கு-பற்களுக்கு. புற்புதம் - குமிழி. உந்தி - கொப்பூழ்.

பெறப்பல தாஞ்சுழித் துச்சுழி தபங்கமென் புற்வடிக்குத், தாழ்வுறல் குளித்துறுப் பைங்ணைதயு மொடுக்கிமெய்த் தவர்களிற் கமடம்வன மே,—புகுந்தவ ணுறப்புரியு முருவப் பசுந்தோகை பொருநைநீ ராடியருளே, பூசுரர் வழுத்துமுயர் சீசைல வனத்திறைவி பொருநைநீ ராடியருளே. (௪)

மதியத் திலங்குமுக விகுளையர்சி னருண்மேனி வற்றவாரி ராணிபொன்மை, வளரரி சனச்சுண்ண மாதிய நறுங்கலவை வட்டுமுன் னேந்தவாரனோர்,—துதியற் புதம்பெருக மலர்மாரி தூஉய்த்தேவ துந்துபி முழக்கியாடச், சூர்மகளிர் குரவையிட் டபல்சூழ நின்றனை துவட்டா செயுந்தீமகத்,—துதியற் பொருந்தருவன் வெருளக் குடங்கையி னுளுந்தளவை யாக்கிமுந்நீ, ருண்ட தமிழ் முனிநீர்மை கண்டுசா நதிநீரை புண்ணவென விண்ணோர்கண் ணும்,—பொதியத் தடங்குடுமி யிடறிவரு தெண்டிரைப் பொருநைநீ ராடியருளே, பூசுரர் வழுத்துமுயர் சீசைலவனத்திறைவி பொருநைநீ ராடியருளே. (௫)

## வேறு.

அன்று தரிக்கும் பொதுவர்மனை யளைபா றிருடி யணைகயிற்று, லடியுண் டுரலோ டழுதுதவழ்ந் தடல்கூர் மருத மிரண்டொடித் துக்,—கன்றால் விளவின் கனியுகுத்துக் காலாற் சகடந் தனைத்தகர்த் துக், கடவா ரணப்பூண் மருப்பொசித்துக் ககமா வருவான் வாய்கிழித்துக்,—கொன்று டலகை யுயிர்குடித்துக் குலமால் வரைப்பொற் குடைபிடித்துக், கொடுங்கோற் கஞ்சன் றலைகவர்ந்து குந்தி புதல்வர் முதல்வோரைப்,—பொன்று தருண்மா லுடன்பிறந்தாய் பொருநைப் புதுநீ ராடுகவே, பொன்னார் நெல்லை வடிவுடையாள் பொருநைப் புதுநீ ராடுகவே. (௬)

---

தவர்களில் - முனிவரைப்போல். கமடம் - ஆமை. (௫) இகுளையர் - தோழியர். அரிசனச் சுண்ணம் - மஞ்சட்பொடி. நின்றனை-நின்றாய். துவட்டா - ஓரசுரன். அல்-இருளை. தருவன்-விருத்திராசுரன். (௬) பொதுவர்-இடையர். ஓசித்து-ஒடித்து. ககம் - பறவை. அலகை - பேய். பொன் - இலக்குமி.

கவன மிசையு மகங்கரத்தாற் கதிர்முத் தலையார் காற்றலையார், காணு வடிபோ னடைந்தலையிற் கருதி முயல கனைச்சேர்த்திப்,—பவன மிசையும் பாம்பெனும்பு படர்தோ னூமத் தெருக்கொருவெண், பறவை யிறகோ டணிந்தெவரும் பன்னாட் பித்த னெனப்பேசத்,—கவன மிசையும் புறங்காட்டுச் சாம்ப ராடி மதவேளைத், தகித்தோ னுஞ்சொற் படிமுழுதுந் தானே யாட வாரேறு,—புவன மிசையுங் கொண்டாடப் பொருநைப் புதுநீ ராடுகவே, பொன்னார் நெல்லை வடிவுடையாள் பொருநைப் புதுநீ ராடுகவே. (எ)

விரியு முபய பாரிசமு மேவி யரம்பை யிருந்தாட, வேறு நாணன் மாதர்மலர் வெண்சா மரைவீ சிடவிண்முதற்,—சொரியு பணியும் பலபணியுந் துணைப்பொற் கபலா தியுங்கனியின், றொகையு நிறமாயிரந்தருமென் றுகிலு மகிலுந் தொனித்தருவி,—சரியு மலையத் தடஞ்சாரற் சந்த மிருக மதமுமரி, சனமும் விரைத்தேங் தண்மலருந் தரங்கக் கரங்கொண் டினிதுபணி,—புரியு மகளி ரெனப்பரவும் பொருநைப் புதுநீ ராடுகவே, பொன்னார் நெல்லை வடிவுடையாள் பொருநைப் புதுநீ ராடுகவே. (அ)

## வேறு.

சுரர்கட் போடவர் புணர்பொற் பாவையர் சுவணப் பதியாள்கோ, சுகமொப் பாமொழி பயில்கற் பார்சசி சுருதித் திறல்வேதா,—வுரகப் பாயினன் முளரிப் பூவைய ருவகைக் கடலூடே, யொருமித் தாடிட வவனிக் காகுல மொழியக் களிகூர்தேன்,—முரல்கட் டாமரை மருமத் தார்நெறி முதிர்முத் தமிழ்மேன்மேன், முதன்மைச் சீர்பெற வெனமுற் போயின முறுவற் படையாலே,—புரமட் டார்மனை யவண்மிக் காடுக பொருநைப் புதுநீரே, புயலிற் றோய்வரை வனமுற் றாடுக பொருநைப் புதுநீரே. (கூ)

---

(எ) கவனம் - கருத்தில். முத்தலையார் - விஷ்ணு. முயலகன் - ஓரசுரன். பவனம் - காற்று. மிசையும் - உண்ணும். வெண்பறவை - கொக்கு. தவனம் - இச்சை. புறங்காடு - சுடுகாடு. (அ) அரம்பை - வாழை × தெய்வப்பெண். நாணன்மாதர் - நாணற்செடி அழகிய + நாணுதலையுடைய பெண்கள். விண் - மேகம். அகில் - அகிற்கட்டைச் சந்தனம். மிருகமதம்.கஸ்தூரி.- (கூ) சுவணம் - பொன். கோ - இந்திரன். சசி - இந்திராணி. தேன்முரல் - வண்டுகள் முழங்கும். மருமத்தார் - மார்பையுடைய பிரமனார்.

தோணிமுற் றியசட் சமயத் தவர்சொற் றுநிசா ரோர்பொருளோ, சுகதுக், கமிலத் துவிதத் துவிதத் துணிவே யோகியர்தர,—மினிதிற் றரிசித் திடவிற் புருவத் திடைவாழ் பேரொளியே, யிசையக் கவிசொற் றடிமைப் படமிக் கெணையாள் பார்வதியே,—கனிவிற் பெருகிக் கமழ்மெய்க் கருணைக் கடல்சூ ழாரமுதே,கனமுற் றருமைச் சசிதொட் டவிர்கட் கணமார் கோவெனநீள்,—புனிதக் கழையுற் பவர்பத் தினிபொற் புதுநீ ராடுகவே, பொதியக் கிரிபெற் றருணற் பொருநைப் புதுநீ ராடுகவே. (௧௦)

நீராடற் பருவம்

முற்றிற்று.

---

பத்தாவது:

## * ஊசற் பருவம்.

---

நிகரில்செம் பவளக் கொழுங்கா ணிறுத்திமிக நீடுமம் பரவிலாச, நேர்கில மெனத்தளரும் வண்ணங் கறுத்தமணி நீலவிட் டஞ்சமைத்துப்,—பகரிள நிலாத்தரள வடமிட் டசைந்திலகு பதுமராகப்பலகைமேற், பன்னுகலை வயிரமொடு செல்வவயி டூரியம் பாங்கரிற் பரவி யொளிரச்,—சிகரிமிசை தவழுமுகி லுறழ்புட்ப ராகஞ்சிறந்துள விதான நிழலிற், றேசுமலி முகமைந்து குலவுகோ மேதகச் செங்கேழ் மணிக்கொர் துணையாய்ப்,—புகரின்மணி மரகத மிருந்தாட லென்னநீ பொன்னூச லாடியருளே,புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடி யருளே. (௧)

---

(௧௦) அத்துவிதம்-இரண்டற்ற ஒன்று துவிதம் - இரண்டு. புருவத்திடை - இலாடத்தானம். கனம் - மேகவாகனம் ✕ மேன்மை. சசி - இந்திராணி × சந்திரன். கட்கணம் - கண்ணின் கூட்டம் + கள்ளுக்கூட்டம். கோ - இந்திரன். கழையுற்றவர் - மூங்கிலிற் றோன்றிய சிவபிரான்.

* ஊசற்பருவம் - ஊசலிலேறி யசைத்து விளையாடும் பருவம். (௧) நேர்கிலம் - சமானமாகமாட்டோம். விதானம் - மேற்கட்டி. புகர் - குற்றம். செங்கேழ் மணி - சிவந்த நிறமுடைய மணியாகிய சிவபெருமான்.

தேந்துணர்ச் சிகழிகைத் தாழ்சடைக் குச்சணி சிறந்துமுச்
சுடரிலாடச், சீரியநொ யிற்றோள்க ளாடவொரு கவுணியச் சேய்
பருகு திருவருட்பா,—லேந்துபொற் கலசங்க ளாடத் துவண்ட
இற் றிடையாட வடியாரையீ, டேற்றுத லுணர்த்திடு மரிக்குரற்
கிண்கிணி யிசைந்தகழ லிணைகளாடக்,—காந்துமணி குயிலிய நுதற்
சுட்டி யாடவொண் கனிவாயின் முறுவலாடக், கருணையங் கடலா
டும் வதனத்தி லாடரிக் கட்கயல்க ளிருமருங்கும்,—போந்துதொட்
டாட்டுகுழை மின்னூச லாடநீ பொன்னூச லாடியருளே, புகழ்
மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடி
யருளே. (உ)

வன்மைபடு கொங்கையம் பங்கயச் செல்வியர் மணிக்கயிறு
தொட்டசைப்ப, மாதிரதி யும்புலோ மசையுமய ராதிரு மருங்கில்
வெண் கவரிவீச,—வின்மைபடு நுண்ணிடை யணங்கினர்கண் மங்க
லமொ ரெட்டுநனி யேந்திநிற்ப, விகமொடு பரத்துமய னின்று
ளிர் தபோதனர்க ளிதயார விந்தமலர,—மென்மைபடு கொன்றை
யங் கண்ணியினர் தவயோகம் விரகவே லையிலமுந்த, மேதக்க பல்
லுயிரு முன்னைநா ளிற்செயும் வினைக்கி டெனச்சுமக்கும்,—புன்மை
படு முடலூச லிருவிதத் தாடவொரு பொன்னூச லாடியருளே,
புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச
லாடியருளே. (௩)

அதுலமெய்ச் சிவதபன வேதசன் மாவெனு மருச்சகன் வியந்
தாடவன், றளவறு மழைப்புனலி னெல்லுக்கு வேலியிடு மனவாத
தானரான,—முதுபரம் பொருளைப் பதஞ்சலி புலிப்பாத முனிவா
ர்க ளாடவீணை, முதல்வரது பாடற் களித்தவான் பரிசிலென மூரல்
வளைக் குழைகளாட,—மதுமலர்க ளாடப்பிறங்கும் புரிப்பவள வார்

(உ) துணர்-பூங்கொத்து. சிகழிகை-மாலை. தொயில்-சந்தனக்குழம்பாலெழுது
மெழுத்து. அரி - பருக்கைக்கல். குயிலிய - பதித்த. அரிக்கண் - இரேகைகளை
யுடையகண். (௩) புலோமசை - இந்திராணி. உடலூசல் - உடலாகியவூசல்.
இருவிதம் - நல்வினை, தீவினை. (௪) அதுலம் - ஒப்பில்லாமை. தபனம் - மனத்
துயர். வீணைமுதல்வர் - சிவபிரான் காதுகளிருந்து இசைபாடும் கந்தருவர். பரி
சில் - தியாகம். புரி - முறுக்கிய. பரம் பொருளை ஆட்டுமயிலெனக் கூட்டுக.

சடை விரிந்தாடமான், மழுவாட வெண்டலைக் குழுவாட மாணிக்க வரைபுரைய மிளிர்தாம்பிரப்,—பொதுவிலா டச்செங்கை கொட்டி னின் றூட்டுமயில் பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன் மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௪)

குருமணிச் சூட்டுரகர் வேட்டவர மீந்துங் குழற்கா னாறும் பொருட்டுக், கோகனக வாவியிடை நிருவாண மாப்புனல் குடைந் துளம் வருந்து மடவார்க்,—கருள்சுரந் தவர்துகி லளித்துமொரு கங்காள ராகிமுனி வரர்பன்னிமா, ராடைகள் கவர்ந்துமட லிந்தி ரத் துய்மனுறு மாணையுரு நீத்துநாளுந்,—திருவிளக் கிடுவாளொ டேடிய பாத்தைமகிழ் சீர்பெறச் செய்துமுதநா, றேறுநல மாதிசை வச்சிறுவ ரெய்தத் தெரித்தும்வினை யாடுமியல்பிற்,—பொருவில்வட மலைவில்லி மருவுமா சுதவல்லி பொன்னூச லாடியருளே, புகழ்மூங் கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடிய ருளே. (௫)

வல்லாண்மை தருமறை விரிஞ்சனுன் முகமலரில் வந்தசன காதியர்க்கு, மருண்மலி பவத்தரை யருட்டிறமை கொடுவென்ற வாதவூ ரடிகளுக்குங்,—கல்லாலி னடியிற் குருந்தநீ ழலினுதவு கருணையங் குரவர்தம்முற், கைக்கழை குழைத்துமலர் வாளிபெய் தின்பக் கடற்குட் குளிக்கவிட்டுச்,—சொல்லா லளப்பரிய வலிது ன்று சேயொன்று தூயநுத லம்பகத்தாற், றோன்றப் பெறக்கண் டெடுத்தா தரித்ததன் றோளில்வடி வேலாகியோர்,—பொல்லாங்கு மணுகாது நின்றமயின் கொடியினிது பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௬)

---

(௫) குழல் - (வண்டின்) இசைப்பாட்டு. கான் - வாசனை. இந்திரத்து ய்மன் - ஓரரசன். இயல்பின் - தன்மையுடைய. (௬) குரவர் - ஆசாரியரா கிய சிவபிரான். கைக்கழை - (உமாதேவியார்) கையிலிருக்குங் கரும்புவில். குழைத்து - வளைத்து. சேய் - முருகக் கடவுளாகிய புத்திரன்.

காதூர் தடங்கட் கரும்பிடி யெனக்குலவு கடைசியர் வாக்கண்டதாற், களிமிஞ்சு முழவர்வெயின் முதிருமு ணவிழ்ப்பக் களைந்தோடிடும்பகட்டெலா,—மோதுந் திரைத்தட முழக்கெனாந் தெழூம்வாளை முகில்கிழித் துப்பசுங்காய், மொய்த்தகமு கிற்பாய வதன்மடற் றுயின்மந்தி முறிபைந் தருவினெய்த,—மீதுந்து சோலையின் மடந்தையர்க ளாடுமணி மேடையிற் பலவீதியில், வியன்மலய வரைதமிழொ டுதவுதென் றற்குழவி மென்மேலும் வந்துலவுந்தெப்,—போதுந் தவழ்ந்துவள மலியுநெல் லைக்கரசி பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௭)

பரிசுத்த மேனியுட னலபத் தெய்திமெய்ப் பத்திசெய் குருநெறியிற், பஞ்சசுத் தியுமருவி யுட்புறமு மொருவழிப் படமுயன் றுபசரித்து,—விரிசொற்றண் மலர்கொண் டருச்சித் திறைஞ்சுநரு மிக்கமூ லாதாரமோர், வெங்கன லெழும்பிட விரேசகம் பூரகம் விளங்கு கும்பகமுடித்துத்,—தரிசிக்கு மவரும்வினை யொப்புமல பரிபாகதத்துவ மியைந்துளாருஞ், சாலோக மாதிய பதங்கண்முறை யிற்பெறத் தனிபருட் பெருகுமாடல்,—புரிசச்சி தானந்த சகளநிட்களவல்லி பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௮)

பங்கய மலர்த்துணை யெனக்குலவு தாள்களும் பரிதியிற் கதிர்விரிக்கும், பட்டாடை மேகலை யுடுத்தெழிற் பட்டிகை பதிந்தநுண்ணிடையு மொலிகூர்,—சங்கணியு மபயவர தச்செங்கை யுஞ்சாரசாமுதவு சிற்றுதரமுந், தண்ணருள் சுரக்குமிரு கொங்கைகளு மம்பொற் றடந்தோண் முகந்தகுழையு,—மங்கல மிடற்றணியு மிளமுறுவல் பூத்தகனி வாயும்வெண் மணிநாசியும், வாள்விழிப் பொலிவு

---

(௭) கடைசியர் - மள்ளப் பெண்கள். பகடு - எருமைக்கடா. (௮) பஞ்சசுத்தி - பூதசுத்தி, தான சுத்தி, இலிங்க சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி. உட்புறமும் - உள்ளும் புறமும். மூலாதாரம் - குய்யஸ்தானம். இரேசகம் - பிராணவாயுவை வெளிவிடுதல். பூரகம் - பிராணவாயுவை உள்ளே யிழுத்தல். கும்பகம் - பிராணவாயுவைச் சமப்படுத்தி யடக்கல். இருவினையொப்பு - நல்வினையுந் தீவினையுஞ் சமமாகக் காண்டல். மலபரிபாகம் - பந்த நீங்கிப் பக்குவமடைதல். தத்துவம் - உண்மை நிலை. சகளம் - உருவத்தோடு கூடியது. நிட்களம் - உருவமில்லாதது. (௯) பட்டிகை - சேலை. சங்கு - வளையல்.

மதி நுதலுமுக மண்டலமும் வரியளி முரன்றகூந்தற்,—பொங்குமு கிலங்கவெம திதயத்தி லாடுவாய் பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௯)

மடைபாய்ந்த கடலென்ன வருளோங்கு நலமன்ன மண்ணாதி யாமெண்வடிவாய், மறைநான்கு நுவலுண்மை கொடுவேண்டு மவர் தம்முன் மைம்மாயை தீர்கைபுரிவான்,—விடையூர்ந்து வருமண் ணல் புலிபாம்பு தொழுவெண்ணில் விண்ணுடர் காணவொருதாண், மிகவூன்றி யிருள்வன்ன முறுதீங்க ளுடல்பம்மு மெய்ஞ்ஞான நாடக மதா,—லுடைவாய்ந்த துடிபண்ணன் முதலாய்ந்த தவர்பன்னி யுண்ணாடு மோரைவகையா, மூயர்வார்ந்த தொழின்முன்னி முயல் பாங்கி னதுதன்மை யுன்னுசை போன்மலியவே,—புடைசூழ்ந்து பலவண்மை நவில்பாங்கி யினர்நண்ணு பொன்னூச லாடியருளே, புகழ்மூங்கில் வனநன்மை திகழ்காந்தி மதியம்மை பொன்னூச லாடியருளே. (௧௦)

ஊசற் பருவம்

முற்றிற்று.

---

## வாழி.

வேதங்கண் முதலாய பலகலைகள் வாழியருள் வெள்ளத் தமி ழ்ந்த பெரியோர், மிகவாழி யறுவகைத் தொழின்முயன் றழலோ ம்பும் விப்பிரர்கள் வாழியென்று,—நீதங்க டந்தமுறை செய்யாது செங்கோன்மை நிருபர்தம் பெருமைவாழி, நிறைபுகழ்ப் பாண்டி வள நாடுமதன் முகமனைய நெல்லைமா நகரும்வாழி,—மாதங்க வீரு ரிப் போர்வைகொடு திகழ்வேணு வனநாதர் வாழியவர்பான், மருவு மர கதமயிற் பெடையெனத் திகழ்காந்தி மதியம்மை வாழியவள் பொற்,—பாதங்க ளுக்கணியு மெனதுபிள் ளைக்கவிப் பருவங்கள் பத்தும்வாழி, பல்லுயிர்த் திரள்வாழி பைந்தமிழ்ச் சுவையருளு பாவாணர் குலம்வாழியே.

ஆகச் செய்யுள் ௧௦௪.

---

## காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் முற்றிற்று.

---

பொங்கு - பொலிவு. (௧௦) எண்வடிவு - நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா ஆகிய வுருவம். தீங்கள் - முயலகன்.

உ

சிவமயம்.

# நெல்லைவருக்கக்கோவை.

இது,

இராமநாதபுரம் சம்ஸ்தானத்தைச் சேர்ந்த

வீரசோழனென்னும் நகரவாசியும்

சௌந்தரியலகிரி யருளிச்செய்த

கவிராஜபண்டிதரவர்கள் புத்திரரும்

வேம்பத்தூர் வித்துவான்களிலொருவரும் ஆகிய

அம்பிகாபதி ஐயரவர்களால் இயற்றப்பெற்று

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

மு ரா. அருணாசலக்கவிராய ரெழுதிய

துறை, துறைப்பொருள், உரைக்குறிப்புகளுடன்

சுவாமி நெல்லையப்பர் கோவில் தருமகர்த்தர்கள்

திருநெல்வேலி ஸ்ரீமத் A. V.

இராமசாமிபிள்ளையவர்கள்

திருநெல்வேலிப் பேட்டை ஸ்ரீமத் வெ. மு.

சிவசுப்பிரமணியபிள்ளையவர்கள்

ஆகிய இருவர் பொருளுதவியால்

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

1914

சிவமயம்.

# நெல்லைவருக்கக் கோவை.

## காட்சி.

(இதன் பொருள்.) தலைவன் தலைவியை ஒரு பூஞ்சோலையினிடத்துக் காணுதல். தலைவனென்றுந் தலைவியென்றுங் கூறிய இவர் யாவரெனின்? இல்லது, இனியது, நல்லது என்று புலவராற் கூறப்பட்ட மூன்றனுள் இல்லதாகிய புனைந்துரை வகையாற்றோன்றினவரென்க. இவரது இலக்கணம் யாதோ எனின்? பிணி மூப்பு இறப்புக்களின்றி எந்நாளும் ஒரு தன்மையராய் உருவும் திருவும் பருவமும் குலனும் குணனும் அன்பும் முதலியவற்றால் ஒத்தவரென்க. இவ்விருவரும் ஒருவரை ஒருவர் காணும்போது தலைவனுக்குப் பதினைந்து வருடமும் பத்து மாதமும் தலைவிக்குப் பதினொரு வருடமும் பத்துமாதமும் சென்றிருக்க வேண்டுமென்பது தொல்லாசிரியர் துணிபு.

அமிழ்துங் கயலும் புயலுந் தனியரக் காம்பலுந்தே
னுமிழும் புதியவெண் முல்லையு மாயுண்மை யாரணமுந்
தமிழுந் தெருமணக் குந்நெல்லை நாதர் தடஞ்சிலம்பிற்
கமழும் பொழில்வளர் வல்லிகண் டேன்கண் களிகொண்டதே. (க)

## கண்படை பெறாது கங்குனோதல்.

(இ-ள்) தலைவியைப் பிரிந்த தலைவன் நித்திரை வாராமல் இராக்காலத்தை நோக்கி வருந்துதல்.

ஆவியுங் காயமும் போலவொன் றாகி யவளுடைய
நீவியஞ் சிற்றிடை போலரு காநிற்கு நீங்கியநாள்
வாவியம் போருகஞ் சூழ்நெல்லை நாதர் வரையில்வல்லி
காவியங் கட்கடை போலற நீளுங் கருங்கங்குலே. (உ)

---

(க) அரக்காம்பல் - செவ்வாம்பல். (உ) நீவியம் - சேலை. அருகாநிற்கும் - குறையாநிற்கும். வல்லி - வல்லிக்கொடிபோல்வாள். அற - மிக.

## கண்டோர் விலக்கல்.

(இ-ள்) தலைவியைத் தலைவன் விவாகஞ் செய்யும்பொருட்டுப் பாலைநிலத்து வழியிற் கூட்டிக்கொண்டுபோம்பொழுது அவ்விடத்துக் கண்டவர் விலக்குதல்.

இளைக்கும் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலி லீந்திலைபால்
வளைக்குங் குடிலில் வதுவைசெய் வாய்மறை பார்க்கிலுங்கள்
கிளைக்கும் பழுதில்லை யீங்கண்ண லேவெள்ளி கீழ்த்திசையின்
முளைக்கும் பொழுதெழுந் தாற்செல்ல லாநும் முதுநகர்க்கே. (௩)

## வளையோடு பகர்தல்.

(இ-ள்; தலைவன் வைத்த அடையாளமுள்ள இடத்தில் தலைவிவந்து தலைவனைக் காணாமற் றிரும்பிச் செல்லும் செய்தியைத் தலைவனுக்குச் சொல்லும்படி சங்குகளை நோக்கிச் சொல்லுதல்.

ஈன்ற வளைத்தப்பி ஞாளியின் வாய்தப்பி யெம்முயிரைப்
போன்ற வளைத்தப்பிப் போந்தெல் லாம்புர மூன்றெரியத்
தோன்ற வளைக்குஞ் சிலையாளர் நெல்லைச் சுரும்பினிலாக்
கான்ற வளைக்குலங் காள்சொல்லு வீர்வரிற் காதலர்க்கே. (௪)

## தழை நயப்புரைத்தல்.

(இ-ள்) தலைவன் கொடுத்த மாந்தழையைப் பாங்கி தலைவியினிடத்துக் கொடுத்துத் தலைவி விருப்பமுற்றதைத் தெரிந்து வந்து தலைவனுக்குச் சொல்லுதல்.

உழைவேடக் கண்ணினுக் கஞ்சன மாமொற்றைச் சிந்துரமாங்
குழைவேட மாமிழை வேடங்க ளாமுடல் கூனுஞ்சிலைக்
கழைவேட னெச்சிற் கருள்புரி வோர்நெல்லைக் கார்வரையிற்
றழைவேட மாறிப் பலவேடங் கொண்டதுன் றண்டழையே. (௫)

## இரவுநீடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) தலைவன் வராத இராத்திரி காலம் அதிகமாகத் தோன்றுதல் பற்றித் தலைவி துன்பமுறுதல்.

---

(௩) குடில் - சிறு வீடு. மறை - வேதவிதி. (௪) ஞாளி - நாய். சுரும்பு - மலை. நிலாக்கான்ற - ஒளியைக் கக்கிய. (௫) உழை - மான். அஞ்சனம் - மை. இழை - ஆபரணம். கழை - மூங்கில்.

ஊழிக் கருங்கங்கு னீக்கிவெய் யோனையிங் குள்ளழைக்குந்
தோழிக் குலத்தை வளர்ப்பதல் லாற்கொழுங் காவிமள்ளர்
மேழிக் குழாமணக் குநெல்லை நாதர் வியன்சிலம்பிற்
பாழுக்கி யான்வளர்த் தேன்கிளி யோடன்னம் பால்பருந்தே. (௬)

## பாகன்றன்னொடு சோகங் கொண்டவன் சொல்லல்.

(இ-ள்) கார்காலம் வரும்போது வருவேனென்று தலைவிக்குச் சொல்லிய தலைவன் வருத்தமுற்றவனாய்த் தேர்ச்சாரதியைத் தேரை விரைவாய் நடத்தும்படி குறிப்பாற் கூறுதல்.

எழுந்தாரை மாரிப் புனல்வெள்ள மோவெம்மை நீத்திருந்தா
ரழுந்தாரை மாரிப் புனல்வெள்ள மோகொன்றை யாடகப்பூச்
செழுந்தாரைச் சூடும் பிரானெல்லை நாதர் சிலம்பிற்செவ்விக்
கொழுந்தாரை வேல்வல வாவெந்த மாரி கொழிக்கின்றதே. (எ)

## கையுறை மறுத்தல்.

(இ-ள்) தலைவன் கொண்டுவந்த கையுறையைப் பாங்கிவாங்காமல் மறுத்தல். கையுறை - காட்சிப் பொருள்.

எட்டிற் றிகழ்கொன்றை யார்நெல்லை நாதரை யீன்றகழைக்
காட்டிற் றருமுத்த மொன்றன்றி யீர்ங்கஞ்ச ஞெருமலர்
வீட்டிற் றருமுத்த முங்கரு மால்சங்கின் வெண்முத்தமுஞ்
சூட்டப் பெறுவன வல்லநங் நாட்டின் றுணிபிதுவே. (அ)

## தன்னிலை தலைவன் சாற்றல்.

(இ-ள்) தலைவன் ஆசை நோயால் வருந்துந் தன்னிலைமையைத் தோழிக்குச் சொல்லுதல்.

ஐயம் புகுந்திருக் கைகளென் றூலு மடியிணைகள்
வையம் புகுமுந்தி மாமெருழு வோனெல்லை மாநகர்வேள்
கையம்பு தைத்த பசும்புண்ணி லேவைத்த காரமொக்குங்
கொய்யம் புயமனை யாளருட் பார்வைக் குளிர்சிங்கியே. (௯)

---

(௬) ஊழி - ஊழிக்காலம் போன்ற. அன்னம் - அன்னப் பறவையை. (எ) தாரைமாரி - நேரோடலாகிய மழை. தாரை - கண். தாரைவேல் - கூரியவேல். (அ) எட்டில் - இதழால். கழை - மூங்கில். (௯) தொழுவோன் - தொழப்படுவோன். சிங்கி - விடம்.

## தலைவனிடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) தலைவன் சொன்னபடி வாராமல் நாழிகை அதிகப்படத் தலைவி வருந்துதல்.

ஒருபோ துறங்குஞ் சரோருகங் காணுத யாதவன்மேற்
வருபோ துறங்கு மலர்நெய்தல் காள்வண்டு காலுழத்தேன்
றருபோ தலரும் பசுங்கொன்றை யார்நெல்லைத் தண்சிலம்பி
லிருபோதுங் கண்ணுறங் காதிருப் பேணிங் கிமைப்பறவே. (கo)

## அந் நகை பொறுஅ தலைவன் புலம்பல்.

(இ-ள்) தோழி சிரித்துச் சொல்லியதைச் சகியாமல் தலைவன் வருந்திக் கூறுதல்.

ஓலைக் குழைக்குந் தழைக்குமென் பாகி னுடன்கலந்த
பாலைப் பழிக்கு மொழிக்குமன் றேபிட்டின் பாதிக்கிட்ட
வேலைக் குழைக்கும் பிரான்றிரு நெல்லை வியன்சிலம்பிற்
சேலைப் பழிக்குங்கண் ணுப்நகைக் கேயுயிர் தேய்கின்றதே. (கக)

## ஆற்றுநெஞ்சினோடவன் புலத்தல்.

(இ-ள்) பாங்கி கையுறை மறுத்தலைச் சகியாத தலைவன் றன்னெஞ்சொடு வருந்திக் கூறுதல்.

ஔவவர் சீலம் பலவாகுஞ் சீல மறிந்தபின்ன
ரெவ்வெவர் நட்புங் கொள்ப்பெற்றி லேமிம வானணங்கை
வெளவிய கோலத்தர் நெல்லையஞ் சாரல் வரையில்வல்லி
நவ்வியங் கண்ணிணை யோற்றடு மாறிய நன்னெஞ்சமே. (கஉ)

## கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டிரங்கல்.

(இ-ள்) தலைவன் பிரிந்த இடத்து வந்த மாலைக் காலத்தைக் கண்டு தலைவி வருந்துதல்.

கக்குங் கனற்பிறை நாவாகச் செக்கர் கடுமறலி
யொக்கும் படிக்குவந் தாலென்செய் வேனுடல் கூனிவயி

---

(கo) சரோருகம் - தாமரை. நெய்தல் - ஆம்பற் பூ. (கக) கழைக்கும் - மூங்கில் போன்ற தோளுக்கும். வேலைக்கு -தொழிலுக்கு. நகைக்கே - (உன்னுடைய) சிரிப்புக்கே. (கஉ) ஔவவர் - அவரவரென்பதன் மரூஉ. வெளவிய- கிரகித்த. கோலத்தர் - மணக்கோல முடையவர், நவ்வி - மான். (கங) செக்கர் - செவ்வானம், கூனி - கோணி.

ஈறக்கும் பிறைமுடி யார்நெல்லை நாட்டி லிரைவிழுங்கி
விக்குங் குருகினங் காணுயிர் போகில் விழிபொருத்துமே (கங)

## களிறுதரு புணர்ச்சியா லறத்தொடு நிற்றல்.

(இ-ள்) சோலையில் விளையாடும்போது கொல்லவந்த யானையைக் கொன்று தலைவியைக் கூடிய தலைவன் களவைத் தோழி செவிலித்தாய்க்குக் குறிப்பால் வெளிப்படுத்துதல்.

காட்டானை வென்ற பொழுதந்த யானைக் கடுங்குரலைக்
கேட்டார் செவியினுங் கேட்குங்கொ லோகிளர் கெண்டையங்கண்
வாட்டாரை யாய வடிவுடை யாள்வலப் பாகர்நெல்லை
நாட்டா ரறிப மணமுரசு சாலிக்கு நல்லொலியே. (கச)

## ஆற்றிடை முக்கோற் பகவரை வினுதல்.

(இ-ள்) தலைவனுடன் சென்ற தலைவியைச் செவிலித்தாய் தேடிச் செல்லும்போது வழியில் எதிரே வரக்கண்ட திரிதண்டமுடைய அந்தணரைக் கேட்டல்.

கிம்புரிக் கோட்டுக் களிற்றுளர் நெல்லைக் கிரியிலிரண்
டம்புருக் குங்கண்ணி யண்ணல்பின் னேயழல் வாய்க்குகையிற்
செம்புருக் கிச்சொரிந் தாலன்ன பாலைச்சென் ளுகம்வெந்த
வெம்புரிக் கொக்குமென் றுற்சென்ற வாறெங்ஙன் வேதியரே. (கரு)

## சுனை நயப்புரைத்தல்.

(இ-ள்) தோழியை யறியாது சென்று தலைவனைப் புணர்ந்து வந்த தலைவி இதுவரை யெங்குச் சென்றாயென்று கேட்டதோழிக்குச் சுனையாடி வந்தேனென்று சொல்ல, அவள் களவைத் தெரிந்து தோழி பரிகாசமாகச் சுனையினது நன்மையைச் சொல்லுதல்.

ஈற்றுப் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரற் கிரியிலிரண்
டூற்றுச் சுனைமுக் குளித்துவைதந் தாடியபு மூவைதப்பட்டும்
வேற்றுத் தலந்தொறும் வேர்வுழி யாமல் விரகுவார
னோற்றுப் பிறந்தனை யேயணங் கேநல்ல னோன்பிதுவே. (கசு)

---

எச்கும்-ஒரு புறம் வற்றிவளையும். விழி -(என்) கண்ணை. பொருத்தும் - மூடுங்கள். (மரணகாலத்தில் மரணமடைவார் கண் திறந்திராமல்மூடி வைத்தல் உலகவழக்கு) (கச) தாரை-கூர்மை. ஆலிக்கும்-ஒலிக்கும். (கரு) கிம்புரி - யானைத் தந்தத்திற் கட்டும் பூண். செல் - ஊர்ந்துசெல் கின்ற. (கசு) முக்குளித்து - அமிழ்ந்தி. வைதை - காற்று. விரகு - உபாயம். நோற்று - தவஞ்செய்து.

## பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) பொருளின் பொருட்டுப் பிரிந்த தலைவன் கார்காலம் வருவே னென்றபடி வாராமையால் அக்கார் காலம் வரக்கண்டு தலைவி வருந்திச் சொல்லுதல்.

குறைக்கோல வெண்டிங்கள் வேணியர் நெல்லைக் குளிர்பொருநந்
துறைக்கோல வண்டினங் காளனங் காடுலைக் கைபிடித்து
நறைக்கோலங் கண்ட மலர்க்கண்க ளாலின்று நானிருந்த
சிறைக்கோலங் கண்டில ரேபொருண் மேலன்பு சென்றவரே. (௧௭)

## நீடு நினைந்திரங்கல்.

(இ-ள்) புணர்ச்சி யெய்தாமையால் இவளுள்ளம் எந்நாளிசையுமோ வெனத் தலைவன் தலைவியை நோக்கி நெடுநேர நினைந்து வருந்திக் கூறுதல்.

கூன்முகத் திங்க ளொருரேகை காண்கினுங் கொப்பளிக்குந்
தேன்முகத் தாம்ப லலருங்கெட் டேன்செங்கண் மாலுங்கஞ்ச
நான்முகத் தோனுந் தொழுநெல்லை நாதர்தந் நட்டிலிந்த
மான்முகத் திங்கள்புக் கும்மல ராதென் வல்வினையே. (௧௮)

## தான் குறிமருண்டமை தலைவியவட்குணர்த்தல்.

(இ-ள்) தலைவன் வைத்த குறியிடத்தையறியாமற் சிரமப்பட்டுச்சென்று வந்ததைத் தலைவி பாங்கிக்குச் சொல்லுதல். குறி - அடையாளம்.

கெங்கைச் சடாடவி யார்நெல்லை நாதர் கிரிப்புறத்தி
லங்கைத் தலத்துந் தவழ்ந்துசென் றேன்சென்ற வாடவர்கைப்
பங்கப் பழம்புண் ணிடையே புதுப்புண் பரந்தவெம்மைக்
கொங்கைக் குறிகள்கண் டாலாய ரேயென்னைக் கோவிப்பரே. (௧௯)

## மெய்தொட்டுப் பயிறல்.

(இ-ள்) தலைவன் தலைவியின் சரீரத்திலொருறுப்பைத் தீண்டிப் பழகுதல்; அஃதாவது: கூந்தலிலுள்ள வண்டுகளை யோட்டுதல் போலத் தோளைத் தொட்டுப் பேசுதல்.

---

(௧௭) நறைக்கோலம் - மணக்கோலம். (௧௮) ரேகை - வரை; ஒரு சிற்றளவு. புக்கும் - புகுந்தும். ஆம்பல் வாய்க்குவமையாதலறிக. (௧௯) கெங்கை - கங்கையின் மரூஉ. குறி - வடு. ஆயர் - தாய்மார்.

கேழற் பெருங்கொம் பணிநெல்லை நாதர் கிரியிற்கொங்கை
வாழப் பொருது மருங்குல்கெட் டேன்வண்டர் வாய்சுவைத்து
வீழக் கருங்கண் டிறக்குஞ்செங் காவிமென் றூரெணினுஞ்
சூழப் பொருதுகண் டீர்பெற்ற தாயர் துணிவுநன்றே. (உ0)

முன்னிலை யாக்கல்.

(இ-ள்) தலைவி நிற்பது தன் காரியத்திற்கு வேண்டுங் காரண மென்றெண்ணி அவளைத் தலைவன் முன்னிலையாக்கிப் பேசுதல்.

கையுங் கவணு மிதணுங்கல் லோசையுங் காவல்செய்து
தொய்யும் புவனமுந் தோன்றகிற் பீர்தொல்லை மாபுரமுன்
றெய்யுங் கழைமுத்தர் நெல்லையஞ் சாரலி னீஞ்செறிந்து
கொய்யும் புனம்வைப்ப ரோவென்ன மாயமிக் கோலங்களே. (உக)

புறங் காட்டல்.

(இ-ள்) தலைவனும் தலைவியுஞ் சயனித்திருக்கும்போது தலைவி புறங் காட்டுதலைச் சகியாமல் தலைவன் சொல்லுதல். புறம் - முதுகு.

கொலைவேழ மன்றுரித் தார்நெல்லை நாதர் குளிர்சிலம்பிற்
கலைவேழ மியானெய்த காட்டிடை யேயும்மைக் கைப்பிடித்துத்
தலைவேழ முன்னிட்ட வன்றும்மைப் பின்விட்ட தன்னானிக்கோ
முலைவேழ முன்னிட்டின் றெம்மைப்பின் னாக முனிவிட்டதே. (உஉ)

இறைமகளாடிடனோக்கி யழுங்கல்.

(இ-ள்) தினையறுத்தபின் புனங்காவலை விட்டுத் தலைவியைத் தோழி கொண்டு போம்போது தான் விளையாடிய இடத்தைப் பிரிதற்கஞ்சித் தலைவி வருந்துதல்.

கோணும் பிறைமுத்தர் நெல்லைபஞ் சாரலின் குன்றிலியாம்
பேணும் புனமும் பிழைபட்ட தாற்பிறை வாயினம்பும்
நாணுஞ் செறியுஞ் சிலைவேட ராலுநம் மாலுநன்கு
காணுங் கணித்தெய்வ மும்பகை யானதென் காவலுக்கே. (உ௩)

(உ0) வாழ - பெருத்து உயர. (தாற்பரியம்). வண்டர் - வண்டுகளே. (உக) இதண் - பரண். தொய்யும் - சேறும். புவனமும்-நீரும். (உஉ) கலை - மான். தலை வேழம் - முதன்மையாகிய யானை. முன்னிட்ட - எதிரிட்ட. பின்விட்ட-(எனக்குப்) பின்னிறுத்திய முனிவிட்டது - கோபஞ் செய்தது. (உ௩) சாரல்-மலைப்பக்கம். பிழைபட்டது - தவறுபட்டது; அஃதாவது:தினை யறுத்தபின் காவலறுதல். ஆல் - அசை. கணித்தெய்வம் - வேங்கை மரமாகிய தெய்வம். வேங்கை பூத்தகாலம் தினையறுக்கும் காலமாதலால்பகையானதென்றாள்.

### முல்லையைப் பழித்தல்.

(இ-ள்) தான் வளர்த்த முல்லைக் கொடி தனக்கு விரோதமாக அரும்பை யீன்று மன்மதனுக்குப் பாணமாக்கித் தன்னை யெய்யச் செய்தலால் அம்முல்லைக் கொடியைத் தலைவி நிந்தித்துச் சொல்லுதல்.

கௌவைத் திரைக்கங்கை யார்நெல்லை மேற்கட நீர்வடித்துச்
செவ்வைப் படவிதற் கோவளர்த் தேன்றிங்கள் வெண்குடைக்கீழ்ப்
பௌவத் திரைமுர சார்ப்பவில் வேளுக்குப் பாசறையின்
மௌவற் றிணிபரும் பீர்கணை யாய்விட்ட வாறுநன்றே. (உச)

### புகழ்தல்.

(இ-ள்) தலைவியினது நலத்தைத் தலைவன் மகிழ்ந்து சொல்லுதல். நலம்- அழகு.

சடைவீடு கங்கைக் களித்தார்தென் னெல்லையிற் றுவியகட்
கடைவீட தாகுங் கனங்குழை யிருந்தி கான்றகஞ்ச
மடைவீட தாகு மயன்றலை நாவி லனங்கனுக்கோர்
படைவீடு வேண்டுமென் றேவெளி யாயிடை பாலித்ததே. (உரு)

### கையுறை மறுத்தல்.

(இ-ள்) அ-ஆவது துறைப்பொருளிற் காண்க.

சாயீன்ற பாவையன் றுளுக்கு வேலைமண் டாங்குரகன்
வாயீன்ற மாணிக்கங் கொண்டுவந் தானு மணிமுடிமேற்
காயீன்ற கொன்றை கமழச்செம் பாதி கலந்தபச்சை
வேயீன்ற முத்தன்றி வேண்டுவ தோநெல்லை வெற்பிடத்தே. (உசு)

### இறைமகளாடிட நோக்கியழுங்கல்.

(இ-ள்) உங-வது துறைப்பொருளிற் காண்க.

சினங்காலுஞ் சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பிலென்றன்
மனங்கால்பின் முன்செலச் செல்லுகின் றேன்வள்ளை பாடுகிள்ளை
யினங்காள் வெறுங்கவண் காளிதண் காளெம்மை நீத்தயரும்
புனங்காளிங் கேதுசொல் வீர்வந்து தேடும் புரவலர்க்கே. (உஎ)

---

(உச) கௌவை - ஒலி. கடம் - குடம். பௌவத்திரை - கடல் (இருபெயரொட்டு). பாசறை - படைவீடு. மௌவல் - முல்லையினது. (உரு) படைவீடு - போர்செய்தற்குச் சேனையோடு தங்கியிருக்குமிடம். வெளி - ஆகாயம். பாலித்தது - சிருட்டித்தது (தாற்பரியம்.). (உசு) சாய் - அழகு. (சாயலென்பதில் அல்கெட்டது) உரகன் - ஆதிசேடனாகியபாம்பு. (உஎ) காலும் - கக்கும். மனங்கால் பின்முன் - மனம்பின்னும் கால்முன்னும். வள்ளை - உலக்கைப் பாட்டு. இதண் - பரண்.

## பாலனைப் பழித்தல்.

(இ-ள்) புத்திரனைப்பெற்ற காலத்தில் தலைவியைத்தலைவன் சேராதிருந்தலால் தலைவி அப்புத்திரனை நிந்தித்துச்சொல்லுதல்.

சீறுக் கருணையர் நெல்லையி லேயன்பர் சிந்தைதனை
மாறுக்கி விட்ட மழகளி றேமலர்க் காவியங்கண்
ஞாறுக்கி விட்டதும் போதாமல் வேங்கை யடைகிடந்த
தூறுக்கி விட்டனை யேதமி யேனைத் துணைவருக்கே. (௨௮)

## நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கல்.

(இ-ள்) தினையறுத்தபின் தன்னூர்க்குச் செல்லும்போது தலைவிதலைவனைப் பிரிந்திருக்க நேர்ந்ததேயென்று நினைந்துவருந்திச்சொல்லுதல்.

சுனைவிளை நீருண்டி யாம்புனங் காவற் றொழில்புரிந்தாற்
றினைவிளை வாமென் றிருந்தனெல் லாந்தென்றற் கன்றுமுன்றின்
மனைவிளை யாடுந் திருநெல்லை நாதர் வரையினிற்றீ
வினைவிளை வாய்விட்ட தேயிது வோபின் விளைவதுவே. (௨௯)

## குருகோடு புலம்பல்.

(இ-ள்) தலைவிதலைவனைச்சேர்ந்திருக்கும் இரவு விடிதலைக்கண்டு கோழியோடு வருந்திக்கூறுதல்.

சூழிக் கரிபுரித் தார்நெல்லை மேற்குன்றந் தூட்படுத்தும்
பாழிச் சுடரிலை வேலன்வந் தாற்றிரைப் பாய்சுருட்டு
மாழிக் கதிரவ னைக்கங்குல் யாமத் தழைக்கவெழுங்
கோழிக் கிதுமுறை யோவினை யேனென் குறைசெய்ததே. (௩௰)

## பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) தலைவன் பிரியும்போது கார்காலத்துக்கு முன்னே வருவேனென்று குறிப்பாற் கூறியபடி வாராமையால் கார்ப்பருவங் கண்டு தலைவி புலம்பிக் கூறுதல்.

---

(௨௮) மழகளிறே - யானையினிளங்கன்று போல்வாய். வேங்கை-புலி. (௨௯) தென்றற்கன்று - இளந்தென்றல். தீவினைவிளைவு - தினை யறுத்த பின் தலைவனைக் காணப்பெறாமை (௩௰) சூழி - யானைமுகபட்டம். வேலன் - குமாரக் கடவுளை யொத்த தலைவன். கோழிக்கு- கோழியாகிய வுனக்கு.

செருவந்த சூலப் படையாளர் நெல்லைச் சிலம்பின்முந்நீர்க்
கருவந் தெழுந்த கருங்கொண்டல் காள்கலங் கிக்குமுறி
யுருவங் கருகிப் பரந்துகண் ணீர்சிந்தி யோடமுன்னுட்
பருவங் குறித்ததுண் டோவெனைப் போலொரு பைந்தொடியே. ()

## குறம்.

(இ-ள்) தலைவி தலைவனைச் சேரக்கூடுமோவென்று சந்தேகித்திருந்த இடத்துக் கூடுமென்று குறத்திவந்து குறிசொல்லுதல்.

சேலிற் றிகழ்விழி யாயிடு கூழன்பர் சேர்வரிந்தச்
சூலிக் கவுளி வலமுநன் றேதொல்லை யஞ்செழுத்தின்
மூலிக் கழைமுத்த னெல்லையஞ் சாரன் முளைத்தெழுந்த
சாலிக் குறிபொய்க்கு மோகுறங் கூற றவறினுமே. (கஉ)

## தழை நயப்புரைத்தல்.

(இ-ள்) கூ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

சைவத் துறையன்பர் நெஞ்சினுள் ளார்நெல்லைத் தண்சிலம்பின்
மைவைத்த வேல்வைத்து வார்குழன் மேல்வைத்து மார்பில்வைத்து
மெய்வைத் திறுகு முலைமுகத் தேவைத்து மேற்றொழுது
கைவைத்து வாங்குந் தழையைநின் மார்பென்று கண்டனளே. (கங)

## வண்டுறை தாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) இரவுக்குறியிடத்தில் தலைவன் தலைவியை நேரே வந்து காணுதல்.

சொரியுங் கதிர்ச்சுடர்க் கன்றிச்சந் தோதயந் தோன்றமடல்
விரியுங் கமலமெங் கேபடைத் தீர்வெள்ளை வேதத்தனு
மரியுந் தொழுமர னெல்லையஞ் சார லரையிருள்சாய்
வரியுண் கயல்விழி யீரெம்மை யாள வருவதற்கே. (கச)

## புகழ்தல்.

(இ-ள்) உடு-ஆவது துறைப்பொருளிற் காண்க.

---

(கஉ) சூலி - கருவுடையதாகிய. கவுளி - பல்லி. மூலி - மூலமாயுள்ள வனுகிய. (மூலம் - பிரணவப் பொருள்.) சாலிக்குறி - நெற்குறி- குறம் - குறி.
(கங) வேல் - வேல் போன்ற கண். (கச) கதிர் - சூரியன்- மடல் - இதழ்.

சோதிப் பிறைமுத்தர் நெல்லைபஞ் சாரற் சுரும்பிற்கச்சின்
வீதிக் கடங்குமென் றேவணிந் தீர்வெளிப் போந்தவிந்த
வாதிப் பகிரண்ட மொன்றிரண் டாக வறுக்கவந்த
பாதிக் கடங்குமல் லாலடங் காதும் பணைமுலையே. (கடு)

## மெய்தொட்டுப் பயிறல்.

(இ-ள்) உ௦-ஆவது துறைப்பொருளிற் காண்க.

சௌரியங் கொண்ட புயத்தவி சேறித் தனித்திருந்து
கௌரிகொண் டாடும் பிரானெல்லை நாதர் கிரியிற்றென்றற்
கவுரிகொண் டாலு மொருநூன் மருங்குலைக் கண்டும்வண்டர்
பவுரிகொண் டீர்குழன் மேல்விசைக் காற்றுப் படப்படவே. (கசா)

## இடையூறு கிளத்தல்.

(இ-ள்) தலைவி வெட்க முற்றுக் கண்ணை மூடிக் கொண்டு நிற்றலினு லெழுந்த துன்பத்தைத் தலைவன் கூறுதல்.

ஞானந் திரண்ட திருமேனி யார்நெல்லை நாட்டிற்றென்னன்
மீனங் கவரும் வழியணங் கேவண்டு மேய்ந்தகுழற்
கானம் புகுந்தவென் காம விடாய்கெடக் கண்டதர
பானந் தரநினை யீரினிப் போதும் பராமுகமே. (கஎ)

## பிறைகண் டிரங்கல்.

(இ-ள்) தலைவி பிறைச் சந்திரனைக் கண்டு வருந்திக் கூறுதல்.

ஞெகிழிப் பொறிவிட்ட சந்த்ரோ தயநென்னன் மாரன்விட்ட
பகழிப் பசும்புண் படிலெஞ்செய் வேன்பொன் பரப்பிக்கொண்ட
புகழிற் றிகழ்நெல்லை வேய்முத்த நாதர் பொருப்பின்முந்நீ
ரகழிக் கருங்கம்புள் காளன்பர் வாய்மையு மன்பற்றதே. (கஅ)

---

(கடு) வீதி - விசாலம். பகிரண்டம் - வெளியண்டம். பணை - பருத்த. (கசா) சௌரியம் - வீரம். புயத்தவிசு - தோளாகிய ஆதனம். கௌரி - பார்வதி (கௌரியென்பதன் மரூஉ). தென்றல் - தென்றற் காற்றால். கவுரி...... ஆலும் - அசையும். பவுரி - கூத்தின் விகற்பம். (கஎ) கானம் - காட்டில். விடாய் - தாகம். (கஅ) ஞெகிழி - கொள்ளிக் கட்டை. பொறி - தீப்பொறியை. முந்நீர் - கடல் போன்ற. கம்புள் - சம்பங்கோழி.

## தன்பதியணிமை சாற்றல்.

(இ-ள்) இவ்விடத்திலே தங்கிப்போதல் வேண்டு மென்ற தலைவிக்குத் தலைவன் றன்னுடைய வூர் சமீபத்திலுள்ள தென்று கூறுதல்.

ஞொள்கா னுடங்கு மிடைமட வீர் றுங்க ணேக்கியமான்
வெள்கா வருந்துஞ் சுரங்கடந் தோடினி மேனடந்தாற்
றெள்காவுந் தென்றற் றிருவீ தியுஞ்சிந்து பூந்துறைநீர்
கொள்காவும் வேய்முத்தர் கோபுர வாயிலுங் கோயிலுமே. (௩௯)

## முல்லையைப் பழித்தல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்து வருந்தியிருக்குங் காலத்தின் மலர்ந்த முல்லைக் கொடியைத் தலைவி நிந்தித்துக் கூறுதல்.

தண்டோட் டிளங்கொன்றை யார்நெல்லை நாட்டிற் றறைபிளந்து
கொண்டோட்டும்வேரில்வெந்நீர்விட்டிலேன்வெள்ளிகொண்டுசெய்த
வெண்டோட்டுப் பூந்தள வேயுன்னை மான்மென்று தின்பதைநான்
கண்டோட்டி விட்டதற் கோநகைத் தாயுன் கருத்துநன்றே. (௪௦

## பிறைகண் டிரங்கல்.

(இ-ள்) ௩அ-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தாதக லாத சடையாளர் நெல்லையிற் றாழ்மகரக்
காதக லாத கயல்விழி யீர்கடுங் கூற்றன்விட்ட
தூதக லாத பிறைபோல மேற்றிசை தோன்றசற் றும்
போதக லாதிருப் பீருயிர் காணு முன் போகின்றதே. (௪௧)

## குரவொடு புலம்புல்.

(இ-ள்.) தலைவன்பின் சென்ற தலைவியைத் தேடிவரும் செவிலித்தாய் குராமரத்தைக் கண்டு அதனிடத்தில் வருந்திக் கூறுதல்.

---

(௩௯) ஞொள்கால் - இளைத்தலால். நுடங்கும் - அசையும். வெள்கா - வெட்கப்பட்டு. தெள்கா - தெளியப்பட்ட சோலை (இருண்ட சோலையன் றென்றபடி). (௪௦) தோடு - பூவிதழ். தளவே - முல்லையே. நகைத்தாய் - (என்னைப்பார்த்துச்) சிரித்தாய். (௪௧) தாது - பொன்னிறம் (ஆகுபெயர்). சற்றும் - சிறிதும். போது - (இப்) பொழுது. அகலாதிருப்பீர் - (தலைவன்பாலிச் செய்தியைச் சொல்லப் போகாமல் என்னை விட்டு) நீங்காதிருப்பீர்.

திரைப்பாவை சூடும் பிரானெல்லை நாதர் சிலம்பிற்செல்வி
பொரப்பாவை வேலன்பின் னேதனி யேசிற்றில் போட்டுவெள்ளப்
பரப்பாவை யோசெலல் கண்டிருந் தேயும் பசியகுரா
மரப்பாவை யாதலி ஞேதேடித் தாயில்லை வாய்திறந்தே. (சஉ)

## தலைவி தன்னுட்கோள் சாற்றல்.

(இ-ள்) தலைவனுடன் செல்லுந் தலைவி தன் எண்ணத்தைத் தாய்மாருக்குச் சொல்லும்படி தன்னெதிர் வரும் அந்தணரிடத்திற் சொல்லுதல்.

திட்டச்சொ லாமழு வார்நெல்லை நாதர் சிலம்பிற்கல்வி
ஞட்டச்சொ லீர்முல்லைப் பந்தர்க்குக் கானவ்வி நாவலரா
தூட்டச்சொ லீர்முலை தேடுமென் பூவை யுறங்கத்தொட்டி
லாட்டச்சொ லீரந்த ணீர்பெற்ற தாய ரளவுசென்றே. (சங)

## வண்டுறைதாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) கச-ஆவது துறைப்பொருளிற் காண்க.

துள்ளிட்ட கங்கைச் சடையாளர் நெல்லைச் சுரும்பிலிரா
நள்ளிட்ட தாமரை யார்திறந் தார்நடு நீர்மனையிற்
கள்ளிட்ட தோட்டுக் கபாடம் புறம்விட்டுக் காலதச்ச
னுள்ளிட்டு வைத்தில னேமணித் தாளை யுபாயஞ்செய்தே. (சச)

## தன்மக ளிளமைத் தன்மைக் குளமெலிந்திரங்கல்.

(இ-ள்) நற்றாய் தன்மக ளிளமைக்குணத்துக்கு மன மெலிந் திரங்கிக் கூறுதல்.

தூதைக் கலனுஞ் சிறுசோறுஞ் சிற்றிலுந் தோழியருந்
தாதைக் குலமு மறந்தன ளாயினுஞ் சங்கரிதன்

---

(சஉ) செல்வி - இலக்குமி. பொரப்பாவை - ஒத்த அப்பெண். வெள்ளப் பரப்பா - வெள்ளத்தின் விரிவுபோல; அஃதாவது: வெள்ளத்தின்விரிவு கண்ட இடமெல்லாம் போதல் போலத் தலைவி தலைவன் சென்ற இடமெல்லாஞ் செல்லுதல். கண்டிருந்தேயும் - பார்த்திருந்த நீயும். குரா - குராமரமே. (சங) திட்டச் சொலாமழு வென்றது: யுத்தஞ் செய்யப் பகைவரில்லாமற் கூர்மையோடிருக்கின்ற மழுவாயுத மென்றபடி. கல்லில் - கல்லால். கால் - தூண். நவ்வி - மான். தாயரளவு - தாயாரிருப்பிடம் வரை. (சச) துள் - குதித்தல். சுரும்பு - மலை. இராநள் - அர்த்தராத்திரி. கபாடம் - கதவு. காலதச்சன் - இராக்காலமாகிய தச்சன்- (சரு) தூதைக்கலன் -சிறு முட்டியாகிய பாத்திரம்.

காதற் கொழுநர்தந் நெல்லையி லேகை நெகிழிலழும்
பேதைக் குலமெங்ங னேமறந் தாள்சென்ற பேதையின்றே. (சரு)

## தன் மகள் மென்மைத் தன்மைக்கிரங்கல்.

(இ-ள்) நற்றாய் தன்மகள் மெல்லிய தன்மைக்கு வருந்திக் கூறுதல்.

நெருப்பைந் தமிழ்மணக் குந்நெல்லை நாதர் சிலம்பிற்செந்தீ
பொருப்பொன்று சூடெங் ஙனம்பொறுத் தாள்பகற் போதுவிண்ட
மருப்புண்ட ரீகம் பறிக்கநெட் டோடையில் வந்துபுக்கு
நெருப்பென்று நின்றழு தாளிளந் தாமரை நேரிழையே. (சசு)

## தலைவனிடத் தலைவி வருந்தல்.

(இ-ள்) கo-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தேங்கோடு சிந்தும் பொழினெல்லை நாதர் சிலம்பிற்செவ்விக்
கோங்கோ டிணையுங் குவிமுலை யீர்குட நீர்விடுநாட்
பூங்கோடு சுற்றுங் கருகாமற் போற்றி வளர்த்தவிந்த
மாங்கோடு பூக்குமுன் னேயன்பர் வார்த்தை வடுப்பட்டதே. (சஎ)

## தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) விவாகஞ் செய்து பின்னர்ச் சேர்வாயென்று உலகியலுரைத்த பாங்கி வார்த்தையைச் சகியாதவனாய்த் தலைவன் மறுத்துக் கூறுதல்.

தைக்குங் கணைவிழி பங்காளர் நெல்லைத் தலத்தில்வண்டு
மொய்க்கும் பசுந்தழை வாங்குகி லீர்முலைப் பாரஞ்சுமந்
தெய்க்குங் கொடியிடை போலிளைத் தேற்கின்று நாளைக்கென்று
பொய்க்கும்பொருள்சொல்லுவீருமைப்போலில்லைபூவையரே. (சஅ)

## தலைமகன் பொருள் வயிற் பிரிந்துழித் தலைவி பனிக்காலங் கண்டிரங்கல்.

(இ-ள்) தலைவன் பொருளின் பொருட்டுப் பிரிந்த இடத்துத் தலைவி பனிக்காலம் வரக்கண்டு வருந்திக் கூறுதல்.

---

கை நெகிழில் - (கை கோத்து விளையாடும்போது) கையோடு கை நீங்கினால். பேதைக்குலம்-சிறு பருவப் பெண் கூட்டம். (சசு) ஒன்று-பொருந்திய. மரு - வாசனை. புண்டரீகம் - தாமரை. (சஎ) தேம் - தேனை. கோடு - மரக்கொம்பு. இணையும் - ஒக்கும். மாங்கோடு பூக்கு முன்னே யன்பர் வார்த்தை வடுப்பட்ட தென்றது-மாமரம் பூக்குமுன்னே வருவே னென்ற தலைவன் மாமரம் பூத்தும் வாராமையால் அவன் வார்த்தை குற்றப்பட்டதென்றதாம்; இதிலுள்ள நயங்காண்க வடு - குற்றம். (சஅ) எய்க்கும் - இளைக்கும்.

தொடைகிடக் குஞ்சடை யார்நெல்லை நாட்டிற் றுணைவர்வைவேற்
படைகிடக் கச்சென்ற நாட்டில்லை யோபனிக் காலமெல்லாம்
புடைகிடக் கும்பெடை யைச்சிற கான்மெல்லப் போர்த்துவிடா
தடைகிடக் குங்குரு குஞ்செக்கர் வானமு மந்தியுமே. (சக)

## வறுங்களநாடி மறுகல்.

(இ-ள்) தினையறுத்தபின் தலைவி நீங்கிய தினைப்புனத்தை நாடி வந்து அவளைக் காணாது தலைவன் மனஞ்சுழன்று கூறுதல்.

தொல்லைப் புரமெரித் தோர்நெல்லை நாதர் சுடர்க்கிரிமேற்
கொல்லைக் குறவர் மடந்தையெங் கேசொலுங் கோலமதன்
வில்லைக் குனிப்பவ ரேயநு ராகம் விளைப்பவரே
கல்லைப்பெண் ணுக்கு மவரேநம் மானத்தைக் காப்பவரே. (ருo)

## வண்டறைதாரோன் வந்தெதிர்ப்படுதல்.

(இ-ள்) ௩௪-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தோளிட்ட மாலைச் சுடரோன் கபாடப்பொற் றொடைத்துத்
தாளிட்ட தாமரை யார்திறந் தார்சந் திரனுக்கொற்றை
நாளிட்ட திங்கட் சடையாளர் நெல்லையி னள்ளிருள்வாய்
வாளிட்ட கண்மட வீரெம்மை யாள வருவதற்கே. (ருக)

## குரவொடு புலம்பல்.

(இ-ள்) ௪௨-ஆவது துறைப் பொருளிற் காண்க.

தௌவல்செய் தாயிலைத் தண்குர வேதழ லாயுடலம்
வௌவல்செய் யுங்கொடும் பாலையி லேதிங்கள் வட்டநிலாக்
கௌவல்செய் யும்பணிக் கங்கணத் தார்நெல்லைக் கார்வரைப்பூ
மௌவல்செய் யுந்நகை யாளடிப் போது வருந்துவதே. (ருஉ)

---

(சக) தொடை - மாலை. வேற் படை கிடக்கச் சென்ற நாடென்றது - வேலாயுத மிங்கே யிருக்கப் பொருளின் பொருட்டுச் சென்றநாடென்றபடி. புடை - பக்கத்தில். குருகு - நாரைப் பறவை. (ருo) கொல்லை - தினைப்புனம். வில்லைக்குனிப்பவர் - வில்லை வளைப்பவர்; வண்டுகள். அநுராகம் விளைப் வர் - (ஓசையால்) ஆசையை யுண்டாக்குபவர்; குயில்கள். கல்லைப் பெண்ணுக்குமவர் - அரிதாள்கள்; தினையறுத்த தாறுகள். மானத்தைக் காப்பவர் - கலைகள்; மான்கள். (ருக) கபாடம்-கதவு. தாளிட்ட-தாள் பூட்டிய. ஒற்றை நாளிட்ட திங்கள். மூன்றும் பிறைச் சந்திரன். (ருஉ) தௌவல் - கெடுதல்; தடை. வௌவல் - பிடித்தல். திங்கள் - திங்களாகிய. பணி - பாம்பு. வருந்துவது - வருந்துவதை.

### வறுங்கள நாடி மறுகல்.

(இ-ள்) ௫0-ஆவது துறைப்பொருளிற் காண்க.

நல்லோசை கொண்ட தமருகத் தார்நெல்லை நாட்டெயினர்
வில்லோசை கேட்ட களுங்கிள்ளை காளிதண் மீதிருந்தார்
சொல்லோசை யுங்குன் றொலியோசை யுஞ்சுற்றி விட்டகவண்
கல்லோசை யுந்தமி யேனென்று தானினிக் காண்பதுவே. (௫௩)

### புனங் கண்டு மகிழ்தல்.

(இ-ள்) தோழியுந் தலைவியுமிருக்கப் பெற்ற தினைப்புனத்தைக் கண்டு தலைவன் மகிழ்ந்து கூறுதல்.

நாப்பிட்ட பாம்பணி வோர்நெல்லை மேனாறுங் காந்தள்விண்டு
தீப்பட்ட குன்றிற் செழுந்தினை காடினும் வேழமென்னக்
காப்பிட் டினக்கிள்ளை வீழாமற் கைக்கவண் கொண்டுநின்று
கூப்பிட் டவர்க்கன்றி யுங்களுக் கேனிக் குரனெரிவே. (௫௪)

### பாங்கி தலைவியை முனிதல்.

(இ-ள்) தலைவி யொன்றுக்கு மறுமொழி கொடாளாக அவளைச் சினந்து தோழி சொல்லுதல்.

நிறைக்குழை யாய வலம்புரி யார்நெல்லை நாட்டிற்செம்பொன்
முறக்குழை பாயுங் கயல்விழி யாய்கனல் மூட்டிக்கிண்டி
புறக்குழை யாத பதத்தே வடிக்கு முலைமணச்சோ
றறக்குழைந் தாலு மரிசியென் றாலு மதுபிழையே. (௫௫)

### நற்றா யிரங்கல்.

(இ-ள்) தலைவி தலைவனுடன் பாலை நிலத்திற் சென்றதை யுணர்ந்த நற்றாய் வருந்திக் கூறுதல்.

நீட்டிற் குறையுந் திருமேனி யார்நெல்லை நாட்டிலண்ணல்
கூட்டிக் கொடுசெலும் பேதைக்கி யான்கொடும் பாலையழன்

---

(௫௩) தமருகம் - உடுக்கு. எயினர் - வேடர். இதண் - பரண். (௫௪) நாப்பிட்ட - நாக்குப் பிளந்த. காப்பு - காவல் கூப்பிட்டவர் - சத்தமிட்டவர். குரல் நெரிவு - தொண்டை நெரிதல் + கதிர் நெரிதல். (௫௫) வலம்புரி - சங்கு. முறக்குழை - முறம் போலும் வட்டமாகிய குழை. (முறம் - சுளகு.) பின்னிரண்டடியும் அதிகமாகப் பேசினாலும் ஒன்றும் பேசாதிருந்தாலுங் குற்ற மென்பதை விளக்கிற்று. (௫௬) நீட்டின் - (பாண்டியன் வேண்டுதலால்) வளர்ச்சியினின்றும்.

மூட்டிப் புகையெழு விக்குமென் றேமுன்னை நாளிற்செம்பஞ்
சூட்டிக் களித்திருந் தேனைய கோவவ. ளுள்ளடிக்கே. (௫௬)

## பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) ௫௧-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நுண்டுளி மாரியும் வெற்பையும் போன்முலை நோக்கிவிழுங்
கண்டுளி மாரியுங் கண்டில ரேதெவ்வைக் காயக்கொண்ட
மண்டுளி வாய்மழு வார்நெல்லை நாதர் வரையிலிந்தத்
தண்டுளி மாரிக்கு முன்வரப் போன தறுகண்ணரே. (௫௭)

## பாலனைப் பழித்தல்.

(இ-ள்) ௨௮-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நூலா மருங்கி னுமைபாகர் நெல்லைபி ஞேற்றுப்பெற்ற
பாலர் பகலும்வந் தாரில்லை யேகையிற் பற்றியவேற்
கோலா னெடும்புனத் திட்டமுள் வேலியைக் கோலிமெல்லக்
காலால் வழிதட விக்கங்குல் வாய்வரக் கற்றவரே. (௫௮)

## குறம்.

(இ-ள்) ௫௨-ஆவது துறைப் பொருளிற் காண்க.

நெறிப்பட் டவர்தொழு நெல்லையஞ் சாரலி னின்றுவந்தோம்
வெறிப்பட்ட வாய்மைக் குறத்தியல் லேம்வெள்ளி வெற்பனுக்கு
மறிப்பட்ட கண்ணிக்கு மன்றிம வானில்லில் வட்டமுறக்
குறிப்பட் டதுபட்ட தாலணங் கேயிடு கூழெமக்கே. (௫௯)

## இறையோ னிறைவி தன்மை யியம்பல்.

(இ-ள்) தலைவன் தான் காதலித்த தலைவி தன்மையைக் கூறுதல். தன்மை - இலக்கணம்.

நேரிட்ட பாம்பணி வார்நெல்லை நாதர் நெடுஞ்சிலம்பிற்
போரிட்ட வேழமும் புண்பட்ட வேனும் புடையடங்க

---

(௫௭) நுண்துளி - சிறுதுளி. மாரி - மழை. மண்டு - நெருங்கிய. உளிவாய் - உளியைப்போலுங் கூர்மை பொருந்திய. (௫௮) நோற்று - தவஞ் செய்து. கோலி - சுற்றி. கோலாலுங் காலாலு மெனக் கூட்டுக. (௫௯) வெறிப்பட்ட - குடிவெறியுண்டாகிய. மை - கருநிறமுடைய. முறக்குறி - சுழகுக்குறியால். பட்டது - உண்டாகிய விவாகச்செய்தி. பட்டது - (ஊரெங்கும்) தெரிந்தது. (ஆதலால் எங்கள் குறி கைகண்ட குறியென்று தெரிவாயாக) (௬0) நேரிட்ட - (தாருகாவனத் துருஷிகள் விட) எதிர்ப்பட்ட. புடை - விம்முதல்.

வாரிட்ட கொங்கையுங் கண்களு மென்றுரு மாறிவந்து
பேரிட்டு நின்றன வாமென்னை வாட்டிய பெண்கொடிக்கே. (கூ0)

### தலைவன் புலர்ந்துபோதல்.

(இ-ள்) தலைவி குறி தவறி வாராமையால் தலைவன் தான் குறிப்பிட்ட இடத்திலிருந்து வருந்தித் தன்னூர்க்குப்போதல்.

நையு நுண் ணூலும் வெளியுமெய் சான்றவர் நாவறியாப்
பொய்யும் படைத்த விடைமட வார்தண் பொருநைச்சங்கஞ்
செய்யுந் தவழுந் திருநெல்லை நாதர் சிலம்பிற்கெட்டேன்
மெய்யுஞ் சொலக்கற்ப ரோவொரு காலம் விரும்பினர்க்கே. (கூக)

### பிரிவுழிக் கலங்கல்.

(இ-ள்) பொருளீட்டுதற்காகத் தலைவன் தூரதேசத்திற்குச் செல்லப் பிரிந்த இடத்துத் தலைவி வருந்திக் கூறுதல். ஈட்டுதல் - சம்பாதித்தல்.

நொந்துளைந் தீன்ற கழைமுத்தர் நாட்டி னுரையின்முத்துச்
சிந்துதங் கானற் றிரைமணற் பாவைக்குச் சில்கழங்கு
பந்துதந் தாதரித் தென்பால் வரவழி பார்த்துநொந்து
வந்துநின் றுரைக்கொண் டோசெல்லு வாய்சொன் மரக்கலமே. (கூஉ)

### பாகன் றன்னொடு சோகங் கொண்டவன் சொல்லல்.

(இ-ள்) கார்காலங்கண்டு சோகங் கொண்ட தலைவன் தேர்ப்பாகனொடு தேரை விரைந்து நடாத்தக் குறிப்பாற் கூறுதல்.

நோற்றுப் பிறந்த வுமைபாகர் நெல்லையி னுண்டுளிநீ
ரேற்றுப் புயன்முந்தி லென்செய்யு மோவெதி ரானதெவ்வர்
வேற்றுப் புலம்வென்று பந்தியை நோக்கி விரையும்பரி
காற்றிற் செலுமென்ப ரேவல வாவொன்றுங் கண்டிலனே. (கூங)

---

கொங்கையுங் கண்களுமென்று பேரிட்டு உருமாறி வந்து நின்றனவா மெனக் கூட்டுக. கொடிக்கு - கொடியினிடத்து. (கூக) வெளி — ஆகாயம். ஒருகாலம் மெய்யுஞ் சொலக் கற்பரோ எனக்கூட்டுக. (கூஉ) கானல் — கடற்கரைச் சோலை. கழங்கு — கழற்சிக்காய். மரக்கலம் - கப்பல். (கூங) நோற்றுப் பிறந்த - (மலையரசன்) தவஞ் செய்தலாற் பிறந்த; திருவவதாரஞ் செய்த. புயல்-மேகம். செய்யுமோ - செய்வாளோ. வலவா - சாரதியே.

## ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

(இ-ள்) கடு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

நௌவியுந் தும்பையும் பூங்கொன்றை மாலையு நாண்மதியைக்
கௌவிய் பாம்புந் தரித்தபி ரானெல்லைக் கார்வரையிற்
செவ்விய மாலைக் குரிசில்பின் னேமுகச் செவ்விகன்ற
வெவ்விய பாலையிற் சென்றன ளோவெங்கண் மெல்லியலே. (சுச)

## தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) சஅ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பல்லா தவனை யுகுத்தோர்தெ னெல்லையிற் பண்டெவர்க்கு
மில்லாத நல்லற மெய்திநிற் பிரெமக் கில்லையென்று
சொல்லாம னீரிட்ட நன்மணச் சோறு சுடினதனுட்
கல்லாய நேரமுண் டோர்பசி காணுங் கடிதெமக்கே. (சுரு)

## பாணன் வாயில் வேண்டல்.

(இ-ள்) பரத்தையிற் பிரிந்த தலைவன் விடுத்த தூதாக வந்த பாணனது வீணையைக் கல்லாலுடைத்த தலைவிக்கு அப்பாணன் சமாதானஞ் சொல்லுதல்.

பாதிப் பிறைமுடி யார்நெல்லை நாட்டிற் பரத்தைதனைச்
சோதித்து விட்டல்ல வோவெறுப் பீர்சொலக் கேளுமெங்கள்
கீதத்து வீணை யுடைக்கவென் றோபைங் கிளிகடிந்து
சாதித்து நின்றதெல் லாமணங் கீரன்று தண்புனத்தே. (சுசு)

## இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன்மடலேபொருளெனமதித்தல்.

(இ-ள்) மறுநாட் காலையில் வந்த தலைவன் பாங்கியாற் காரிய முண்டெனக்கருதி இரந்துகுறை முடியாதாயினேனென்று வருத்தமுற்று, இனிச் செய்வதாவது * மடலேறலேயென மதித்துப் பாங்கியோடு சொல்லுதல்.

---

(சுச) நௌவி - நவ்வி யென்பதன் மரூஉ. நவ்வி - மான். வெவ்விய- கொடிய. (சுரு) உகுத்தோர் - உதிர்த்தோர். பின்னிரண்டடிக்குந் தலைவியை யென்னோடு கூடச் செய்த நீ இப்போது விவாகஞ் செய்து கூடென்றதனால் அதுவரை பொறுத்திருக்க முடியாதென்று தலைவன் பாங்கியினிடத்துச் சொன்னானென்பது பொருளாகக் கொள்க. (சுசு) கிளி கடிந்து - கிளியைக் கவண்கல்லாலெறிந்து விரட்டி. பழகி-சாதித்து.

* மடலேறலாவது-பனங் கருக்காற் குதிரையும் பனைமரத்திலுள்ள மற்ற வற்றால் வண்டி முதலாயினவுஞ்செய்து அக்குதிரையின் மேலேறுவது; அவ்

பிணங்குஞ் சடையு மெருக்கும்வெண் ணீறும் பிறங்குதசை
யுணங்குந் தனியென்பு மாலையு மாயெம் முயிர்பருகி
நிணங்கொண்ட வேல்விழி வல்லிய ரேயுங்க ணெல்லையினீர்
வணங்குங் கடவுளைப் போல்வரு வேனிந்த மன்றிடத்தே. (சஎ)

### தலைவன் தலைவி வருத்திய வண்ணமுரைத்தல்.

(இ-ள்) தலைவி இளமைப் பருவமுடையவளென்று கூறிய பாங்கிக்கு அவ்விளமைப் பருவமே தன்னை வருத்திய விதத்தைத் தலைவன் கூறுதல்.

பீதாம் பரர்தொழு நெல்லையஞ் சாரலிற் பேதைகொங்கை
சூதாம் பருவத் தசைதல்கண் டாய்துணைக் கோடடக்கிப்
போதாம் பருவத்தில் வென்றுபொன் மேருவைப் போல்வளர்ந்தா
லேதாம் புவனங்கெட் டேனினி யோர்நெஞ்ச மெண்படுமே. (சஅ)

### எழுதரி தென்றல்.

(இ-ள்) மடலூரத் துணிந்த தலைவன் தலைவியின் அவயவத்தை யெழுதுதல் முடியாதென்று வருந்திக் கூறுதல்.

---

விதம் ஏறுவான் நிருவாணியாய் உடலெங்கும் நீறுபூசித்தான் இச்சித்த தலைவியினுருவத்தை யொருபடத்தில் தன்கையாலெழுதி அப்படத்தின் தலையிலே தன்பெயரையெழுதித் தன்கையிற்பிடித்து நடுவூருள்ளே நாற்சந்தியில் ஆகாரம் நித்திரையில்லாமல் அப்படத்தின் மேலே பார்வையையு மனத்தையுமிருத்தி ஆசைவயத்தனும் வேறுணர்ச்சியில்லாமல் ஆவுரிஞ்சினும் அழல்மேற் படினும் அறிதலின்றி மழைவெயில் காற்றால் மயங்காதிருக்குமிடத்து, அவற்றைக்கண்ட அவ்வூரிலுள்ளார் பலருங்கூடிவந்து நீ மடலேறிச்சோதனை தந்தால் நீ விரும்பிய பெண்ணைக் கொடுக்கச் செய்வோமென்று கூற, அதற்கவன் இசைந்தானானால் அவர்களதை அரசனுக்கறிவித்து, அவனுத்தரவு வாங்கிக்கொடுத்தால் மடலேற வேண்டும். அங்ஙனமேறும்போது பூளையெலும்பு எருக்கம்பூ இவைகளாற் கட்டியமாலை புனைந்து கொள்ளல் வேண்டும். அக்குதிரையின் வடத்தை யிழுக்க, அக்குதிரையின் யந்திரத்தினுருளை உருண்டோடும்போது பனங்கருக்கு அறுத்த இடமெல்லாம் அவன்சரீரத்தில் இரத்தம் வெளிப்படாது வீரியம் வெளிப்பட்டால் அப்போது அவன்கருதிய பெண் யாராயிருந்தாலும் அவளை யலங்கரித்து அவனுக்கு அரசன் கொடுக்கச்செய்தல் வேண்டும். வீரியம் வெளிப்படாமல் இரத்தம் வெளிப்பட்டால் அவனைஅரசன் கொலைசெய்யும்படி யுத்தரவு செய்தல் வேண்டும்; இவை புலவரால் நிருமிக்கப்பட்ட வழக்கு.

(சஎ) பிணங்கும்-நெருங்கும். உணங்கும்- வாடும். நிணம்-மாமிசம். (சஅ) சூதாம் பருவம் - அரும்பாயிருக்கும் இளமைப் பருவம். போதாம்பருவம் - மலரும் பருவம்.

புளகப் படாமுலை யுங்கழைத் தோளும் புதுமதிமே
லளகப் படாமு மெழுதின மாயினு மன்பிலர்நெஞ்
சுளகப் படாமுத்தர் நெல்லையன் ஞெரொருக் காளுநம்பா
லிளகப் படாநெஞ்சை யெப்படி யோவிங் கெழுதுவதே. (சுகூ)

## பின்னாள் நெடுந்தகை குறிவயி னீடு சென்றிரங்கல்.

(இ-ள்) எட்டா நாள் தலைவன் குறியிடமாகிய மாதவிப் பந்தரிடத்து வந்து தலைவியைக் காணாது காலம் நீட்டித்து நின்று வருந்துதல்.

பூக்கமழ் கோதையை நென்னலி லேதந்து புல்லென்றமை
நீக்குமென் றுலிதற் கேதுசெய் வேனன்பர் நெஞ்சினுள்ளே
தூக்கிய பாதத்தர் நெல்லையஞ் சாரற் சுரும்பிற்கெட்டே
ணுக்கிய தெய்வ மதிக்கிலெங் கேசென் றறிவிப்பதே. (எ௦)

## அன்றிலோடு புலம்பல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்த தலைவி அன்றிற் பறவையொடு வருந்திக் கூறுதல்.

பெருகும் புனற் சிந்து பூந்துறை யார்நெல்லை மேற்பெருத்துக்
கருகும் பெரிய தடம்பெண்ணை மேலிரை காதலித்தே
யருகுங் கலவி யெனப்பிரி யாதல கோடலகு
சொருகுங் குருகினங் காள்சொல்லு வீர்மனஞ் சோர்பவர்க்கே. ()

## அன்னத்தோடு புலம்பல்.

(இ-ள்) தலைவனைப் பிரிந்த தலைவி அன்னப் பறவையொடு வருந்திக் கூறுதல்.

பேட்டிளங் கால்வண் டுழுந்தொறு மாடக வெள்ளம்பெற்ற
கோட்டிளங் கொன்றையு மில்லைகொல் லோகுனிக் காயெருக்குந்
தோட்டிளந் தும்பையுஞ் சூடும்பி ரானெல்லை சூழுமிந்த
நாட்டிளங் கர்லனங் காளன்பர் போகிய நாடெங்குமே. (எ௨)

## ஆற்றிடை முக்கோற் பகவரை வினாதல்.

(இ-ள்) கூ௫ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

---

(சுகூ) புளகம் - மயிர் சிலிர்த்தல். படாம் - உத்தரீயம். கழை - மூங்கில். அளகப்படாம் - கொடிபோல நீண்ட கூந்தல். படாம் - பெருங்கொடி. (எ௦) நென்னலிலே தந்து - நேற்றுக் கூட்டுவித்து. நீக்கும் - (இன்று) நீக்கிவிடும். (எக) பெண்ணை - பனை. காதலித்து - விரும்பி. அருகும் -(பிரிந்தால்) குறையும். அலகு - பறவை மூக்கு. (எ௨) ஆடக வெள்ளம் - பொன்னிற மிகுதி. குனிக்காய் - வளைந்த காய்.

பைந்நீழ லாகச் சடையாளர் நெல்லைப் பரமர்வெற்பி
லெந்நீ ழலைமறந் தேகின பாவைக்கங் கேயெயினர்
தந்நீழ றம்மி லடங்குமப் போது தவிர்ப்பவண்ணல்
வெந்நீழ லன்றியுண் டோவந்த வீரந்த வெஞ்சுரத்தே. (எங)

பாலனைப் பழித்தல்.

(இ-ள்) உஅ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பொறிவைக்கும் பாந்தட் சடையாளர் நெல்லைப் பொருப்பின்முந்நீர்
கறுவிக் கவரும் விழியணங் கேசெவ்விக் காமநலஞ்
செறிவிக்கு நோன்பதத் தீவினை யேனுக்குஞ் சேர்ப்பருக்கும்
பிறிவித் திடுமருந் தோவிதற் கோமகப் பெற்றதுவே. (எச)

தன்பதி யணிமை சாற்றல்.

(இ-ள்) நக - ஆவது துறைப் பொருளிற் காண்க.

போற்றிப் பதமிருந் தாறணங் கேபுள்ளு மாவுஞ்செலா
வேற்றுப் புனமிது கானவ ரூரினி மேனடந்தா
னேற்றுப் பிறைமுடி யார்நெல்லை யூரும்நெட் டோடைகளுந்
தாற்றுக் கதலியுந் தாமரைக் காடுந் தடாகமுமே. (எரு)

சுனைநயப் புரைத்தல்.

(இ-ள்) கக - ஆவது துறைப் பொருளிற் காண்க.

பெளவக் கடுவிட முண்டார்தென் னெல்லைப் பரமர்வெற்பிற்
கொவ்வைக் கனிசெய்த கோலத்தி னாலுங் குரவைவண்டின்
கெளவைக் கருங்குழல் வாசத்தி னாலுங் கருத்தினின்ற
செவ்வைச் சுனையல்ல வோவணங் காடிய தீஞ்சுனையே. (எசு)

---

(எங) எம் - எம்முடைய. எயினர் - வேடர். தந்நீழல் தம்மிலடங்கு மப் போது - உச்சிப் பொழுதில். அண்ணல் - தலைவன். வெந்நீழல் - விருப்ப மாகிய நிழல் (எச) பொறி - புள்ளி. கறுவி-கோபித்து. நோன்பு-தவம். அதம்-தாழ்வு; இல்லாத. சேர்ப்பர் - தலைவர். (எரு) ஆறு - சிரமபரிகாரஞ் செய். மா - மிருகம். நேற்றுப்பிறை-மூன்றாம் பிறைச் சந்திரன். தாறு-குலை. கதலி - வாழை. (எசு) பெளவம் - கடல். கனி - கனிபோன்ற அதரம். கோலம் - அழகு. குரவை - பெருமுழக்கம். கெளவை - கள்; தேன். சுனையென்றது கலவி யைக் குறித்து நின்றது. அணங்கு - பெண்ணே.

## தலைமகன் மறுத்தல்.

(இ-ள்) ௬அ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மதம்பார்த்து வேழ முரித்தோர்தென் னெல்லையின் மாரனஞ்சக்
கதம்பார்த் தொறுக்குங் கயல்விழி யீர்கனன் மூட்டிக்கிண்டிப்
பதம்பார்த் தெடுத்து வடித்தவெண் சோறு பசித்தவர்தம்
மிதம்பார்த் தளிக்கவில் லீரிது வோவுங்க ளில்லறமே. (எஎ)

## இடையூறு கிளத்தல்.

(இ-ள்) ௩எ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மாடஞ் செயுநெல்லை வேய்முத்தர் நாட்டின் மலர்ப்பொகுட்டுப்
பீடஞ் செயுமலர்ப் பெண்ணமு தேபெரும் பாவிநெஞ்சைக்
கூடஞ் செயுங்கொங்கை யானையல் லாற்கொற்ற வேள்சுருதி
பாடஞ் செயுங்கண்க பாடஞ்செய் தாலென் பகர்வதுவே. (எஅ)

## பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல்.

(இ-ள்) மடலேறுவே னென்ற தலைவனை நோக்கிநீ படமெழுதியன்றோ? மடலேறவேண்டும். தலைவி அவயவத்தை யெழுத முடியாதேயென்று பாங்கி கூறுதல்.

மிடிபட்ட நுண்ணிடை பங்காளர் நெல்லையில் வேந்துன்மல
ரடியிட்டு வைத்தத னுற்பய னென்னரந் தின்றவைவேல்
வடியிட்ட கண்ணி வடிவே யெழுத மருங்கிற்குமோர்
படியிட்டு வைத்தில னேவெளி யாகப் படைத்தவனே. (எகூ)

## உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

(இ-ள்) உற்றூர் அயலூரிலிருந்து வந்தால் அவர்க்கு உணவுகொடுத்து உபசரித்தல் உலகியல்பாதலால் அவ்வுலகியல் பெருமைப்படத் தலைவனை எம்மூர்க்கு வந்திருந்து விருந்துண்டுபோவெனப் பாங்கி தலைவன் செல்லுதலை விலக்கல்.

---

(எஎ) மதம் - கெருவம். கதம் - கோபத்தால். பின்னிரண்டடிக்கும் அநுபவித்தற்குரிய பருவமுடைய தலைவியை அநுபவிப்பவர் நன்மையைப் பார்த்துச் சேர்த்து வைக்கிறதில்லை. இதுவோ உங்கள் கொடைத் தன்மையென்று தலைவன் பாங்கியொடு கூறினு னென்பது பொருள். (எஅ) பொகுட்டு-தாமரைக் கொட்டை. கபாடம் - மறைத்தல். (எகூ) மிடி-இல்லாமை. வேந்து-தலைவனே. இட்டு - படைத்து. வெளி - ஆகாயம்.

மீனுண் டிளங்குரு கார்நெல்லை வேலியர் வெற்பிலிந்தக்
கானுண்ட வேட ரறவும்பொல் லார்கங்கு றங்கியிவ்வூர்
யானுண் டுமக்குற வாகநெரந் தீரிளைப் பாறநல்ல
தேனுண்டு மாவுண்டு நீருண்டு போகச் சிறப்புண்டுமே. (அ௦)

இறைவனை நகுதல்.

(இ-ள்) தலைவன் அப்பாற் சென்றுழிகதோழி தலைவியை நோக்கிச் சிரித்துப் பேசுதல்.

முடத்தேய் பிறைமுத்தர் நெல்லையஞ் சாரலின் மூச்சுடலம்
படத்தேயுந் தண்டமழ கொண்டெய்த வர்பகற் போதிலடித்
தடத்தேசெ லாமற் புனங்காக்கும் பேதையர் தங்கள்கொங்கைக்
குடத்தேயுந் தேடுவ ரோகெடுத் தேமென்ற குஞ்சரமே. (அக)

நற்ரு யிரங்கல்.

(இ-ள்) ௫௬ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மூற்றித்ரி சூலத்தர் நெல்லையஞ் சாரலின் மும்மதமா
மாற்றுப் புனலுங் கவரும்வெம் பாலையி லண்டிமலர்
தூற்றிக் குழலை முடிப்பவ ரார்சுட்ட பாலைவள்ளத்
தாற்றித் தருபவ ராரணங் கேயுன் னருகிருந்தே. (அஉ)

பருவங்கண்டு பாங்கி புலம்பல்.

(இ-ள்) தலைவன் பிரியும்போது வருவேனென்று சொல்லப்பட்ட கார் காலத்தைக் கண்டு பாங்கி வருந்திக் கூறுதல்.

மெழுகா யுருகின்ற வன்பர்க்குள் ளார்நெல்லை வெற்பர்சொன்ன
வெழுகாரும் வந்து தலைப்பட்ட தாலிங் கிரவுபக
லொழுகா றெனுங்கண்க ளூற்றடை யாளெனக் கொன்றுஞ்சொலாண்
முழுகாண் மலர்முடி யாளணி யாண்முலை முத்தங்களே. (அ௩)

நற்ரு யிரங்கல்.

(இ-ள்) ௫௬ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

மேலுந் தனித்திப் படிவரு மோகுன்றில் வேடர்வில்லுங்
கோலுஞ் செறியுங் குறிஞ்சியெம் மூரண்டர் கோனுஞ்செங்கண்
மாலுந் தொழுமுத்தர் நெல்லையஞ் சாரல் வரையிற்றென்றற்
காலுந் தமிழ்மணக் குந்திரு நாடன் கடிநகரே. (அச)

(அ௦) கானுண்ட - காட்டிலிருக்கின்ற. (அக) முடம் - வளைவு. தேயும் - வாடும். (அஉ). மூற்றி........ (அ௩) தலைப்பட்டது - வெளிப்பட்டது. (அச) இப்படி - இந்தப் பூமியில். கால் - காற்று.

## இடையூறு கிளத்தல்.

(இ-ள்) ௯௭ ஆவது துறைப் பொருளிற் காண்க.

மைக்கடங் சாக்கண்டார் நெல்லையி லேவட குன்றமெனுந்
திக்கடங் காமுலை யைப்புதை யாய்தென்ற லந்தமிழின்
மெய்க்கடங் கான்முனி கைப்போ தடங்கும் விரிகடல்போற்
கைக்கடங் காதுன் குழைக்கடங் காத கருங்கடலே. (அரு)

## தலைவி பாணனை மறுத்தல்.

(இ-ள்) பரத்தையிற் பிரிந்த தலைவன் விடுத்த தூதாக வந்த பாணனைத் தலைவி மறுத்தல்.

மொழிகைக்கு மீதன்றி யன்பர்திண் டேருக்கு முன்றில்வர
வழிகைக்கு மீதுகண் டாயிசைப் பாண மதிக்குடையோ
னழிகைக் கனல்விழித் தார்நெல்லை மால்வரை யத்தமுற
விழிகைக் குழன்மட வார்விலைச் சேரிக் கெழுந்தருளே. (அசு)

## தன்னிலை தலைவன் சாற்றல்.

(இ-ள்) ஆசைநோயால் வருந்துந் தலைவன் தன்னிலைமையைப் பாங்கிக்குச் சொல்லுதல்.

மோக்கக் குழையு மணிச்சமென் பூவின் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்தென்ப ரேநுரைக் கங்கைமுடி
தேக்கப் பொறுப்பவர் நெல்லையி லேசிற் றிலிற்சிறுசோ
றுக்கப் பொறுத்திருந் தேனளி யீர்பசி யாறுதற்கே. (அஎ

## இதுவுமது.

மௌவலைப் போலு நகைவலத் தார்நெல்லை வாரிதிநீர்ச்
செவ்வலைக் கேசென்று தோணி துழாவிச் சிறந்தவையர்
மெய்வலைக் கேபட்ட மீன்போலு மென்னெஞ்ச மீனுமுங்கள்
பொய்வலைக் கேபட்ட தேயிது போலவும் பொய்யிலையே. (அஅ)

---

(அரு) புதையாய் - மூடமாட்டாய். கருங்கடல் - கரிய கடல்போன்ற கண். (அசு) மொழி - (உன்)சொல். அழிகைக்கு - சாதற்கு. அத்தமுற - திரவியஞ் சேரும் பொருட்டு. இழிகைக்கு - இழிதொழிலுக்கு. உழல் - சஞ்சரிக்கின்ற. (அஎ) தேக்க - நிறைய. நான்காவதடிக்கு, இதுவரை பொறுத்திருந்தேன். இப் பொழுதே விரகநோய் தீர்ப்பதற்குத் தலைவியைச் சேர்த்துவைப் பாயெனத் தலைவன் பாங்கியிடத்துக் கூறினான் என்பது பொருள். (அஅ) மௌவல் - முல்லையரும்பு. வலத்தார் - வெற்றியையுடையவர். செவ்வலைக்கு - செவ்வையாகிய வலை வீசுதற்கு. துழாவி - கலந்து. நெஞ்சமீன் - மனமாகிய மீன்.

### மன்மதனோடு மதிகண் டிரங்கல்.

(இ-ள்) தலைவி மன்மதனையுஞ் சந்திரனையுங் கண்டு வருந்திக் கூறுதல்.

யானைப் பகடுரித் தார்நெல்லை நாத ரிருஞ்சிலம்பின்
மானைக் கவரும் வரிவிழி யீர்மத வேளுமின்னோர்
சேனைக் குழாத்துடன் றானும்வந் தான்செய்ய வானிலண்டர்
கோனைக் கொழுந னெனப்படைத் தானுங் குலாவினனே. (௮௯)

### பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்.

(இ-ள்) பாங்கிதலைவியை நோக்கிக் கார்காலம் வருமுன் நீ யிவ்வாறு வருந்துவ தென்னை யென்று கொடிய சொல்லைச் சொல்லுதல்.

பூகங் குதிக்கும் பொழினெல்லை நாத ருயர்சிலம்பிற்
சோகந் தவிர விழிபனி மாரித் துளிசொரிந்தான்
மாகஞ் செறிகதிர் வட்டச்செந் தீயை மறைக்கவின்றே
மேகந் தலைப்படு மோவன்பர் வாய்மை வெளிப்படவே. (௯௰)

### அவனஃதிவ்விடத் திவ்வியற் றென்றல்.

(இ-ள்) தலைவன் என்றாற் காணப்பட்ட உரு இந்த இடத்து இந்த இயலையுடையதென்று பாங்கனுக்குச் சொல்லுதல். பாங்கன் - தோழன்.

யோகஞ் செறியா னெல்லையஞ் சார லுருகுமின்ப
போகஞ் செறியும் புணர்முலை யாளுக்குப் பூங்கமலத்
தாகந் திருமனை செங்கைபைங் காந்த ளமிர்தமொழி
நாகஞ் செறிபட மல்குல்கண் டாயினி நன்னண்பனே. (௯௧)

### புகழ்தல்.

(இ-ள்) உரு - ஆவது துறைப் பொருளிற் காண்க.

வழுதிகண் டாவிக்க வேயில்வந் தார்நெல்லை மால்வரைத்தே
னுழுதுகண் டாவிக்கு மென்குழ லீருமைக் கோட்டிச்சற்றே
பழுதுகண் டான்மு னிடைபடை யாமற் படைத்தவனே
யெழுதிலுண் டாகு மிடையில்லை யாகி லிடையில்லையே. (௯௨)

### தலைவி நெஞ்சொடு புலத்தல்.

(இ-ள்) தலைவனைப் பிரியுந் தன் தலைவி மனத்தொடு வருந்திக்கூறுதல்.

---

(௮௯) யானைப் பகடு-ஆண் யானை. அண்டர் கோன் -இந்திரன். கொழுநன் - நாயகன். படைத்தாள் - கொண்டவளாகிய சசி.. சசி-இந்திராணி + சந்திரன். (௯௰) பூகம் - கருங்குரங்கு. மாகம் - ஆகாயத்தில். செறி - நெருங்கிய. (௯௧) புணர் -நெருங்கிய. கமலத்தாகம் - தாமரைமலர் வடிவம். நண்பன் - தோழன். (௯௨) ஆவிக்க - மனமகிழ. தேன் - வண்டு. கோட்டி - எழுதி. பழுதுகண்டான் - குற்றஞ் செய்தான்.

வார்துணை யாமுலைக் குற்ற துணையது வாழ்பசலை
நீர்துணை யாயது கண்கட் கொளிர்நெடுஞ் சூலமன்றிப்
போர்துணை யாமழு வார்நெல்லை நாதர் பொருப்பிலினி
யார்துணை யாவர்நெஞ் சேயன்பர் போகிலென் னாருயிர்க்கே. (கூ௩)

## பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

(இ-ள்) கஎ - ஆவது துறைப் பொருளிற் காண்க.

விடஞ்சூல் கொளுங்கண்டர் நெல்லையி லேகடன் மேய்ந்துவயி
றிடஞ்சூல் கொளுங்கொண்டன் முற்பட்ட தான்முத்த மீன்றுளையத்
தடஞ்சூல் கொளுஞ்சங்க மேவங்க மேமுடத் தாழைச்செங்காய்க்
குடஞ்சூல் கொளும்பொழி லேயன்பர் மீளுங்குறிபொய்த்ததே. (கூ௪)

## தன்மனத் தழுங்கல்.

(இ-ள்) தலைவியுடல் தணியாளாக தலைவன் றன் மனத்தொடு வருந்திக் கூறுதல்.

விழ்ந்தா தாத்துடன் மாறொழு வோர்நெல்லை வேலைவலை
சூழ்ந்தானு மீனுக்குத் தோணிவிட் டானுமெய் சூட்டமுத்தங்
காழ்ந்தானு நின்று பலநா ளுணங்கி யடிக்கடிமண்
டாழ்ந்தானு மில்லைகொ லோமட வாருக்குத் தண்ணளியே. (கூ௫)

## தனித்துழி யிறைவி துனித் தழுதிரங்கல்.

(இ-ள்) தலைவி தலைவனைப் பிரிந்து தனித்த இடத்துத் துன்பமுற்று அழுது வருந்துதல்.

வென்றாலுஞ் சூலத்தர் நெல்லையஞ் சாரலில் வீசுதென்றற்
கன்றாலுங் கூவுங் கருங்குயி லாலுங் கனல்கொளுத்தி
நின்றாலும் வெள்ளை நெடுநில வாலு நினைக்கினமக்
கொன்றாலு நன்றல்ல வேயன்பர் வாய்மையு மொன்றலவே. (கூ௬)

## பாலனைப் பழித்தல்போலப் பயோதரங்களைப் பழித்தல்.

(இ-ள்) தலைவி தன் மைந்தனை நிந்தித்தல்போலத் தன் கொங்கைகளை நிந்தித்துக் கூறுதல்.

---

(கூ௩) மழுவார் - மழுவா யுதத்தையுடையவர். (கூ௪) விடம்சூல்கொளும்-நஞ்சுமிகுந்திருக்கும். தடம்-பெருமையாகிய. வங்கமே-கப்பலே. சூல்கொளும்-பருக்கும். (கூ௫) தொழுவோர்-தொழப்படுவோர். வலைசூழ்ந்தாலும்-வலைவீசினாலும். முத்து - முத்துக்காக. ஆழ்ந்தாலும் - நீருட் குளித்தாலும். உணங்கி -வாடி. (கூ௬) ஆலும் - அசையும். தென்றற்கன்று - இளந்தென்றல்.

வேனலந் தோயுங் கரத்தால் வருட விடிந்துமந்தக்
கானலந் தோயுமக் காலமன் றேசிலை கால்குனித்த
கூனலந் திங்கட் சடையாளர் நெல்லைக் கொழுநருக்குப்
பானலந் தோய்முலை கிராளுங்க ளோடென்ன பற்றுறவே. (௯௭)

### வேழம் வினவிய தலைவனைப் பாங்கி நகுதல்.

(இ-ள்) என்னு லெய்யப்பட்ட யானை வந்ததோவென்று கேட்ட தலைவனைப் பாங்கி நகையாடித் தலைவியுடன் சொல்லுதல். நகையாடல் - சிரித்தல்.

வைவேலை நெடுங்கண்ணி பங்காளர் நெல்லையில் வாவியிற்பூக்
கொய்வேலை செய்யுங் கொடியிடை யாய்குஞ் சரங்குழைகொண்
டெய்வேலை யாள ரிவர்க்கிமைப் போதினி லெய்யவில்லுங்
கைவேலும் வாளும்பெற் றிலன்செ யாரக் களிற்றினையே. (௯௮)

### வாழ்த்து.

(இ-ள்) வெளிப்படை.

வெளவிய செவ்வி வடிவுடை யாடன் மகிழ்ச்சியன்பும்
வெளவிய சங்கமு மங்கல நாணு மணிக்குழையும்
வெளவிய கோலத்தர் வேயீன்ற முத்தர் மணிவரையின்
வெளவிய காதலர் நெல்லையும் வாழி வளஞ்சிறந்தே. (௯௯)

### பாட்டுத் தொகை.

(இ-ள்) இந்நூலாசிரியர் பாடிய பாடலின் எண்.

கண்ணூறு பத்மத் தரியயன் போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறுஞ் சொல்வருக் கக்கோவை தன்னைப் பரிவுடனே
வெண்ணூ லணியம்பி காபதி வீரையில் வேதியன்சொல்
தொண்ணூறு மெட்டும் படிப்பார்க்கெந் நாளுஞ் சுகமுண்டுமே. ()

இக்கவியில் கோவையின் பாடற்றொகை தொண்ணூற்றெட்டெனக் கூறி யிருத்தலால் தகர வருக்கத்திற் கூறிய (தொடை கிடைக்கும்) தொலைப்புரம் என்னும் செய்யுட்களி லொன்று பிறர் பாடலெனத் தோன்றுகின்றது.

## நெல்லை வருக்கக் கோவை முற்றிற்று.

வேயீன்ற முத்தர் துணை.

---

(௯௭) வருட - தடவ. கானலந்தோயும் - காலினலத்தை (அக்கைகள்) பிடித்துக் கொண்டிருக்கும். குனித்த கூனல் - வளைந்த வளைவு. பானலம் - பாலினழகு. (௯௮) வை - கூர்மை. குழை - மாந்தழை. அக்களிற்றினை - அந்த யானையை. (௯௯) வெளவிய - பற்றிய. (௧௦௦) கண் - கண்ணாகிய. நூறுபத்மம் - நூறிதழ்த் தாமரை[illegible]